
# பறிகொடுத்த பின்பும் வாழத்துடிப்பவர்கள்



பொலிகை ஜெயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L15413

L
894.8113
ஜெயா.

# பறி கொடுத்த பின்னும் வாழத்துடிப்பவர்கள்

பொலிகை ஜெயா

ஜீவநதி வெளியீடு

2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறிகொடுத்த பின்பும் வாழத்துடிப்பவர்கள்
(சிறுகதைத்தொகுதி)

ஆசிரியர் : பொலிகை ஜெயா

முதற் பதிப்பு : மார்ச் 2016

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு : ஜீவநதி, கலைஅகம், அல்வாய்

தொடர்புகளுக்கு : P.Jeyakody (பொலிகை ஜெயா)

Flur weg 12

2504.Biel/Bienne

Switzerland.

பக்கம் : 124

விலை : 300/-

அச்சு : பரணீ அச்சகம், நெல்லியடி

ISBN : 978-955-4676-40-4

ஜீவநதி வெளியீடு - 57



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

ஈழத்தமிழர்களின் புலம்பெயர்வுக்கு பின், தமிழ் இலக்கியம் விசாலிப்புக்கு உட்படுத்தப்படுவதோடு! அதன் கட்டமைப்பிலும், கருத்தியலிலும் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். அத்தகைய இலக்கியங்கள் ஈழமக்களின் கொதிநிலை வாழ்வியலை புடம் போட்டு காட்டத்தவறவில்லை. தாய் நிலத்தில் உள்ளவர்களை யும், அதற்கு வெளியே பல்வேறு நாடுகளின் தளத்தில் வாழ்பவர்களையும் இணைத்து செல்லும் இலக்கிய பாலமாக புலம்பெயர் இலக்கியங்கள் விளங்குகின்றன.

தமிழ் இலக்கிய உலகத்தினரால் பொலிகை – ஜெயா என அறியப்படுகின்ற திரு.பன்னிருகரம் ஜெயக்கொடி அவர்களுடைய நட்பு சுவிஸில் நடைபெறுகின்ற இலக்கிய சந்திப்புக்கள் ஊடாகவே எனக்கு கிடைத்தது. மேலும் அது தொலைத்தொடர்புகள் மூலமாக ஆழ மாக்கப்பட்டு, அகல மாக்கப்பட்டு இலக்கிய பண்டமாற்று முறையினால் மேலும் வலுப்பெற்று வருகிறது. அத்தகைய சந்திப்புக்கள், உரையாடல்கள் என்பன நூலாசிரியரின் இலக்கிய புலமை, இலக்கியம் சார் பன்முக ஆற்றல்,சமூக நோக்கு என்பன வற்றை எடைபோட்டு கண்டறிய எனக்கு உதவியிருக்கிறது.

புலம்பெயர்ந்தவர்கள் இழந்து விட்ட தாய்நில வாழ்வியலை நினைத்து ஏங்கி துன்புறுவதும், புதிதாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுந்திட்டவாழ்வியலில் இன்புற்று, துன்புறுவதும் இயல்பாய் இடம்பெறும் நிகழ்வாயினும் அவற்றை கலை நயம் மிக்க இலக்கியமாக்கி அடுத்தவர்களின் காண்பியலுக்கு உட்படுத்தும் முயற்சி பாராட்டப்பட வேண்டியதாகும்.

தாய்நில மக்கள் சகலதையும் பறி கொடுத்து, மன வலியை பெற்று வேதனை, துன்பத்துடன் வாழுகின்றார்கள். அதேபோன்று தாய் நிலவாழ்வை பறிகொடுத்த நூலாசிரியர், புகுந்த நிலத்திலும் தமக்கான நேரங்களை அதிகளவில் இயந்திரங்களிடத்தில் பறிகொடுத்து நிற்கின்றார். மேலும் இந்த பறிகொடுத்தல்களின் எதிர் விளைவே "பறிகொடுத்தபின்பும் வாழத்துடிப்பவர்கள்" என்ற நூலாக்க முயற்சியாகும். இந்நூல் தாயக மக்களின் வாழ்வியல் வேதனைகளை சொல்லும். அவர்களின் மகிழ்நிலையை முகுழ்விக்கும் புலம்பெயர் தேசத்து கனவியல் வாழ்வை எடுத்துக்கூறும். பனிபடர்ந்த தேசத்தில் கால் நடந்த பாதையின் கதையை கண்ணீரோடு குழைத்து கூறும் என்பதனை சிறு கதைக்கான தலைப்புக்களே எடுத்துக்காட்டுகின்றன.

நூலாசிரியர் கடந்த 50 ஆண்டுகால வாழ்வியல் அனுபவங்களும்,இலக்கிய தேடல்களும் இன்று பொலிகை-ஜெயாவை சிறுகதை நூல் ஆசிரியராக உலகுக்கு வெளிக் காட்டியிருக்கிறது.

நூலாசிரியரின் சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், இலங்கை,இந்திய மற்றும் ஐரோப்பிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. சுவிற்சலாந்து,ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் நூலாசிரியரின் இலக்கியப்பயணகள் தொடர்ந்த வண்ணம்உள்ளன.

கவிப்படைப்புக்கள், மேடைப்பேச்சுக்கள், பட்டிமன்ற வாதப்பிரதிவாதங்கள், நூல் விமர்சனகள், வானொலிப் பேச்சுக்கள், உலகத்தமிழர் பண்பாட்டு இயக்க மாநாடுகளில் பங்கு கொண்டு ஆய்வுக்கட்டுரைகளை வழங்கல், ஆய்வுரை யாற்றுதல் என பல்வேறு தளங்களினூடாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை, இலக்கிய படைப்புக்கள் வெளிப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.

எடுத்துக்கொண்ட பொருளை ஒளிவு மறைவின்றி அப்பட்டமாக சொல்லுதல், இவரது இலக்கிய படைப்புக்களுக் கான தனிச்சிறப் பம்சமாகும். நேரிடையான இத்தகை முயற்சிகள் எதிரிடையாளர்களை ஊக்குவிக்கும் என்பதனை அவர் அறிந்திருந்தாலும், உண்மையை உரக்க சொல்லுதல், பொய்மைக்கு அடிபணியாமை, விமர்சனங்களுக்கு அஞ்சாமை என்பன இவரது சிறுகதைகளுக்கு உரமூட்டுவனமாக அமைந்திருக்கின்றன.

தாயகம், மற்றும் புலம்பெயர் தேசங்களை களங்களாக கொண்டுள்ள இச்சிறுகதை நூல், வாசிப்பவர் மனங்களை ஜோசிக்கத்தூண்டும். அத்துடன் பகுத்தறிதல், தொகுத்தறிதல், கிளர்ந்தெழுதல் ஆகிய உளநிலைத்திறன்களை விருத்தி செய்யும் என்பது எனது நம்பிக்கையாகும்.

நூலாசிரியரின் "பறிகொடுத்தபின்பும் வாழத் துடிப்பவர்கள்" என்ற இச்சிறுகதை நூல், தமிழ் இலக்கிய உலகத்தினரால் போற்றி பாதுகாக்கப்படும். இத்தகைய சிறந்த நூலுக்கு, வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

-நன்றி-

க. அருந்தவராஜா. M.ED
தலைவர்
ஜெனீவா கலை இலக்கிய பேரவை
சுவிற்ஸலாந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

## அநீதிக்கெதிராகக் குரல் கொடுக்கும் பொலிகை ஜெயாவின் கதைகள்

கதை சொல்லும் மரபு நீண்ட கால வரலாற்றை உடையது. மனிதர் கூட்டமாக வாழத்தொடங்கிய காலம் முதல் தமது அனுபவங்களைக் கதைகளாகச் சொல்ல முயன்றனர். அங்க அசைவுகளுடன், சைகைகளுடன் ஆரம்பித்த "கதை சொல்லல்" மொழியின் பிரயோகத்துடன் வீச்சுக் கொண்டது. பேச்சுமொழியும் அதனைத் தொடர்ந்த எழுத்து மொழியும் பல இலக்கியங்களை மனித குலத்துக்கு வழங்கின.

கர்ணபரம்பரைக் கதைகளாக, தலைமுறை தலைமுறை யாகக் கடத்தப்பட்டு வந்த கதைகள், அச்சுயந்திரத்தின் கண்டு பிடிப்போடு பரவலாக்கமடைந்தன. இன, மத, நிற பாகுபாடுகளுக்கு மத்தியிலும் மனித குலத்துக்கான பொது நீதி ஒன்றை இக்கதைகள் எடுத்துரைத்தன. இப்பொது நீதிக்கெதிராக அடக்குமுறைகளையும் அட்டூழியங்களையும் இக்கதைகள் பதிவு செய்தன. அவ்வப்போது இந்த அடக்குமுறைகளுக்கும் அட்டூழி யங்களுக்கும் எதிராகக் கிளர்ந்தெழுந்த உணர்வுச் சுழிப்புகளை யும் போராட்ட வரலாற்றையும் கூட இக்கதைகள் பதிவு செய்தன. ஆனாலும் சாதி, மத, இன, நிற வேறுபாடுகளும் அவற்றின் காரணமான அக்கிரமங்களும் இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இவற்றுக்கெதிரான எதிர்ப்புக்குரல்களும் கதை களாக, கவிதைகளாக, இலக்கியங்களாக ஒலித்துக் கொண்டிருக் கின்றன.

இப்பின்னணியிலே தான் பொலிகை ஜெயாவின் "பறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்த பின்பும் வாழத்துடிப்பவர்கள்" என்ற சிறுகதைத் தொகுதியை நோக்க வேண்டியுள்ளது. இதிலுள்ள கதைகள் அனைத்துமே மனித வாழ்வு எதிர்கொள்ளும் அவல நிலைமை களையும் இனவேறுபாடு காரணமாக இலங்கையில் ஏற்பட்ட யுத்த அனர்த்த சூழலுடன் கூடிய பரிதாபமான வாழ்வியலையும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் கூட நிறவேறுபாடு மேலோங்கி கறுப்பர்கள் புறக்கணிக்கப்படும் சந்தர்ப்பங்களையும் பொலிகை ஜெயா ஓர்மத்தோடு தமது கதைகளில் எடுத்துரைத்துள்ளார்.

இவ்வாறு அநீதிக்கெதிராகக் குரல்கொடுக்கும் பொலிகை ஜெயா இன, மத, நிற வெறியாளர்களுக்கு மத்தியில் நல்ல மனிதர்களும் வாழந்து கொண்டுதான் இருக்கிறார்களென தமது கதைகள் மூலம் உணர்த்துகிறார். இந்த நல்ல மனிதர்கள் வகைமாதிரிகளாகக் கொள்ளப்பட முடியாதவர்களெனினும், ஏழை ஊமைப்பெண்ணை சீதனமின்றி திருமணம் செய்ய முன்வரும் வாலிபன், இனப்பிரச்சினை காரணமான யுத்தத்தி னால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த தமிழ்க்குடும்பத்திற்கு தமது வீட்டிலேயே இடம் தர முன் வரும் சிங்களத் தம்பதியர் போன்ற பாத்திரங்கள் மூலம் தாம் காண விரும்பும் இலட்சிய உலகை நேர் மனப்பாங்குடன் பொலிகை ஜெயா சித்திரித்துள்ளார்.

இன்று, "கதைசொல்லல்" என்பதற்கும் அப்பால், சிறுகதை, நாவல் போன்ற இலக்கிய வடிவங்கள் நன்கு வரையறை செய்யப்பட்டுள்ளன. உலகின் முதலாவது சிறுகதையைத் தந்த "அலன் போ", சிறுகதைகளில் ஒரு சீர்த்தன்மை(Unified effect), முடிவிலுள்ள திருப்பம்(Twist) ஆகியவற்றை வலியுறுத்தினார். எடுத்துக்கொண்ட மையக் கருவுக்கு அமைவாக சிறுகதையி லுள்ள பாத்திரங்களையும் நிகழ்வுகளையும் நகர்த்த வேண்டும் என்பதை "ஒரு சீர்த்தன்மை" என்பதாலும், சிறுகதையின் முடிப்பு ஒரு மனித யதார்த்தத்தை வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டும் என்பதை "முடிவிலுள்ள திருப்பம்" என்பதாலும் "அலன் போ" விளக்கினார்.

பொலிகை ஜெயா கதை சொல்வதில் வல்லவராகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளார். நிறைந்த செய்திகளையும் உலக நடப்புகளையும் இவரது கதைகளில் தரிசிக்க முடிகிறது. சில இடங்களில் இவரது அறிகைப்புலவீச்சுக் குறித்து (Span of cognition) மலைப்பும் எழுகிறது. ஆனாலும், சிறுகதையின் "செட்டான" அமைப்புக் குறித்து சிறிது கவனம் செலுத்துவாரேயாயின் இவர் இன்னும் பல நல்ல படைப்புக்களைத் தர முடியும். இந்த நம்பிக்கை வெறும் வார்த்தைகளுக்குரியதன்று.

வாழ்த்துக்களுடன்,
கலாநிதி த.கலாமணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

"கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்கு தக"

சுவிஸில் புரியாத மொழி, புதிய முகங்கள், வித்தியாசமான கலாசார பண்பாடு ஆகியனவற்றுள் சிக்குண்டு; ஆடம்பர மோகத்துள், முகமூடி அணிந்த போலி வாழ்வுக்குள் உள்வாங்கப் பட்டு, தாய்நிலம், உறவுகளை தொலைத்து, இன்பத்தை தூர விலக்கி, பணம் என்ற குறிக்கோளை முன்னிறுத்தி வாழ்ந்தாலும், நான் அனுபவித்த துன்பங்கள், என்னைப்போல பல ஏழை மக்களின் வறுமை நிலை, உதவா போரின் கொடுமை, அகதி வாழ்வு, எம் இனிய கண்மணிகளின் வன்புணர்வு, இழப்புக்களின் மன வலிகள்; அத்தனையும் என் மன உணர்வுடன் முட்டி மோதி வெடித்தபோது உருவாக்கம் பெற்றதே இந்த 10 சிறுகதைகளின் தொகுப்பு.

எம் மண்ணில் கழித்திட்ட பசுமையான நினைவுகள், சிட்டுக்களாய் சிறகடித்த காதல், வறுமை வாழ்வை வறுத்தெடுப்ப தால் ஏழைகள் கல்வி கற்க முடியாத நிலை, உறை பனிக்குள் சிக்குண்டு உறைந்து உருகி உழைக்கும் பணத்தை நிலத்தில் பொய் அடுக்கி கறந்து ஊதாரித்தனமாக விரயம் செய்தல், மேலும் வலிதாங்கிய வடுக்கள், மண் மீதுள்ள நேசம், ஏழைத் தொழிலாளியின் அவலம், போர் தீயாக எரிந்து தின்று தீர்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்களின் இழப்பின் வலி ஆகியன இச்சிறு கதைகளின் பேசும் பொருள் ஆகிறது.

உதவாப்போர் அநியாயமாக கொன்றொழித்த உறவு களின் இழப்பின் பின்பும் வாழும் உயிருக்காய் நடைப்பிணமாய் வாழத்துடிப்பவர்களின் வேதனை, சோகம், வலிகள், படும் அவஸ்த்தை,முகம் கொடுக்கும் பிரச்சனைகளை முன்னி றுத்தியே, மூபறிகொடுத்தபின்பும் வாழத்துடிப்பவர்கள்; என்ற தலைப்பை இத்தொகுப்பிற்கு சூட்டியுள்ளேன்.

பத்திரிக்கை, சஞ்சிகை, இணையம் ஆகியனவற்றில் உதிரிகளாய் வெளியாகி, அன்பு வாசகர்களால் தட்டிகொடுத்த ஒவ்வொன்றையும் இந்நூலில் அடக்கி உங்களிடம் என் முதல் குழந்தையை ஒப்படைக்கின்றேன்.

இக்குழந்தையின் புன்னகை, அழுகை, அழகு ஆகியன வற்றில் நீங்கள் கண்டிடும் விடயங்களை "விமர்சனங்களாக" கொட்டி விடுங்கள். இதை நான் எழும்பி நடப்பதற்கான தள்ளு வண்டிலாக கருதுகிறேன்.

என் சிறுகதைகளுக்கு அணிந்துரை வழங்கிய கலாநிதி திரு.கலாமணி அவர்களுக்கும், வாழ்த்துரையும், கதைகள் சார்பான ஆலோசனைகளையும் தந்திட்ட ஜெனீவா திரு.க.அருந்தவராஜா M.ED அவர்களுக்கும், பின்னட்டை வரைபையும், என்னை எழுத தூண்டிய Dr.கல்லாறு சதீஸ் அவர்களுக்கும், முன்னட்டை படத்தை தந்துதவிய இணையத் துக்கும், என் கதைகளை பிழை திருத்தம் செய்த என் இல்லாள் தெய்வநாயகி அவர்களுக்கும், என் இலக்கியப்பணிக்கு சகல விதத்திலும் சிறப்பான ஆலோசனை தந்து உந்து சக்தியாக விளங்கியவர்களான கனடா திரு க.நவரட்ணம் (நவம்) M.A அவர்களுக்கும், சுவிஸ் திரு.பு.வையாபுரி அவர்களுக்கும், திரு.செ.மூர்த்தி (B.com.Hons) அவர்களுக்கும், என் ஆக்கங்களை பிரசுரித்து உதவிட்ட அத்தனை ஊடகங்களுக்கும், மிகச்சிறப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சு பதிவிட்டு நூலாக ஆக்கி தந்த ஜீவநதி ஆசிரியர் திரு.க.பரணீதரன் அவர்களுக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக என் இனிய வாசகர்களுக்கும் என் இதய பூர்வமான நன்றிகள்.


P.Jeyakody

(பொலிகை ஜெயா)

Flur weg 12

2504.Biel/Bienne

Switzerland.

Te: 0041 32 323 95 71

Ha: 0041 78 927 47 95




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. விடிவை நோக்கிய பயணத்தில் வலிதாங்கிய வடுக்கள்

2. வேற்றாரின் கோரத்தாண்டவம்

3. மகிழ்ச்சியின் எல்லை வானம் வரை

4. பறிகொடுத்த பின்பும் வாழத்துடிப்பவர்கள்

5. தூர தேச தொலைபேசி அழைப்பு

6. காலத்தால் செய்த நன்றி

7. எதிர்பார்ப்புக்கள்

8. வாய்க்கு எட்டா மீன் குழம்பு

9. மண்ணின் மீது நேசம்

10. சுகந்திர சீரழிவு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவை நோக்கிய பயணத்தில் வலிதாங்கிய வடுக்கள்

மார்கழி மாதம். வெண்பனி இரத்த நாளம், நாடிகளை உறைய செய்யும் அளவுக்கு சைபர் பாகைக்கு கீழ் இறங்கிய வெப்ப நிலையில் தெருவெல்லாம் கொட்டி கிடந்தது, இங்குள்ள பெண்களைப்போல அழகாக.

கடுமை காட்டும் குளிரில் தூக்கத்தை கலைத்து எழும்ப மனமில்லாது வேலை என்ற நோக்கில் படுக்கையில் இருந்தபடி போர்வையை விலக்கி சாளரத்தினூடாக வெளியில் பார்வையை செலுத்திய போது! சாளர கண்ணாடி வெளி உலகை தன்னுள் முக்காடு போட்டு மறைத்து, புகை மண்டலமாக காட்சி கொடுத்ததோடு; மந்தாரமாக அவன் கண்களுக்கும் வெளிக்காட்சிகளை பார்க்க விடாது தடுத்து நின்றது.

வேலை ஆரம்பிக்க இன்னும் 45 நிமிடங்கள் மட்டுமே உண்டு. அதற்குள் படுக்கை விட்டு எழும்பி காலைக்கடன் முடித்து, மிக துப்பரவாக முழுநிலவு போன்று முகசவரம் செய்து, கசங்காத உடுப்பணிந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூ பொலிஸ் செய்து வேலைக்கு புறப்பட வேண்டும். எல்லா ஆயத்தங்களையும் இயந்திரம் போலவே வேகமாக முடிக்க வேண்டிய நிலையில் பரபரப்புடன் காணப்பட்டான், அஜித்.

உணவு விடுதியில் சர்வராக பணிபுரிபவர் முகம், உடல், உடுப்பை மிகமிக அழகுறவும், துப்பரவாகவும், கவர்சியாகவும் இருக்கும்படி பார்த்து நடப்பது சுவிஸ் நாட்டில் மிகமிக கட்டாயமான விடயமாகும்.

வெள்ளையர்களுக்கு தெருவில் தொடங்கி கழிவறை வரை மிகவும் துப்பரவாகவும், அழகு நிறைந்ததாகவும் இருத்தல் வேண்டும். பொதுவாக கூறின் "துப்பரவே அவர்களது முதல் தாரக மந்திரம்" எனலாம். நேரத்திற்கு மதிப்பு கொடுத்து காரியம் ஆற்றுவதில் வல்லவர்கள். "தவற விட்ட நேரத்தை போன உயிர்போல" மீட்டெடுக்க முடியாது என கருதுவார்கள். இதனால் நேரத்தை கருத்தில் எடுத்து காரியம் ஆற்றுவதில் முன்னோடிகள். மேலும் திட்டமிட்டு செயற்படுவதில் வல்லவர்கள்.

இதனால் தான் என்னவோ நாம் எப்படித்தான் உலகம் கைக்கொள்ளாத பஞ்சஷீல கொள்கைகள், வேதங்கள், இதிகாசங்களை கடைப்பிடித்தாலும் எம்மை விட பலமடங்கு விஞ்ஞானம், தொழில் நுட்பம், பொருளாதாரம் போன்றன வற்றில் முன்னேறி அந்தரத்தில் தொங்கும் வானத்து அழகுமிக்க மின்னிடும் நட்சத்திரங்களை தொட்டு நிற்கிறார்கள்.

அஜித் வெளியில் போகும்போது! பனிமழை வானத்தி லிருந்து காற்றின் தூறலில் சிக்குண்டு சிறிது அள்ளுப்பட்டு சரிந்த நிலையில் சிறு சிறு குண்டு மணிகள் போல சிதறுண்டு நிலத்தில் பட்டு தெறித்து வெள்ளை மண் குவியல் போல காணப்பட்டது.

நிலத்தில் கால் பதித்த போது! ஐந்து அங்குலம் அளவுக்கு சப்பாத்து பனியினுள் புதைந்தது. அவனது காதுகள் ஈட்டி முனையால் குத்தியது போல விறைக்க ஆரம்பித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையுறை அணிந்த படியால் அவனது கைகள் விறைக்காது தப்பித்து கொண்டன.

அவன் தனது வேலைக்கு வழமையாக காறிலே சென்று திரும்புவான். காறில் பயணம் செய்வதாக இருந்தால் அவனுக்கு பதினைந்து நிமிடங்கள் போதுமானது. இன்று வீதியெங்கும் பனியால் மூடப்பட்டுள்ளது. காறில் செல்வது ஆபத்தான காரியம். அத்தோடு காறுக்கு பனிக்காலத்தில் பாதுகாப்புக்காக மாட்டும் "வின்ரர் ரயர்" இன்னும் மாட்டவில்லை. வின்ரர் ரயர் இல்லாது ஓடினால் வழுக்கி விபத்து ஏற்படுவதோடு, போலீசில் மாட்டுப்பட்டால் தண்டம் வேறு செலுத்த வேண்டும். பஸ்ஸில் செல்வதுதான் பாதுகாப்பானது என்ற முடிவுடன் பஸ்ஸை பிடிக்க நடை பழகும் மழலை போன்று மெதுவாக அடி யெடுத்து வைத்து நடந்து சென்றான்.

இந்த கடும்பனிக்குள்ளும் இரு சுவிஸ் நாட்டு சிறுவர்கள் பாடசாலை செல்லும் போது; தலைக்கு தொப்பி, கைக்கு கையுறை இன்றி கொட்டும் பனியில் நனைந்த படி பனியை அள்ளி பந்து போல உருண்டை ஆக்கி ஒருவர் மீது ஒருவர் எறிந்து விளையாடும் காட்சியை பார்த்து அதிசயித்தான் அஜித்.

சுவிஸ் நாட்டு பிள்ளைகளுக்கு பனி என்றால் ஒரே குதூகலம். குளிர் விட்டு அல்வா உண்பது போன்ற ஓர் ஆனந்தம். எம்மவருக்கு பனி, குளிர் என்றால் வெறுப்பு என மனதில் எண்ணியபடி பஸ் நிலையத்தை அடைந்தான்.

தத்தம் அலுவல்களுக்கு சென்றிட பஸ்சுக்கு என்று மில்லாத கூட்டம் காத்து நின்றது. ஐரோப்பாவில் கடும் பனி மழை பொழிந்திட்டால், பாதுகாப்புக்காக தத்தம் வாகனங் களை தவிர்த்து பஸ்ஸிலேயே பயணம் மேற்கொள்வர்.

பஸ் வந்ததும் அஜித் ஒருவாறு உள்ளே ஏறி அமர்ந்து கொண்டாலும் அவனுக்கு இருப்பு கொள்ளவில்லை. வேலைக்கு நேரம் பிந்த போகிறது என தனது கடிகாரத்தை பார்ப்பதும் பஸ் எந்த இடத்தில் செல்கிறது என்பதை அறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் பார்ப்பதுமாய் நிலையற்று குழம்பி காணப் பட்டான்.

பஸ் கண்ணாடி மீது சிதறல்களாக விழுந்த பனித் துளிகள் வெண் கீறல்களாக வழிந்தோடி, வெளி உலகத்தை தன்னுள் அடக்கியது. அவன் இறங்க வேண்டிய இடத்தை இயற்கை அவனுக்கு காட்டிட விரும்பவில்லை. இருந்த போதும் பஸ்ஸின் உள்ளே உள்ள ஓடும் திரை பயணிகள் இறங்க வேண்டிய இடங்களை அடிக்கடி பறைசாற்றி மறைந்த வண்ணம் தம் கடமையில் கண்ணாய் இருந்தது.

பஸ்ஸால் இறங்கி பனிச்சறுக்கலாக இருந்தாலும் முடிந்த வரை வேகமாக காலை அகட்டி வைத்து நடந்து தனது வேலைத்தலத்தை பத்து நிமிடங்கள் பிந்தி அடைந்தான். அவசர அவசரமாக தனது பாதுகாப்பு லாச்சிக்குள் தனது சர்வருக்கான காசுப்பையை எடுத்து இடுப்பில் கட்டி, அதற்குள் பண பேர்சை வைத்து அன்றைய வாடிக்கையாளர் உணவு உண்பதற்காக பதிவுசெய்யும் இடாப்பை எடுத்து பார்க்கும்போது! அவனது முதலாளி வந்தான். முதலாளியை கண்டதும் "Guten morgen" என காலை வணக்கம் சொன்னபோது, அவன் பதிலுக்கு வணக்கம் கூறிய போதும் வழமையாக கேட்கும் கேள்வியான "Wie gehts" எப்படி நலமா? என கேளாது ஏன் வேலைக்கு பிந்தி வந்தாய் என கேட்டான்?

முதலாளியின் முகபாவனையை புரிந்திட்ட அஜித், "Entchuldigung chef" மன்னித்து கொள்ளுங்கோ ஐயா. கடுமையான பனி. அதனால் நான் எனது காறில் வரவில்லை. "Bus" மூலம் வந்தேன் என பதில் சொன்னான். "உனக்கு மட்டுமா பனி? எனக்கும் தானே" நான் குறித்த நேரத்துக்கு வரவில்லையா? என கேட்டான் முதலாளி.

அவன் வேலை செய்யும் உணவகத்தில் ஏழுபேர் பணி புரிகிறார்கள். அவர்களில் இவன் ஒருவனே வெளிநாட்டை சேர்ந்த கருப்பு தோலை உடைய ஒருவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலரும் ஒரே வேலை செய்பவர்கள். ஆனால் அஜித் வெளிநாட்டவன் என்பதால் சம்பளத்தில் கூட ஏற்றத்தாழ்வு காணப்பட்டது. அஜித் கடின உழைப்பாளி. இருந்த போதும் அவனது சம்பளம், கூடி வேலை செய்பவர்களை விடவும் குறைவானதே.

ஏற்றத்தாழ்வுகள், பாகுபாடுகள், வலதுசாரி பிடிப்பு கொள்கையை முன்னிலை படுத்தி பார்க்கும் முதலாளிகள் போன்ற செயற்பாடுகள்; பண்பை வெளிப்படுத்தும் வெள்ளையர்களிடமும் அதிகம் காணப்படுகிறது. வெள்ளையர்களுக்கு வெள்ளை மனது என்பதெல்லாம் தொழிலாளி, முதலாளி என்ற நிலை வரும்போது, அது இறக்கை முளைத்து காற்றை கிழித்து பறந்து போய் விடுகிறது.

ஐயா, "அப்படியானால் இன்று பதினைந்து நிமிடங்கள் பிந்தி எனது வேலையை முடிக்கிறேன்" என தனது முதலாளிக்கு பரிதாபமாக கூறிய வேளை; அவன் "Nein nein" "இல்லை இல்லை" நீ குறித்த நேரத்தில் உனது வேலையை முடித்தால் போதும்" என காட்டமாக பதில் சொன்னான்.

அன்றைய தினம் அவனுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் அவசர அவசரமாக மேசைகளை ஈரமான துணியால் துடைத்து, மதிய போசனத்துக்கான துணி விரித்து, அதற்கு மேல் உணவு கோப்பை வைத்து, உண்ணும் போது! வாய் துடைத்திடும் அழகிய பேப்பர் வைத்து, கத்தி முள்ளுக்கரண்டி ஆகியவற்றை முறையாக கத்தியை இருக்கையின் வலது பக்கமும், முள்ளுக்கரண்டியை இடது பக்கமும் வைத்து மது, நீர் அருந்துவதற்குரிய கிளாசுகளை பேப்பரின் வலது மேற்பக்க மூலையில் வைத்து, மேசையின் நடுவில் புகைத்தலுக்கான சாம்பல் தட்டும் அழகாக வைத்த பின்னர் இறுதியில் அன்றைய மதிய போசனத்துக்குரிய மெனு காட்டையும் உரிய இடத்தில் வைத்து மதியபோசனம் வழங்க தயாரானான்.

இன்றைய பொழுதில் தனது பக்க மேசைகளில் அதிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனம் வந்து உட்காரக்கூடாது என அவனது உள் மனம் எண்ணிக்கொண்டது. அவனது நினைப்புக்கு மாறாக அவனது பக்கம் வாடிக்கையாளர்கள் கூட்டம் கூட்டமாக, சோடி சோடியாக, தனித்தனியாக யாழைவிட்டு சனம் வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்ற காட்சி போன்று ஒருவர் பின் ஒருவராக வந்து அமர்ந்தனர்.

மழை பெய்தாலோ அல்லது பனி கொட்டினாலோ அஜித் வேலை செய்யும் உணவகம் சந்நிதி முருகன் திருவிழா போலவே சனத்தால் முட்டி மோதும். இன்றும் அதே நிலைதான்.

உணவகத்திற்கு உணவு உண்ண வருபவர்கள் வெவ்வேறு மொழிகளில் பேசுவார்கள். "டொச்" மொழி என்னும் போது! "பேர்ண் டொச், சுவிஸ் டொச், வலே டொச், கொக்டொச் எனவும், பிரெஞ்ச் மொழியில் பேசுபவர்கள் உச்சரிப்பில் வித்தியாசம் காட்டுவார்கள். ஆங்கிலம் பேசுபவர்கள், அமெரிக்கன், லண்டன் உச்சரிப்புக்களில் பேசி தமக்கான உணவுகளை ஓடர் செய்வார்கள்." இப்படியான வெவ்வேறு மொழிகளின் வேறுபாட்டை சிலவேளை புரிந்து கொள்வது பெரும் சிரமமாக இருக்கும் அவனுக்கு.

இன்று மனநிலை சரியற்ற நிலையிலும் மொழிப் பிரச்சனை மேலும் அவனை குழப்பியது. ஆனாலும் சுறுசுறுப் பாக தனது வேலையை கவனித்தான். அதிக மேசைகளுக்கு ஒரே தடவையில் ஓடரை எடுத்து தனது கணணியின் மூலம் குசினிக்கு அவைகளை அனுப்புவதும், திரும்ப வேறு மேசை களில் ஓடர் எடுப்பதும், குடிவகைகளை கொண்டு சென்று மேசை மேசையாக கொடுப்பதுமாக பம்பரம் போன்று சுழன்றான்.

வாடிக்கையாளர்கள் தமது மதிய இடைவேளை நேரத்துள் உணவை உண்டு குறித்த நேரத்தில் தமது பணிகளை தொடங்க வேண்டும். அதனால் மதியம் 12 ல் இருந்து பி.ப - 2 மணிவரை உணவகத்தில் பணிபுரிபவர்கள் கால்களில் சுழலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில்லு பூட்டி வேலை பார்ப்பதுபோல சுழண்டு சுழண்டு வேலை பார்ப்பார்கள். எவரும் ஆறுதலாக வேலை பார்க்க முடியாது. அதிலும் சர்வர் காற்றோடு காற்றாக வேகம் காட்டுவார்கள்.

"அவசரத்தில் ஒரு மேசைக்கு தவறாக உணவை ஓடர் பண்ணி விட்டான்" அஜித். அந்த மேசைக்கு உணவு வந்த பின்பே தான் விட்ட தவறு அவனுக்கே தெரிய வந்தது.

இப்படி பலரும் தவறுதலாக உணவை ஓடர் செய்வது நடப்பதுதான். இப்படி நடந்தால் முதலாளி தொடங்கி குசினி வரை சினம் கொள்வதும் நடக்கும் காரியம்தான். இன்று முதலாளி கடும் கோபம் கொண்டான். அவனுடன் சேர்ந்து பணிபுரியும் சக வேலையாட்கள் முன்னிலையில் ஏசி கடுமை காட்டினான்.

அஜித், தான் செய்த தவறுக்காக முதலாளியிடமும், வாடிக்கையாளரிடமும் மன்னிப்பு கோரினான். முதலாளியோ எதுவும் காதில் போட்டு கொள்ளாது வாடிக்கையாளரிடம் மன்னிப்பு கோரியதோடு; பணமும் அறவிடாது அவருக்குரிய சரியான உணவை இலவசமாக கொடுத்து தன்வசப்படுத் தினான்.

இப்படியான ஏச்சுக்கள், பரிகாசங்கள் அவனின் இதயத்தில் முள்ளாக குத்தியது. அவனது இதயம் கனத்தது. அவனது நாடி, நரம்புகள் வழமையை மீறி புடைத்து துடித்தன. தான் ஒரு கருப்பன் என்ற அடையாளத்தாலும், பலபேர் மத்தியில் அவமானப்பட்டதாலும் கூனிக்குறுகி வேதனையில் தனக்குள் தவித்தான்.

இப்படி மனப்பாரம் ஏற்படும்போது!; தாய்நாட்டு வாழ்வையும், புலம்பெயர் நாட்டு அகதி முத்திரை நெற்றியில் நிரந்தர சந்தணப்பொட்டு போல பதித்த நிலை வாழ்வையும் ஒப்பீடு செய்து; மனதுள் அழுவான். தண்ணீரில் மீன் அழுதால் அக்கண்ணீர் வழிவதை எவரும் அறிய மாட்டார்கள். இந்த மீனின் அழுகையின் நிலைதான் அஜீத்துக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த நிலத்தில் வாழ்வாதார பிரச்சனை, இன முரண்பாடு, பாதுகாப்பு கெடுபிடி, சாதிப்பாகுபாடு, ஏற்றத்தாழ்வுகள் போன்ற வேதனைகளை விருப்பின்றிய வாழ்வாக கொண்டு வாழ்ந்து அவற்றிலிருந்து தப்பி பிழைக்க முடியும் என்ற நம்பிக்கையில் புலம் பெயர்ந்து மொழி புரியாத நாட்டில் புதிய முகங்களுடன் புதிய வாழ்கை முறைமைக்குள் கலந்தும் "வேதனை, மன உளைச்சல் தொடரத்தான் செய்கிறது."

நன்றி கொண்ட நாய் சமுத்திரத்தில் நீந்தி குளித்தாலும் நீரை நக்கியே குடிக்கும். அதே போலவே அஜீத்துக்கும், மற்றும் பெரும்பாலான புலம்பெயர் தமிழ் மக்களின் வாழ்வியலும் "வேதனை, சோதனை, பிறந்த மண்ணின் மணத்துடன், வலியுடன் நகர்கிறது. தன் குடும்ப மாற்றத்துக்கும், மண்ணின் புலர்வுக்குமாக வலி சுமந்த வேதனை வாழ்வின் செயல் முறைக்குள் செல்ல வேண்டிய கட்டாயம்" அவனுக்கு.

"தனி மனிதனுக்கு உணவில்லை என்றால் ஜெகத்தினை அழித்திடுவோம்." என மரபுக்கவி பாரதி பாடினான். சொந்த நாட்டில் தனி மனிதர்களை பலி எடுப்பவர்களுக்கு; நீதி, விசாரணை, தண்டனைகளுக்கு அப்பால் இனம் பார்த்து பட்டம், பதவி வழங்கி கௌரவம் வேறு! கொடுக்கப்படுகிறது. கொலை செய்தவனை தங்கத்தேரில் வைத்து வீதி எல்லாம் இழுக்கப்படுகிறது.

தாய் நாட்டில் பனம்தோப்பு, தென்னம் கீற்றின் சலசலப்பிலும், பட்சிகள், குருவிகளின் மெல்லிய கீச்சிடும் ஓசையுடன் கூடிய மாமரத்து நிழல்களிலும், அழகிய சிற்பிகள், சோகிகள், கற்கள் நிறைந்த கடற்கரை மணலிலும்; மனைவி, குழந்தைகள், உறவினர்களுடன் கூடி பாசப்பிணைப்பில் கட்டுண்டு கடலில் குளித்து இனிமை ததும்ப வாழ்ந்த வாழ்க்கை!

காலில் செருப்பு அணியாது நடந்தபோது! உடைந்த பீங்கான் காலில் வெட்டி இரத்தம் சிந்தி ஆஸ்பத்திரி சென்ற நினைவுகள், ஆழக்கிணறு பொதுக்கிணறில் காவல் இருந்து முழுப்பனை துலா மூலம் தண்ணீர் இறைத்து குளித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவம், கொற்றை சிவானந்தா விளையாட்டு வெட்டையில் நண்பர்களுடன் கூடி பந்தடித்து பொழுது போக்கிய காலங்கள், செல்ல மகளை நடுவில் தூங்க வைத்து நானும் மனைவியும் படுத்துறங்கிய மனத்திருப்தி, ஆசை கொண்டு இருவரும் அணைத்திட முயன்றபோது! செல்ல மகளின் முனகல் எம் ஆசையை தூர விலக்கிய சம்பவம். இவைகள் அனைத்தும் அடிக்கடி புயலாக அடித்து மழைச்சாரலாக ஓய்ந்த வண்ணமே இருக்கிறது அவன் மனதில்.

வெளிநாட்டில் எவ்வளவு பொன்னை கொட்டி கொடுத்தாலும் தாய் நிலத்தின் நிம்மதி இங்கு துளியும் கிடையாது. இதய நிம்மதி, சந்தோசத்தை தொலைத்து உள்ளம் அமைதியற்று உலாவுகிறது. வலி சுமந்திட்ட கானல் நீர் வாழ்க்கை.

மானிட பண்பு நிறைந்த சொர்க்க பூமியான சுவிஸ் நாட்டில் அகதியாக கால் பதிப்பவர் கால் ஊன்றி மூன்று மாதங்களின் பின்னரே வேலை செய்ய அனுமதி கிடைக்கும். இது சுவிஸ் நாட்டு சட்டம். உலக நாடுகளில் சுவிஸில் சட்டத்துக்கு தலை வணங்கி மக்கள் செயற்படுவர். அச்சட்டம் பாகுபாடற்று இறுக்கமாக கடைப்பிடிக்கப்படும். காரண மின்றி எவர்மீதும் பாயாது.

அவன் மூன்று மாதங்கள் முடிந்ததும் 1500 அடி உயரம் கொண்ட மலை உச்சியில் அமைந்துள்ள "Bellvue Maccolen" என்ற கோட்டல் குசினியில் சாப்பாட்டு கோப்பை கழுவும் வேலை பெற்று விட்டான்.

"காலச்சக்கரத்தின் சுழற்சி மற்றும் இலங்கை இன முரண்பாடு ஒரு சில நல்ல காரியங்களை படிப்பினையாக அல்லது தண்டனையாக பாரம்பரிய பல சாதீய வாதிகளின் பிள்ளைகளுக்கு அல்லது உறவுகளுக்கு அவர்கள் கண் முன்னே காட்டியுள்ளது அல்லது கொடுத்துள்ளது எனலாம்."

சிறுதொகை இனப்பாகுபாடு காட்டிடும் சிங்கள மக்களும் அரசுகளும் தமிழர்கள் தீண்ட தகாதவர்கள் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணத்தில் அவர்களது ஜனநாயக உரிமைகளை கொடுக்காது, பல தரப்பட்ட கொடுமைகளை செய்து தமிழ் மக்கள் "மாக்கள்" போல காலம் காலமாக அடக்கி ஆளுவதோடு, இன்னலையும் கொடுக்கிறார்கள்.

இலங்கையில் தாம் பணம் படைத்தவர், முதிசமுள்ளவர்கள், உயர் தட்டு வர்க்கத்தோர், கௌரவம், பாரம்பரியம் தமக்கு உண்டு என கூறிக்கொண்டு தொழில் சார் வேற்றுமைகளை முன்னிறுத்தி அந்த தொழிலை செய்யும் ஏழைப்பாமர மக்கள் "தம்மை விட கீழானோர், தீண்ட தகாத கீழ் சாதியினர் என்று ஒரு இலவச பல்கலைக்கழக பட்டத்தையும் வழங்கி, ஆலயங்கள், தேநீர் கடைகள் போன்றனவற்றுள் உள்நுழையும் உரிமையை அதிகாரத்தின் மூலம் தடுத்து, இன்னும் மானிடத்திற்கு ஒவ்வாத வீடுகளில் இருந்து துரத்தல், தொழிலை பறித்தல் போன்ற அடக்கி ஆளுமை காட்டல் செயல்களையும் செய்து அம்மக்களை துன்பத்துள் மேட்டுக் குடி மேலாண்மையினால் தள்ளுகிறார்கள்."

"அந்த சிங்கள இனத்துக்கும்,இந்த தமிழ் சாதி வெறி பிடித்த மேட்டு குடி தமிழருக்கும் எந்த வித்தியாசமும் இல்லையே."

தமிழ் மக்களின் வாழ்வுக்கான நியாயமான, நீதியான கோரிக்கைகளை காலம் கால்மாக எம்மை ஆண்டிடும் பெரும்பான்மையுள்ள இலங்கை சிங்கள அரசுகள் தொடர்ந்து உதாசீனம் செய்து வந்ததால்! கொடியவனான அசுரனை அழிப்பதற்காக நாம் வணங்கும் மயிலேறு முருகப்பெருமானே தேவர்களை காப்பதற்காக ஆயுதம் ஏந்தி சூர சங்காரம் செய்தது போன்று, இலங்கை அரசிற்கெதிராக தவிர்க்க முடியாத பட்சத்தில் எம் தமிழ் இளைஞர்கள் கைகளில் ஆயுதம் எடுத்து போராடினார்கள்.

வல்வெட்டித்துறை ஊரணி மக்கள் படிப்பகத்துள் சுமார் இருபத்தைது, முப்பது தமிழ் இளைஞர்களை இலங்கை இராணுவம் கைது செய்து அழைத்து வந்து "படிப்பகத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவை தாழிட்டு அதற்குள் வெடிகுண்டு வைத்து அத்தனை இளைஞர்களையும் கோரமாக கொலை செய்தனர்." இராணுவம் வெறியாட்டம் முடித்து சென்றதும், ஊர் மக்கள் சென்று பார்த்த போது! "அத்தனை இளைஞர்களினது உடல் களும் படுமோசமாக சிதைவுற்று கோரமாக காட்சி கொடுத்தன." ஒரே தாயின் இரு பிள்ளைகள் கூடக் கொல்லப் பட்டனர்.

"சகிக்க முடியா அந்த கோரக்காட்சியை ஊரவர் களைப்போல அஜித்தும் பார்த்து தனக்குள் ஆவேசப்பட்டான், வெதும்பினான்."

இக்கோர காட்சியை பார்த்த அவனால் இரவில் தூங்க முடியவில்லை. அவன் இதய துடிப்பு, இரத்த நாடிகள் ஓடாது நின்று விடுமாப்போல உணர்வு ஏற்பட்டது. கொல்லப்பட்ட அப்பாவி இளைஞர்களும், இரத்த வெறி பிடித்த இராணுவமே காற்றுக்கு அசைந்திடும் கடல் அலை வந்து வந்து கரையை தொட்டு செல்வது போன்ற உணர்வு ஏற்பட்டு கவலை கொண்டான், பொங்கினான், பொருமினான். குறுகிய நாட்களின் பின்னர் "தர்மத்தின் பக்கம் தன்னை நிறுத்தி தமிழ் மக்களின் விடிவை நோக்கிய நீண்ட தூர கரடு முரடான விடுதலை பாதையில் தன்னையும் இணைத்து; ஆயுதம் தூக்காது விடுதலைக்கு வேண்டிய விடயங்களில் பற்று கொண்டு பலமாக செயற்பட தொடங்கினான்."

அஜித் விடுதலை இயக்கத்தில் இருந்து செயற்படுவதை இலங்கை இராணுவம் தனது புலனாய்வு மூலம் அறிந்து கொண்டு பொலிகண்டி கடற்கரை இராணுவ முகாமைச்சேர்ந்த இராணுவத்தினர் அவனை கைது செய்வதற்காக அவனது வீடு தேடி வந்து அவனை விசாரித்து மனைவி, உறவினர்களை அடிக்கடி துன்புறுத்த தொடங்கினார்கள்.

இந்த கால கட்டத்தில் அவன் வேறு இடங்களில் தலை மறைவாகவும்,வீடுகள் மாறி தங்குவதும், பனைக்கூடாரத்தில் ஓலைகளை சேர்த்து முடிந்து தன் இடுப்பிலும், பனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டிலும் கயிற்றை போட்டு கட்டியபடி ஒழித்திருந்து கரணம் தப்பினால் மரணம் என்ற பயங்கர நிலையில் இருந்து ஆண்டவன் கிருபையால் தப்பித்து கொண்டதும் உண்டு. இப்படி எத்தனை நாட்களுக்கு உயிரை இராணுவத்திடம் இருந்து காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற வேதனை அவனிடத்திலும், அவனது குடும்பத்தாரிடமும் காணப் பட்டது.

தன்னை கற்பித்த வன்னியசிங்கம் ஆசிரியர் வீடுசென்று வணக்கம் சேர் என விழித்து, என்னை நீங்கள் சந்திக்க விரும்புவ தாக எனது மாமா நவம் கூறினார். அதுதான் வந்தன் சேர்.

ஓம் ஓம் நான் தான் வரச்சொல்லி விட்டனான். உந்த கதிரையில் இரு அஜித். கண்டு கனகாலம். எப்படி இருக்கிறாய், வீட்டில் எல்லோரும் நலமா, அப்பா எப்படி இருக்கிறார்? என குசலம் விசாரித்து உன் தங்கைக்கு யூனிவெர்சிற்றி கிடைத்ததாக நவம் மாமா சொன்னார். சந்தோசமாக இருக்கிறது. உன் திறைமைக்கு நீயும் யூனிவெர்சிற்றி என்ரர் பண்ணியிருப்பாய். என்ன செய்வது. பாளாய்ப்போன நாட்டு நிலைமை நீ ஒழிந்து வாழவேண்டிய சூழலுக்குள் உன்னை கொண்டு சென்று விட்டது. உன் அப்பா இவ்வளவு குடும்ப கஷ்டத்திலும் கஷ்டப்பட்டு உழைத்து உங்களை படிப்பிப்பது எவ்வளவு பெரிய விடயம். அவரை பாரட்ட வேணும் அஜித். எல்லா பெற்றோராலும் அது இயலாத காரியம். அஜித் இரு வாறன் என கூறி வீட்டினுள் சென்றுவிட்டார்.

வன்னியசிங்கம் வாத்தியார் மிக சிறந்த பண்புள்ள, மாணவர்களின் கல்வியில் மிக அக்கறை உள்ளவர். பாடங்களை மிக சிறப்பாக, நுணுக்கமாக சற்று பகிடியுடன் கற்பிக்கும் திறன் கொண்டவர். நாம் வகுப்பில் செய்யும் குறும்புத் தனங்களுக்கு கோபம் கொள்ளாது சாதுரியமாக இப்படியான தவறுகளை இனிமேல் செய்யக்கூடாது என புத்திமதி கூறுவார். தனது பாடத்தில் மிக பலவீனமான மாணவர்களை இனம் கண்டு பள்ளி முடிந்ததும் வீடு செல்ல அனுமதிக்காது, பின்னேரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையிலேயே பிரத்தியேகமாக படிப்பிப்பார். அதனால் மாணவர்கள் தொடங்கி ஆசிரியர்கள் வரை நல் மதிப்பை சம்பாதித்து வைத்துள்ளார்.

அஜித்! சென்ற கிழமை உனது அப்பாவும் அம்மாவும் என்னை வந்து சந்தித்தார்கள். "ஏன் சேர் உங்களை சந்திக்க வந்தார்கள். அஜித்தின் கேள்வி இது."

"அஜித்! உனது அப்பா, அம்மா, சகோதரிகள் உனக்கு எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என நன்றாக பயப்படுகிறார் கள். உனது அம்மா தினமும் ஏக்கத்துடனும், அழுதுகொண்டும் இருக்கிறாவாம் உன் நிலமையை நினைத்து. அம்மா இப்ப ஒழுங்காக சாப்பிடுவதில்லையாம், தூங்குவதில்லையாம். அப்பா கண்ணீர் சிந்தா முகத்துடன் மிகுந்த கவலையுடன் எல்லாம் சொன்னார்."

அஜித்! உன்னை உனது குடும்பம் வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு விரும்புகிறார்கள். உன்னுடன் அப்பா இது சம்பந்தமாக கதைத்த போது; நீ மறுப்பு சொல்லி விட்டாயாம். அதுதான் என்னை வந்து சந்தித்தார்கள்.

"என்ன சேர் நீங்கள் சொல்லுகிறீர்கள்? நாம் தனி நாட்டிற்காக போராடும் போது! பல கஷ்டங்கள், சிக்கல்கள், இடையூறுகள், இழப்புக்களை சந்தித்துதான் ஆக வேணும். குடும்பம் என்று பார்க்க முடியாது. அப்படி இல்லையேல் எம் குறிக்கோளை நாம் எட்ட முடியாது. தமிழீழத்துக்காக போராட வெளிக்கிட்டவர்கள் எல்லோர் நிலையும் இப்படித் தானே சேர்." இருந்தாலும் எனது குடும்ப நிலையை எண்ணும் போதுதான் மனதுக்கு கஷ்டமாக இருக்கு. அப்பா வருத்தக் காரன். பாவம். தள்ளாத வயதிலும் குடும்பத்திற்காக மாடாய் உழைக்கிறார், ஓடாய் தேய்கிறார்.

"அஜித்! அதை உணர்ந்துதான் நான் உன்னை பாதுகாக்க சொல்லுகிறன். உனது உயிரை காப்பாற்றி கொள்வதுதான் தற்போதைய குடும்பநிலையில் அவசியமாகிறது. உன் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் சூழ்நிலை உனக்கே புரிகிறது. உன் குடும்பத்துக்கு நீ தேவை. உன் "உயிருக்கு ஏதாவது ஆபத்து நேரிட்டால், உன் குடும்பம் சிதறிவிடும்.தங்கைகளின் கல்வி, திருமணம், ஓரளவு வயது முதிர்ந்த பெற்றோர்,அப்பாச்சி ஆகியோரின் எதிர்காலம் நெருப்பினுள் சிறகடித்து வீழ்ந்த விட்டில் பூச்சிகள் போலாகி விடும்" உன் குடும்பம் வறுமையிலும் சந்தோசமாக, இணை பிரியா, மிக ஒற்றுமையாக வாழும் குடும்பம் என்பது எனக்கு தெரியும். நீ பிறக்க முன்னரே உன் அப்பாவை நன்கு அறிவேன். எவரிடமும் கையேந்தாத நல்ல மனுஷன். "அவர்களை நெருப்புக்குள் நீயே தள்ளி விடாதை." எனவே பெற்றோர் விருப்பப்படி நீ வெளிநாடு செல்வதுதான் ஒரே வழி. நான் சொல்வதற்காக நீ ஏற்றுக்கொள்ள வேண்டாம். நன்றாக ஜோசி என்றார் வன்னியசிங்கம் வாத்தியார்.

"சேர், நான் நாட்டை விட்டு போனால் என்னுடைய பங்களிப்பு மலரப்போகும் என் தாய் நாட்டுக்கு கிடைக்காது. அத்தோடு நாட்டுக்காக என்னைப்போல எண்ணற்ற இளைஞர் கள் உயிரை கொடுத்து களத்தில் நின்று பாராடும்போது, நான் மட்டும் வெளிநாட்டில் சுதந்திர மனிதனாக எப்படி நாட்டு பற்றில்லாது வாழ முடியும்? அப்போது எனது மனம் குற்ற உணர்வில் தினமும் ஊசலாடுமே சேர் என்றான்."

ஆம், அஜித். தாய்நாட்டின் மீதுள்ள உனது பற்று புரிகிறது. அனால் அதைப்பற்றி நீ கவலை அடைய தேவையில்லை.பிற நாட்டில் இருந்து கூட எமது தாயக மண் விடுதலைக்கு உதவிடமுடியும். என்னிடம் கல்வி கற்ற பல மாணவர்கள் வெளி நாட்டில் வாழுகிறார்கள். அவர்களில் பலர் அங்கிருந்த படியே எமது சுதந்திர தாய் நாட்டின் விடுதலைக்காக பல கோணங்களில் செயற்படுகிறார்கள், உதவு கிறார்கள். அவர்களைப்போல நீயும் நாட்டின் விடுதலைக்காக சகல விதத்திலும் உதவிடலாம். நீ உனது குடும்பத்தையும் பார்த்து, மண்ணின் விடுதலைக்காக உதவிடுவாய் என்ற நம்பிக்கை எனக்குண்டு என்றார் வன்னியசிங்கம் வாத்தியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சேர், நீங்கள் கூறுவது எனக்கு சரியாகத்தான் படுகிறது. உங்கள் கணிப்பு தப்பாது என்பதும் எனக்கு தெரியும். போய் வருகிறேன் சேர் என கூறி விடை பெற்றான்."

அதன் பின் அவன் வெளிநாட்டுக்கும் வந்து சேர்ந்து பல வருடங்கள் கடந்த பின்பும், வேலைத்தலத்தில் தொடர் அழுத்தமும், மனவலியும் குறைந்த பாட்டில்லை.

அன்றைய தினம் வேலை முடிவுற்று தனது றூமுக்கு வந்தவன் சப்பாத்தையும், குளிர் ஜக்கற்றையும் கழட்டி கொழுவி விட்டு செற்றியில் இருந்து கண்களை மூடி சோகத்துடன் சிந்திக்கலானான்.

வடமராட்சி மக்கள் தொடரான செல்லடிகளாலும், குண்டு வீச்சுக்களாலும் பல உயிர்களை, இழப்புக்களை சந்தித்து வருவதை செய்திகள் மூலம் அறிந்து மிக மனவலி அடைகிறான். இப்பகுதியில் குண்டடியால் மனித உடல்கள் சிதறுண்டு கிடப்பது வழமை.சில வேளை காகம் தன் உணவுக்காக சிதறுண்ட மனித உடல்களை கொத்தும்.

இந்த கோர காட்சிகளை தனது செல்ல மகள் பார்க்க நேரிட்டால்! அந்த பிஞ்சு உள்ளம் தாங்குமா? என்ற ஓர் ஏக்கம்.தன் ஆசை மகளை எப்போது பார்க்க போகிறேன், அவளை கட்டி அணைத்து எப்போது முத்தம் கொடுக்க போகிறேன், என அவனது உள்ளம் அமைதியற்று உலாவ தொடங்கியது. இனம்தெரியாத ஏதோ ஒன்று இதயத்தை பிழிந்து எடுத்தது. எல்லா மன வலிகளுக்கும் தீர்வாக எமக்கு விடுதலை கிடைக்குமா? என்று எண்ணிய மனம் "விடுதலை நோக்கிய பயணத்தில் வலிதாங்கிய வடுக்களை சுமந்த வண்ணம்" செற்றியில் அசந்து விட்டான் அஜித்.

திருமலை இலக்கிய ஒன்றிய 30
சிறுகதைத்தொகுப்பு - 2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேற்றாரின் கோரத்தாண்டவம்

வெளியில் ஆள் நடமாட்டம் இன்னும் இல்லாத அதிகாலை நேரம் அது. கண் விழித்ததும் இராமருக்கு இலேசாக தலை சுற்றியது. எழும்ப முடியாது படுத்த பனை யோலை பாயில் குந்தி இருந்தார். இடது கால் பெரு விரலில் முள் ஏறிய காயம்.அதனால் நீண்ட நாட்களாக மாறாத வேதனை அந்த விரலில்.

சீவல் தொழில் செய்ய வேண்டு மானால், வெறுமையான காலுடன் முட்செடி, பற்றைக்குள் செல்ல வேண்டிய கட்டாயம். இவ்வாறே அவர் காலில் முள் ஏறியது.

அக்காயத்தின் மீது மொய்த்த ஈக்களை தனது சால்வை துண்டால் விரட்ட விரட்ட அவை திரும்பத்திரும்ப மொய்த்தன. காயத்திற்கு மருந்து போடாது பழைய சேலைத்துண்டை கிழித்து கட்டி விட்டார். இப்போது ஈக்கள் மொய்க்கவில்லை.

உழைத்து, உழைத்து இஞ்சுபோன துணிபோல மெலிந்த உடம்பு.பரட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை,வயது முதிர்ச்சியின் அடையாளமாக குழி விழுந்த கண்களும்,கன்னங்களும். இதுதான் அந்த ஏழை தொழிலாளி இராமரின் முத்திரை போன்ற அடை யாளங்கள்.

நேற்று பெய்த மழையில் நனைந்தபடி சீவல் தொழில் செய்ததால் அவருக்கு இன்று இலேசான தலை வலி.

பனை, தென்னையில் இருக்கும் போது; மழை பெய்தாலும், காற்று பலமாக வீசினாலும், இடி விழுந்தாலும், ஏன் வட்டிலிருந்து கொடிய விச ஜந்துக்கள் வந்தாலும் சகலதையும் எதிர்கொள்வதுதான் சீவல் தொழிலாளிகளின் தலை விதி.

தனது தொழிலுக்கான இத்துப்போன வேட்டியை பெண்கள் சேலை உடுத்தும்போது இடுப்பை சுற்றி செருகுவது போல் செருகினார். வேட்டியின் கீழ் பக்கத்தை குனிந்து வலது கையால் எடுத்து பின்பக்கம் இழுத்து கால்களை சற்று அகட்டி நின்றபடி கொடுக்கு கட்டினார்.

மனைவி கொண்டு வந்து கொடுத்த தேநீர், கைச் சிரண்டை சீனி இரண்டையும் வாங்கி சீனியை இருதரம் நாக்கால் நக்கி நாலு முடறில் கப்பை காலி பண்ணி மனைவி யிடம் கொடுத்து விட்டு, பனை ஏறும் போது நெஞ்சில் உராய்வு ஏற்படாமல் இருப்பதற்கான மாதோலை கழுத்தில் மாட்டி னார். பின்னர் தளனார் காலில் பூட்டி பனை ஏறும் போது கால் பாதங்களின் பாதுகாப்புக்காக அணியும் காதோலையும் காலில் மாட்டிய பின்பு, இயனக்கூட்டை இடுப்பில் கட்டிக் கொண்டார். இடுக்குப்பிடியை இயனத்துடன் இருக்கும் ஓலையால் பின்னிய வட்டப்பெட்டிக்குள் வைத்தபடி நின்ற நிலையில் வெற்றிலையை நான்காக மடித்து அதன் மேல் சிறிது சுண்ணாம்பை தடவி வாயுள் திணித்து இருதரம் குதப்பி முற்றத்து மாமரத்தின் அடியில் எச்சிலை உமிழ்ந்து விட்டு சைக்கிளை படலைவரை உருட்டி வந்து எதிரே தெரிந்த சக்கோட்டை பிள்ளையாரை வேண்டியபடி தனது காலைச் சீவலுக்கு கடற்கரை நோக்கி புறப்பட்டார் இராமர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகையிலை நாற்று, வெண்காயம், மிளகாய், பனாட்டு, பனங்கிழங்கு, ஒடியல், புழுக்கொடியல், பாய்பெட்டி, மீன், கள்ளு, பதனீர் ஆகியவற்றுக்கு பேர் போன பொலிகண்டி கடற் கரையில்தான் இராமரின் கள்ளு விற்கும் இடம் இருக்கிறது. அங்கு ஒரு தென்னம் தோப்புக்குள் கீற்று கொட்டில் அமைத்து கமக்காரர், கடல் தொழிலாளர், பாதசாரிகள் ஆகியோருக்கு தனது கள் வியாபாரத்தை செய்து வருகிறார்.

இராமரின் குடும்ப வண்டி ஓட வேண்டுமானால் அவரது பானையில் சிறிது சொட்டு கள் கூட மிஞ்சாது விற்று தீர வேண்டும்.

வாடிக்கையாளர் என்கின்ற உரிமையில் கடன் சொல்லி கள்ளடிப்பவர்கள், அதட்டி கள்ளு குடிப்பவர்களும் உண்டு. சிறிது மழை பெய்யின் வழமையாக கள்ளடிப்பவர்கள்கூட அதை நிறுத்தி சாராயம் அடிக்க சென்றுவிடுவர். மேலும் இவரது கொட்டிலை சுற்றவர வேறு கள்ளு கொட்டில்களும் உண்டு. இவ்வளவு பிரச்சனைகளை தாண்டியே அவரின் தொழில் நடைபெறுகிறது.

மேலும் வயது ஏற ஏற பனையை வலுவாக கட்டிப் பிடித்து ஏறும் வலு கைகளுக்கு குறைந்து விடும். இப்படியான நேரங்களில் ஆபத்து கூட நேரிடலாம். என்ன செய்வது. இதை விட்டால் வேறு பிழைப்பு தெரியாது அவருக்கு. இது பரம்பரை தொழிலாச்சு இராமர் குடும்பத்தினருக்கு.

அவரது சமூக மக்களை மேட்டுக்குடி அதிகார வர்க்கம் நீண்ட காலம் தீண்ட தகாதவர்களாகவே வழி நடத்தினர். அவர் சமூகத்திற்கு கல்வி மறுக்கப்பட்டு, பெண்கள் மேல் சட்டை அணிதல் தடுக்கப்பட்டு, தாகத்திற்கு நீர் இறைத்து குடிக்கும் உரிமை தடுக்கப்பட்டு, ஆண்டவன் சந்நிதானத்துள் புகுதல் புடுங்கப்பட்டு,வீடுகளில் தோட்டங்களில் அடிமைகளாகவே வழி நடாத்தப்பட்டனர்.

தம் பிள்ளைகளின் கல்விக்காக தமது சொந்த இடங் களில் கீற்று கொட்டில்கள் அமைத்து பாடசாலை நடாத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது! மேல்தட்டு வர்க்கம் அவற்றை தீக்கிரையாக்கி அவர் சமூக சிறார்களின் கல்விக்கு குந்தகம் விளைவித்தனர்.

சிங்கள இனம் தமிழ் இனத்தை எவ்வாறு அடக்கி ஆளுகிறதோ அதே போல தமிழ் இனத்துள் ஒரு சமூகத்தை தமிழ் மேட்டுக்குடியினர் தொடர்ந்து அடக்கி வைத்த படியால் அந்த சமூகத்தில் ஒரு பகுதியினர் சீவல் தொழிலையே பரம்பரை தொழிலாக தொடர வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப் பட்டார்கள்.

அன்று மதியம் பன்னிரண்டு மணி நெருங்கும்போது! ஊரே அதிரும்படியாக பாரிய வெடிச்சத்தங்கள் பரந்து கேட்டன. இச்சத்தம் பாறுவதத்துக்கு பயமூட்டியது.

"சீவலுக்கு போன இந்த மனுசனை இன்னும் திரும்பி வரக்காணவில்லை. சக்கோட்டை பிள்ளையாரே! நீதானப்பு துணை." என தனது இஷ்ட தெய்வத்தை வேண்டினாள்.

அட செல்லும் அடிக்கிறாங்கள் குறுக்காலை போனவை. தென்னம் ஓலையில் செல் பட்டு ஓலைகள் பொலு பொலுவென நிலத்தில் வீழ்ந்தன. இடியேறு விழுவான்கள் எங்கடை வீடு நோக்கியும் செல் அடிக்கிறாங்கள். என்ரை பிள்ளை சவுதியில் வெய்யில் குளித்து கட்டிய வீடு. என புலம்பியபடி படலைக்கு வந்து தெருவை எட்டி பார்ப்பதும், பின்னர் வீட்டினுள் போவதுமாக நெருப்பின் மத்தியில் அகப்பட்ட புழுப்போல துடித்து கலக்கமடைந்தாள்.

இந்த நேரத்தில் ஆரை விட்டு தேடுவது? உதவிக்கு ஆம்பிளைகளோ, வயது போனதுகளோ இல்லை. நான் போய் தேடுவம் என்றால் குமர் வேறு வீட்டில் தனிய.

"ஐயோ! இவங்கள் அட்டூழியங்களை நினைத்தால் இரத்தம் உறைஞ்சு போகுது. குமரை எப்படி வீட்டில் தனிய விட்டுவிட்டு நான் போவது? இந்த நேரம் பார்த்து மச்சாள் காரியும் ஊரில் இல்லை." ரொம்ப முக்கிய வேலை உள்ளது போல ஒரு நாய் நாக்கை தொங்கப்போட்டபடி வெடிக்கு பயந்து மிக வேகமாக அவளை விலத்தி சிணுங்கியபடி ஓடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு நாய்களும் குரைக்கும் சத்தமும் கேட்குது.

"கடவுளே! இப்ப நடக்கும் பிரச்சனைக்கு குழந்தை, குட்டி, கிழவன் எண்டே படுபாவிகள் பாக்கிறாங்கள். வயது வித்தியாசம் இல்லாமல் எல்லே கொண்டு போடுறாங்கள்." மீண்டும் புலம்பினாள் பாறுவதம்.

முன்னொருக்கால் ரோந்து வந்த ஆமிக்காரர் இராமரின் கொட்டிலுள் புகுந்து கள்ளுப்பானைகளை அடித்து நொறுக்கி, கொட்டிலையும் எரித்து சென்றனர்.

அதே நேரம் அவர் பனை வட்டில் ஆடாமல் அசையாது மூச்சை கையில் பிடித்த வண்ணம் இருந்ததனால் உயிர் தப்ப முடிந்தது. இராணுவம் தமது கோரத்தாண்டவம் ஆடி அகன்றபின் நடு நடுங்கி இறங்கி வந்து தனது கொட்டிலை பார்த்து கண்கள் கலங்கி நின்றார்.

"அவரது குடும்பத்திற்கு மறுநாள் சோறு போடும் சிறிதளவு பணமும் அக்கீற்று கொட்டிலுடன் சாம்பலானது"

வெடிச்சத்தங்கள் கேட்கும் சமயம் இரு இளைஞர்கள் தமது கடல் தொழிலை முடித்து மீன்களை கூறி அச்சுவேலி சயிக்கிள் வியாபாரிகளுக்கு விற்றுவிட்டு இராமரிடம் கள்ளு குடித்தபடி இருந்தனர்.

"அப்பு பிணம் தின்னி கழுகுகள் வாறாங்கள் போல. நாய்கள் குரைக்குது, வெடிச்சத்தமும் கேட்குது. தாரத்தை மட்டுமல்ல தாயையும் விட்டுவைக்காத வெறியர்கள். எங்கள் மண்ணில் வந்து பேயாட்டம் ஆடுறாங்கள்." என பலமாக கூறினர்." அந்த இரு இளைஞர்களும்.

"அட தம்பிமார் அவங்கட காதில் விழப்போகுது.இப்ப இங்கே இருக்கிற ஆமிக்கு தமிழும் தெரியும். பேசாது அமைதி யாக இருங்கோ. அவங்கள் ரோட்டால் போகட்டும் என கூறினார்."

"இஞ்சை இராமர் உப்படி பயப்பிடாதீர். அவங்கள் காதில் கேட்டால் என்ன.சுட்டா திண்டு விடுவான்கள்? கேட்டால் கேட்கட்டும். இப்ப செத்தாலும் சாவுதான். நூறில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்தாலும் சாவுதான். நீ இன்னும் ஒரு அரை ஊற்று," என்றான் ஒருவன்.

இவர்களின் பேச்சை கேட்ட இராமரின் உடம்பு பயப் பீதியில் வெலவெலத்தது. இளம் கன்று பயம் அறியாது என்பது சரிதான் என மனதுள் எண்ணியவாறு மெதுவாக தெருப்பக்கம் எட்டிப்பார்த்தார்.

அவர் அவருக்குத்தான் தெரியும் அவர்களது குடும்ப நிலமை. வெய்யிலுக்கும் மழைக்கும் ஈடு கொடுக்க முடியாத ஓலைக்குடிசை. வெயில் ஏறிப்பின் சுதந்திரமாக ஒளிக்கதிர்கள் வீட்டினுள் ஊடுருவி வெளிச்சமாக்கும்.மழையோ வானத்தில் இருந்து வந்த பயண களைப்பை வீட்டினுள் நேரடியாக சென்று ஆற்றிக்கொள்ளும்.

திருமண வயதில் மகள். புரிசனை செல்லுக்கு பறிகொடுத்து வாழ வேண்டிய வயதில் விதவையாக இராமரின் துணையில் வாழும் கடைசி சகோதரி.

அவளிடம் அழகுண்டு.பொருளில்லை.இராமர் பல மறுமணம் பேசியும் அவளை இரண்டாம் தாரமாக ஏற்பதற்கு எவருமே முன்வரவில்லை.மனைவி இறந்து போனால் ஆண் களை மறுமணம் முடிக்க அனுமதிக்கும் எமது சமுதாயம், ஒரு பெண் கணவனை இழந்தால் அவளை மூளி என வேண்டாத பட்டம் சுமத்தி ஒதுக்கி வைக்கிறது.இது எம் பெண்களுக்கு செய்யும் மாபெரும் கொடுமை.

அவளும் ஓர் உயிருள்ள ஜடம்தான். அவளுக்கும் சர்தாரண மானிடத்திற்குள்ள ஆசா பாசம், தவிப்பு, உணர்ச்சி உண்டென்பதை இக்காலத்திலும் ஏற்க மறுத்திடும் எம் பின்னோக்கிய சமுதாய அமைப்பு!

நாட்டுக்காக தம் உயிரை ஈவு கொடுத்த போராளிகளின் எண்ணற்ற விதவை மனைவிகள், போரால் கொன்றொழிக்கப் பட்ட ஆண்களின் மனைவிகள் என பல எம் பெண்கள் மறுமணத்துக்காக காத்து இருக்கிறார்கள். வசதி படைத்த தமிழ் ஆண்மகன் முதல் மனைவி இருக்கும் போது; இரண்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரமாக விதவைகளுக்கு வாழ்வு கொடுக்கலாம் என்ற ஒரு சட்டம் இலங்கையில் அரசு உருவாக்கின் மிக சிறப்பு. இதன் மூலம் விதவைப்பெண்களின் கண்ணீரை ஓரளவு துடைக்க முடியும்.

குமரை வீட்டில் வைத்திருக்கும் பெற்றோர் மடியில் நெருப்பை கட்டியிருக்கும் நிலையிலேயே காணப்படு கிறார்கள். இராமரின் சிறிய வருமானத்திலேதான் குசினிக்குள் அடுப்பு எரியவேணும், மகளுக்கும், விதவை சகோதரிக்கும் ஏற்ற வரனையும் தேட வேணும்.

இவை அனைத்தும் வெறியுடன் வருகின்ற வேற்று இராணுவத்துக்கு தெரியவா போகிறது? தெரிய வேண்டும், உணர வேண்டும் என்ற கட்டாயம் இல்லையே. அவற்றை நினைத்து உடம்பு சிலிர்த்து, கண்கள் சிவந்தன இராமருக்கு.

அதே நேரம் பலரின் வேற்று மொழிக்குரல்கள் அருகில் கேட்டதோடு, சப்பாத்து காலடியோசை யானை வந்தது போல நிலத்தை அதிரச்செய்தன.

எதிர்பாராத வகையில் சில இராணுவம் அனல் தெறிக்கும் கண்களுடன் அவர்கள் முன்னிலையில் வந்து துப்பாக்கியை நீட்டியபடி நின்றனர். இராணுவத்தை கண்ணுற்ற அந்த இரு இளைஞர்களும் பயப்பீதியில் நிலத்தை பார்த்தபடியும், இராமரின் முகம் உறைந்தும் காணப்பட்டது.

“அடோ தமிழ் பண்டி கொட்டியா, எங்களைப்பற்றி என்னடா சொன்னது? ம்...ம் சொல்றது சொல்றது. அடோ இது ஒங்கட மண்ணு இல்லே. நம்ம மண்ணு. புத்த மண்ணு. ஒங்களுக்கு இங்கே இடமில்லே. இந்தியா போறது.” புரிஞ்சுதா? என்றவாறு ஓர் இராணுவம் கொச்சை தமிழில் சீறிப்பாய்ந்தான்.

மூன்று பேரும் குண்டிப்பலகையில் அமர்ந்தவாறு இராணுவத்தினரை நிமிர்ந்து பார்த்தனர். மூவரின் தலை களையும் குறி பார்த்தபடி துப்பாக்கிகளை நீட்டியபடி இராணுவத்தினர் நின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமிக்கொமாண்டர் அங்கு வந்து சுற்று முற்றும் நோட்டம் விட்டு புரியாத மொழியான சிங்களத்தில் சிப்பாய் களுடன் பேசிவிட்டு வெளியே வீதிக்கு சென்றான்.

"ஓர் இராணுவம் துப்பாக்கியின் பிடியால் ஓர் இளைஞனின் தலையில் ஓங்கி அடித்தான். அவ்விளைஞன் அம்மா என அலறியபடி இரத்தம் பீறிட நிலத்தில் சரிந்து துடிதுடித்தான்."

இராமர், அந்த இராணுவ சிப்பாயை கையெடுத்து கும்பிட்டு அடுத்தவனை ஒன்றும் செய்ய வேண்டாமென கெஞ்சினார்.

அந்த வேற்றானோ "அடோ கிழட்டு கொட்டியா, நீ இவனுக்கு சப்போட்டு பேசுறது என கூறியவாறு சப்பாத்து காலால் இராமருக்கு உதைத்தான். இரும்பு சப்பாத்து உதை தாங்க மாட்டாது வயது முதிர்ந்த இராமர் மூச்சையற்று நிலத்தில் வீழ்ந்தார்." நிலத்தில் வீழ்த்தவரின் உடல் அசைவற்று காணப்பட்டது.

"இவற்றை கண்ணுற்ற மறு இளைஞன் குறிபார்த்து நிற்கும் இராணுவத்தின் காலில் விழுந்து தன்னை விட்டு விடும்படி மன்றாடினான்".அவனது மன்றாட்டம் அந்த சிப்பாயின் காதில் விழவில்லை. குனிந்து மன்றாடியபோது! அச்சிப்பாய் இரு அடி பின்னோக்கி நகர்ந்து "அவனது பிடரியில் குறி வைத்தான். அவன் வைத்த குறி, அந்த இளைஞனின் பிடரியினுள் ஊடுருவி இரத்தம் பீறிட நெற்றியை பிய்த்த வண்ணம் சென்று அவனின் உயிரை குடித்தது".

வெடிச்சத்தங்கள், நாய்களின் குரைத்தல் சத்தங்கள் நின்று, "வேற்றார் தமது கோரத்தாண்டவத்தை" முடித்து அவ்விடம் விட்டு அகன்றதும், அருகிலுள்ள வீட்டார் இராமரின் கள்ளு கொட்டிலுக்கு சென்று பார்த்தபோது!

இளைஞர்கள் இரத்த வெள்ளத்திலும், இராமர் சரிந்தபடியும் உயிரற்று காணப்பட்டனர்.

- 1994 தமிழ் ஏடு - சுவிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சியின் எல்லை வானம் வரை

வீட்டின் முன் போட்டிக்கோவிலுள்ள சீமெந்து கட்டில் அமர்ந்தபடி முதுகை பின் பக்கம் உள்ள சுவரில் சாய்த்தவாறு கால்கள் இரண்டையும் நீட்டியபடி தனது மகளின் திருமணத்தை எண்ணி வேதனையில் ஆழ்த்திருந்தார் மாணிக்கம்.

அவர் மிக பண்புள்ள தமிழ் வாத்தியார். அவர் தமிழ் பாடம் நடத்தும்போது இலக்கணம், இலக்கியத்தை மாணவர்களுக்கு புரியும்படி மிக தெளிவாக சொல்லி கொடுப்பார். அவர் படிப்பித்த பாடசாலையில் பட்டம் படித்த ஆசிரியர்கள் கூட அவரை போல சிறப்பாக தமிழ் பாடத்தை கற்பிக்க இயலாமை காணப்பட்டது.

அவர் ஓய்வு பெற்று நான்கு வருடங்கள் முடிந்து விட்டன. அவர் ஓய்வு பெற்றாலும் தனது மகளுக்கு வரன் தேடும் பணியில் இன்னும் ஓய்வு பெற முடியவில்லை. அவரது வாத்தியார் வருமானத்தில் தன் மகளுக்கான சிறிய ஓட்டு வீட்டை கட்டி முடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு எவ்வளவோ கஷ்டம், இடைஞ்சல், நிதி நெருக்கடி ஏற்பட்ட போதும் தனது ஆசிரியர் பிடிப்பு பணத்தில் கை வையாது மகளின் திருமணத்திற்காகவே ஒதுக்கி வைத்தார்.

கலியாண புறோக்கர் பொன்னையாவும் பல வரன்களை மாணிக்கத்தின் மகள் ராணிக்காக கொண்டுவந்து முன்னிறுத்தியும், பெண்ணின் அழகில் விரும்பிய மாப்பிள்ளைகள் அவள் வாய் பேச முடியாதவள் என்ற காரணத்திற்காக தமது மறுப்பை நேரே கூற முடியாது முடிவை பின்னர் தெரிவிப்பதாகவும், தரகரிடம் சொல்லி அனுப்புவதாகவும் சாக்கு கூறி புற முதுகு காட்டி சென்று விடுகின்றனர்.

பெண்களுக்கான மறு வாழ்வு, மனித நாகரீகம், காந்தீயம் பற்றி வாய் கிழிய பேசுபவர்கள் அவற்றை தாம் கடைப்பிடிக்காது அடுத்தவர் கடைப்பிடித்தால் எல்லாம் சரியாகி விடும் என்ற சுயநலமிக்க பல வாறான மனித ஜென்மங்களை மகளின் கலியாண பேச்சின் பின்னரே மாணிக்கம் அறிந்து கொண்டார்.

மாணிக்கத்தின் குடும்பத்திலோ அல்லது அவரது மனைவியின் பக்கத்திலோ எவரும் பரம்பரை ஊமை கிடையாது. ராணியின் பயந்த சுபாபம்,விதியின் வலிமை ஆகியவற்றால் இந்த பரிதாப நிலைக்கு அவள் தள்ளப்பட்டாள்.

சிறு வயதில் அவள் பாடசாலை சென்ற வேளை! இளைஞன் ஒருவன் விபத்தில் சிக்குண்டு காருக்குள் இரத்த வெள்ளத்தில் கிடந்த காட்சியை எதிர்பாராத விதமாக கண்டு கொண்டாள். அவள் சாதாரணமாக ப்யந்த சுபாவம் கொண்டவள். உடனே ஐயோ என கூச்சல் இட்டாள். அதன் பின்னர் அவளால் பேச முடியவில்லை. மாணிக்கத்தார் அவளை காட்டாத இடமில்லை, செய்யாத வைத்தியம் இல்லை. ஆனாலும் அவளுக்கு பேச்சுவரவேயில்லை. அன்றிலிருந்து அவளின் இந்த பரிதாப நிலை தொடர்கிறது.

நெற்றியில் பட்டை, தொழில் கசங்கிய சால்வை, கையில் ஒரு பழைய பை போன்ற அலங்காரங்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறோக்கர் பொன்னையர் அங்கு வந்தார். புறோக்கரை கண்ணுற்ற மாணிக்கம் "வாரும் புறோக்கரே வாரும். இதில் உட்காரும்" என தான் அமர்ந்திருந்த மறுபக்க சீமெந்து கட்டை காட்டி அமரும்படி கூறினார்.

புறோக்கர் அமர்ந்ததும் வெய்யிலின் கொடுமையை தணிக்க தேசிக்காய் தண்ணியை ஒரு கிளாசில் எடுத்து வந்து கொடுத்தாள் ராணி. அதை வாங்கி மடக் மடக் என குடித்து தாகத்தை தணித்து கொண்ட புரோக்கர் தனது தோள் துண்டால் வாயை துடைத்தபின் பேசத்தொடங்கினார்.

"மாணிக்கத்தார், புத்தூரில் ஓர் அருமையான மாப் பிள்ளை இருக்கிறார். உங்களைப்போல படித்த பண்பான குடும்பம். குடி, சிகரெட்டு இல்லாத நல்ல பொடியன். கொழும்பில் கம்பனி ஒன்றில் எக்கவுண்டனாக இருக்கிறான். கை நிறைய சம்பளம். உங்கடை பிள்ளைக்கு ஏற்ற பொருத்த மான பொடி யன். மூத்த சகோதரன் ஒரு செல்வந்தர் வீட்டில் திருமணம் செய்துள்ளான். மாப்பிள்ளையின் தகப்பனிடம் உங்களை பற்றிய எல்லா விடயங்களையும் விபரமாக எடுத்து சொன்னேன்." என்று புறோக்கருக்குரிய பாணியில் வெழுத்து கட்டினார்.

இவற்றை அமைதியாக கேட்டுக்கொண்டிருந்த மாணிக்கம், "அதெல்லாம் சரி புறோக்கர். பிள்ளை வாய் பேச மாட்டாது என்ற விடயத்தை மாப்பிள்ளை வீட்டாருக்கு, குறிப்பாக மாப்பிள்ளை பொடியனுக்கு எடுத்து சொன்னீரா?"

"என்ன மாணிக்கத்தார் உப்படி கேட்டுப் போட்டியள்?" நான் காலியாண தரகர்தான். "ஆயிரம் தரம் போய் சொல்லி ஒரு கலியாணத்தை கட்டி வை என்பார்கள்." அது புறோக்கர் மாரின் பிழைப்பு. இருந்தாலும் உங்களைப்பற்றி எனக்கு தெரியாதா. என் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லி கொடுத்த வாத்தியார் நீங்கள். உங்களுக்கு பொய் பேசுவேனா? விசுவாசமாக இருப்பன்.

பிள்ளை "வாய் பேசாமாட்டாது" என்ற விடயத்தை பத்து தடவை சொன்னதோடு, சூரியனில் மறு இருக்கும். ஆனால் பிள்ளையில் எந்த மறுவும் காட்ட முடியாது எனவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைக்கு தெரியாத சமையல் இல்லை. அப்படி மாணிக்கம் வாத்தியார் சொல்லிக்கொடுத்து வளர்த்து வைத்துள்ளார் என்று சொன்ன பின்னரே மாப்பிள்ளை வீட்டார் பிள்ளையின் போட்டோவை வாங்கி பார்த்தனர். போட்டோவை பார்த்து விட்டு பிள்ளையை ஒரு தடவை நேரடியாக பார்க்க விரும்புகிறார்கள் என்றார் புறோக்கர்.

"அப்படியா புறோக்கர். உம்முடைய வாயில் சர்க்கரை போட வேணும்." கேட்கவே மனதுக்கு சந்தோசமாக இருக்கிறது. அயிட்டியப்புல வேலா. "புறோக்கர், மாப்பிள்ளை வீட்டார் நல்ல வசதியானவர்கள் என்கிறீர். தமது வசதிக்கேற்ப சிலவேளை சீதனம் அதிகம் கேட்பினமோ" என கேட்டார் மாணிக்கம்.

"அதை எப்படி மாணிக்கத்தார் நான் உறுதியாக கூற முடியும். கவலைப்பட வேண்டாம். நான் சமாளிச்சு வெண்டு தாரன்." என தனக்கே உரிய வாய் வீச்சு திறன் மூலம் மாணிக்கத்திற்கு தெம்பூட்டினார்.

"சரி சரி முதல் இரண்டு பேரினது சாதகத்தை பார்ப்போம்.பொருந்தி வந்தால் எதிர் வரும் வெள்ளி காலை மணி பத்துக்கு பிள்ளையை பார்க்க சந்நதி சந்நிதானத்திற்கு மாப்பிள்ளை வீட்டாரை வரச்சொல்லுங்கோ. பிள்ளையை அவர்களுக்கு பிடித்தால் தொடர்ந்து அவர்களுடன் பேசலாம்." நீர் பிள்ளையின் சாதகத்தை எடுத்து சென்று மாப்பிள்ளை வீட்டாரிடம் இப்பவே கொடுத்து விடும். ஆறப்போடக் கூடாது. அது பின் பழம் கஞ்சியாய் போய்விடும். அவர்கள் பார்த்து பொருத்தத்தை தெரிந்து கொள்வதே நல்லது. நாமும் ஒருதடவை பொருத்தத்தை பார்த்து வைப்போம்.

சாதகப்பொருத்தம் பொருந்திய பின் நாலு நாட்களின் பின்னர் பெண் பார்க்கும் படலம் பற்றி புரோக்கர் மாப்பிள்ளை வீட்டாருடன் பெண் வீட்டாரின் விருப்பத்தை தெரிவித்து, அவர்களின் விருப்பத்துடன் அதே வெள்ளியில் பெண்ணை கோயிலில் பார்க்கலாம் என முடிவாக்கினார் புரோக்கர். அந்த நாளும் வந்தது. அன்றைய தினம் ராணியின் மனதில் பயம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுப்பு, சலிப்பு ஏற்பட்டு மனம் நொந்தாள்.

அவள் இதுவரையில் முன்பின் அறிமுகமற்ற பல மாப்பிள்ளைகள் முன் தன்னை அழகுற அலங்கரித்து அழகுப் பொம்மையாக நின்று காட்சி கொடுத்து கனவுகள் சிதைந்து வெறுப்புற்று ஏமாற்றத்தின் அந்தத்திற்கே சென்றுவிட்டாள்.

இன்று தான் கோயிலுக்கு வரவில்லை, தனக்கு இந்த பெண்பார்க்கும் சம்பிரதாயம் வெறுத்து விட்டது, கலியாணம் முடியாது கன்னியாகவே இருந்து விடுகிறேன் என சொல்லும் படி மனது கூறியது; ஆனால் தள்ளாத வயதிலும் எந்த உறவுகளின் துணை அற்று என்னை ஒருவனுக்கு மனைவி ஆக்கி அழகு பார்க்க அப்பா படும் கஷ்டம், மன வேதனை ஆகிய வற்றை நினைத்து தன் எண்ணங்கள், கவலைகளை ஓரம் கட்டி விருப்பமில்லாது தன்னை அலங்கரிக்க தொடங்கினாள்.

குறித்த பத்து மணிக்கு முன்னரே பஸ்ஸை பிடித்து கோயிலை அடைந்து ஆண்டவனை நினைத்த வண்ணம் மாப்பிள்ளை வீட்டாரின் வரவை எதிர் பார்த்து காத்திருந்தார் மாணிக்கம். பெண் வீட்டார் சார்பில் மாணிக்கமும், அவரது சகோதரி மற்றும் பக்கத்து வீட்டு இரு பெண்களுமே கோயிலுக்கு சென்றிருந்தனர்.

மாப்பிள்ளை வீட்டாரோ ஒரு வானிலும், காரிலும் பன்னிரண்டு பேர்களுக்கு குறைவில்லாது வந்திறங்கினர். மாப்பிள்ளை வீட்டார் வந்ததை கண்டு கொண்ட மாணிக்கம் காறடிக்கு ஓடிச்சென்று பணிவாக அவர்களை கை கூப்பி வரவேற்று கோயில் முகப்புக்கு அழைத்து வந்தார். வந்தவர்கள் மிகவும் ஆடம்பரமாக உடுத்தியும், அம்மனுக்கு சாத்திய சாத்துப்படிபோல் ஏராளமான நகைகளும் அணிந்திருந்தனர். இவற்றை அவதானித்த மாணிக்கம் இவ்வளவு வசதி படைத்தவர்கள் எனது பிள்ளையை ஏற்று கொள்ளாவார் களோ; என்ற சந்தேகம் தலை தூக்க தன் மனதில் சந்நிதியானை திரும்பவும் வேண்டினார்.

இரு வீட்டார் சார்பிலும் ஆலயத்தில் விசேட பூசைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கு செய்திருந்தார் அவர். பூசை மேள, தாள, மணியோசை, சங்கொகொலிகளுடன் ஆரம்பமாகியது. இரு வீட்டாரும் தத்தமது பிள்ளைகளின் நாமத்தில் சாமிக்கு அருச்சனை,பூசை வழிபாடு செய்து பிரசாதங்களை பெற்றுக்கொண்டனர். மாணிக்கம் பிரசாதங்களை பெற்று திருநீறு, சந்தணத்தை தன் மகள் ராணியின் நெற்றியில் இட்டதோடு மட்டுமல்லாது "மாப்பிள்ளையின் நெற்றியிலும் அவரின் அனுமதியுடன் இட்டார்." இச்செயலை மாப்பிள்ளையின் பக்கத்தில் அனை வரும் ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

பூசை முடிவுற்றதும் சந்நிதானத்தில் "முன்பின் அறிமுக மற்ற நான்கு விழிகள் சமாந்தர நேர்கோட்டில் எதிர் கொண்டு மோதி நின்றன." மாப்பிள்ளை திரும்ப திரும்ப பெண்ணை பார்த்தார். அவளின் ஊமை முகம்,விழிகளின் கவர்ச்சி மாப்பிள்ளையை கவர்ந்து விட்டது.

மாணிக்கத்தின் மனது பதை பதைத்த படியே இருந்தது. மாப்பிள்ளை என்ன முடிவை சொல்ல போகிறாரோ என ஏங்கியது. பெத்த மனம் அல்லவா?

மாப்பிள்ளையின் சிறிய தாய் பெறா மகனின் காதில் எதோ குசு குசுத்தா. மாப்பிள்ளையும் சிரித்த வாறு சிறிய தாயின் காதில் எதோ சொன்னார். சிறிய தாய் மாப்பிள்ளையின் சார்பாக மாணிக்கத்தை பார்த்து, மாப்பிள்ளைக்கு உங்கள் மகளை நன்றாக பிடித்து விட்டது. மேற்கொண்டு என்ன செய்ய வேண்டுமோ அதை நாங்கள் ஒன்றாக பேசி முடிவெடுப்போம் என்றா. இரு பகுதியினரும் ஆலயத்தை விட்டு வெளியில் வந்து மரநிழலின் கீழ் உள்ள மணல் தரையில் அமர்ந்தபடி, கலியாண பேச்சுக் காலுக்கான திகதியும், நேரமும் முடிவு செய்யப் பட்டது. பெண் வீட்டில் பேசுவது பொருத்தமாக இருக்கும் என புரோக்கர் சொன்னபோது! இரு பக்கமும் ஏற்றுக் கொண்டனர்.

சம்மந்த பேச்சுக்கு பெண் வீட்டுக்கு சென்ற மாப்பிள்ளை வீட்டாரை பண்பாக உபசரித்து பெண் வீட்டார் தமது பெரும் தன்மையை காட்டி நின்றார்கள். தொடர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சில் மாப்பிள்ளையின் தந்தை "ஐம்பது சவரன் நகை, ஐந்து இலட்சம் பணம், வீடு என்பன சீதனமாக மாப்பிள்ளைக்கு தர வேண்டும் என கேட்டார்."

இதை கேட்ட மாணிக்கத்துக்கு தூக்கி வாரி போட்டது. தலையில் இடி விழுந்தது போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது. அவர் கதி கலங்கி சோகமாக புறோக்கரை பார்த்தார். புறோக்கர் அவரின் பார்வையின் அர்த்தத்தை புரிந்து கொண்டவர் போல கண்களால் கதை பேசி அவரை ஆறுதல் படுத்தினார்.

பின்னர் புறோக்கர் மாப்பிள்ளையின் தகப்பனிடம் ஐயா! நீங்கள் கேட்ட முழு சீதணத்தை தரும் நிலையில் பெண்ணின் அப்பா இல்லை.அவர் ஒரு ஓய்வு பெற்ற வாத்தி யார். நீங்கள் கேட்ட பணத்தை அவரால் திரட்ட முடியாது. அவர் இந்த வயதில் கடன் பட முடியாது. எவரும் அவருக்கு கடனும் கொடுக்க மாட்டார்கள். அப்படி கடன் பட்டாலும் அதை திருப்பி அடைக்க எந்த வழியும் அவரிடம் இல்லை. இந்த வீடு, காணி, பிள்ளைக்கு போடக்கூடிய நகை, கொஞ்ச சீதனப் பணம் மட்டுமே அவரால் தர முடியும். நான் உண்மையை தான் சொல்லுகிறேன். நீங்கள் நகை, சீதன பணத்தில் கொஞ்சம் பெரிய மனது பண்ணி கருணை காட்டுங்கோ.

புறோக்கரே! எனது மூத்த மகனுக்கு பத்து இலட்சம் சீதனம், கார், பங்களா, பெரும் தொகை நகை என வாங்கினோம். அவனைப்போலவே இளையவனும் கை நிறைய சம்பாதிக்கிறான். இளையவனுக்கு எப்படி குறைத்து வாங்க முடியும் என கேள்வி எழுப்பினார்?

ஐயா! நீங்கள் சொல்வது சரிதான். நானும் ஏற்று கொள்ளுகிறன். ஆனால் நீங்கள் இப்படியான ஒரு குடும்பத்தில் பெண் எடுக்க குடுத்து வைத்திருக்க வேணும். நான் புறோக்கர் என்ற தோரணையில் சொல்ல வில்லை. எனக்கும் கலியாண வயதில் இரண்டு பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் சாட்சியாக சொல்லுகிறன். இந்த வாய்பேச மாட்டாத பிள்ளை தங்கப்பவுண். நீங்களே கூறுகிறீர்கள் மாப்பிள்ளை கை நிறைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பாதிக்கிறார் என. அதை விட ஓர் ஊமைக்கு வாழ்வு கொடுத்தால் உங்களுக்கு இப்ப இருக்கும் மதிப்பு, மரியாதையை விட மேலும் அதிக மதிப்பு உங்கள் வீடு தேடி வரும். உங்கள் மகனுக்கு வேலை செய்யும் கந்தோரில் மதிப்பு கூடும். ஆண்டவன் வரை உங்களுக்கு பெரும் கருணை கிடைக்கும்.

"முன்னர் வந்த மாப்பிள்ளை எல்லோரும் பெண்ணை பார்த்து விட்டு பின்னர் சொல்லுகிறோம், கடிதம் போடுகிறோம் என கூறி செல்வதே வழக்கம். ஆனால் உங்கள் மகன் மட்டுமே பார்த்த உடனே பிள்ளையை பிடித்து விட்டதாக சொன்னார்." அதனால் தான் நான் கொஞ்சம் கூடுதல் அக்கறை காட்டுகிறேன். அவரின் ஆசையை கெடுக்கிறீர்களோ என மனது சொல்லுது. ஐயா! எனக்கு நீங்கள் புறோக்கர் பீஸ் தர வேண்டாம். இன்னும் சிறிது காலம் அவகாசம் எடுத்து பெண் வீட்டார் பற்றி அக்கம், பக்கம் தீர விசாரித்து நல்ல முடிவுக்கு வாங்கோ. இதற்கு மேலாக பெண் வீட்டார் பற்றி சொல்ல, தர எதுவும் இல்லை. ஒன்றை சொல்லி முடிக்கிறேன். "எனக்கு கலியாண வயதில் ஓர் ஆண் பிள்ளை இருந்திருந்தால் இந்த ஊமை பிள்ளையை நான் எப்பவோ எனது மருமகள் ஆக்கியிருப்பேன்."

"நடப்பவற்றை அவதானித்த வண்ணம் எதுவுமே பேசாது கவலையுடன் மிக அமைதியாக இருந்தார் மாணிக்கம்."

மாப்பிள்ளையின் அண்ணன் தகப்பனை வெளியில் அழைத்து சென்று, அப்பா! தம்பிக்கு பெட்டையை பிடித்து விட்டது. ஏழைகளாக இருந்தாலும் மிகுந்த பண்புள்ள குடும்பமாக தெரிகிறது. எனக்கு பணக்கார பெண்ணாக பார்த்து அதிக சீதனம் வாங்கி செய்து வைத்தீர்கள். எமது வீட்டில் என்ன நடக்கிறது என நேரிலே பாக்கிறியள் தானே. அவள் பண திமிரில் என்னை, உங்களை, அம்மாவை மதிப்பதே இல்லை. என்னை எடுத்தெறிந்து பேசுகிறாள். அது பறவாய் இல்லை. வயது போன உங்களை, அம்மாவை கவனிப்பது இல்லை. வீட்டில் செய்யும் எந்த காரியத்தையும் விருப்பற்று வேண்டா வெறுப்புடன் செய்கிறாள். நாங்கள் எல்லோரும் அக்கம்,பக்கம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்துக்கு பயந்து எல்லாவற்றையும் பொறுத்த படி இருக்கிறோம். அப்பா! இந்த பொறுமை எவ்வளவு காலத்துக்கு? எங்களுக்கு பெண் சகோதரம் இல்லை. வயது போக உங்களையும், அம்மாவையும் அன்பாக பராமரிக்க நல்ல குடும்ப பாங்குள்ள பெண் தேவை. நீங்கள் இருவரும் சாகும் போது, கவலையுடன் சாகக்கூடாது. எங்கள் இரு பொடியங்களையும் தாயை போல பார்த்திட நல்ல மருமகள் இருக்கிறாள் என்ற நம்பிக்கையுடன் சாக வேணும்.

"அந்த மருமகள் இந்த ஊமை பெண்ணாக ஏன் இருக்ககூடாது?" எங்களுக்கு போதிய வசதி இருக்கு அப்பா. சீதனத்தை எதிர் பாராதையுங்கோ. அல்லும் பகலும் அவர்களுடன் பிழங்கும் புறோக்கர் கடைசியாக சொன்ன வார்த்தையை கேட்டீர்கள் தானே? நாங்கள் சந்நதி கோயிலுக்கு பெண் பார்க்க சென்ற போதும், இன்று இங்கு வந்த போதும் பெண்ணின் அப்பாவும், உறவுகளும் எவ்வளவு பண்புடன் மரியாதை தந்து உபசரித்தார்கள். சந்நதி கோவிலில் தம்பியை கேட்டு அவனின் அனுமதியுடன் நீறு, சந்தனம் அவன் நெற்றியில் இட்டாரே பெண்ணின் அப்பா. இந்த பண்பு யாருக்கு வரும் அப்பா? அது எங்களிடமும் இல்லையே?

எனக்கு பெண்பார்க்க சென்ற போது; பெண்வீட்டார் தங்களின் சொத்து, கடைகள், அரசியல் செல்வாக்கு என்பவற்றை பெருமையாக சொன்னார்களே தவிர மாப்பிள்ளை வீட்டாரை எப்படி வர வேற்க வேண்டும், எப்படி பேச வேண்டும் என்பது கூட தெரியாமல் நடந்து கொண்டது உங்களுக்கு தெரியும். அப்பா, பல இடங்களில் பெண்ணின் அப்பா படிப்பித்து இருக்கிறார். அவரிடம் படித்து இப்ப பல்கலை கழக விரிவுரையாளர்களாக இருக்கும் கா.சிவத்தம்பி, சண்முகதாசன், செந்தில்நாதன், நித்தியானந்தன், குணராசா ஆகியோர் பற்றி அவர் மூச்சே விடவில்லை.

"அப்பா. வலது குறைந்த மனிதர்கள் குடும்பத்தில் மிகவும் பாசமாக இருப்பார்கள். அத்தோடு பெட்டை பிறவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊமை இல்லை. இடையில் ஏற்பட்டது. எங்கள் குடும்பத்திற்கு இந்த ஊமைப்பெண் நிச்சயமாக ஒளி விளக்காய் இருப்பாள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. தம்பியும் ஆசைப்படுகிறான். அவனின் ஆசைக்கு குறுக்கே ஏன் நிற்பான்? சீதனத்தை பார்க்காமல் இப்பெண்ணையே அவனுக்கு முடித்து வைப்பம். அவர்கள் இயன்றதை கொடுக்கட்டும்."

தனிமையில் பேசிய இருவரும் வீட்டினுள் சென்று தமக்கான கதிரைகளில் அமர்ந்தனர். இதே நேரம் அங்கு நிசப்தம் நிலவியது. எவருமே ஒன்றும் பேசவில்லை. புறோக்கர் மௌனத்தை கலைத்து, "ஐயா! பேசாமல் இருந்தால் எப்படி? நீங்கள் சொல்ல போகிற முடிவில்தான் இந்த ஊமை பெண்ணின் ஒளி மயமான எதிர்கால நல் வாழ்வு தங்கியுள்ளது. எதுவாக இருந்தாலும் உங்கள் முடிவை தயக்கமில்லாமல் வெளிப்படையாக சொல்லுங்கோ ஐயா என்றார்.

"எப்படியான முடிவை சொல்லப்போகிறார் என்ற ஏக்கத்தில் மாணிக்கத்தாரின் நெஞ்சு பட பட என அடித்து கொண்டது. இதமான தென்னம் கீற்று தென்றல் வீசிய அந்த சாயந்தர பொழுதிலும், அவருக்கு வியர்த்து கொட்டியது. தோளில் போட்டிருந்த வெள்ளை துண்டால் நெற்றியிலிருந்து கழுத்து வரை இரு தடவைகள் கசிந்திட்ட வியர்வையை துடைத்து, மீண்டும் துண்டை தொழில் போட்டு மாப்பிள்ளை யின் தகப்பனையே கண் இமைக்காது பார்த்த படி இருந்தார்."

மாப்பிள்ளையின் அப்பா ஒரு செருமல் செருமி, தொண்டையை த்டவி நாவில் ஊறிய எச்சிலை விழுங்கி விட்டு, நான் இப்ப சொல்ல போகும் விடயம் இங்கு கூடி இருக்கும் அனைவருக்கும் ஆச்சரியத்தையும், சந்தோசத்தையும் கொடுக்கும். என்னடா முதல் அது, இது தரவேணும் என கேட்டனான். இப்ப அவற்றை தவிர்த்து இப்படி சொல்லு கிறான் எண்டு நீங்கள் நினைக்கலாம். "எனது மகனுக்கு பெண்ணை பிடித்து விட்டது. அவனின் விருப்புதான் எங்கள் விருப்பம். இந்த கலியாணத்தில் எங்களுக்கு பூரண சம்மதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணுக்கு நீங்கள் உங்களால் இயன்றதை கொடுக்கலாம்." என்றார்.

கலியாணம் முடிவாகிய திருப்பதியில் இரு பக்கமும் குதூகலமாக சம்பாசித்து லீலா வாக்கிய பஞ்சாங்கத்தை பார்த்து உடனேயே திருமண நாளையும் குறித்ததோடு, கொற்றாவத்தை செட்டிதறை பிள்ளையார் ஆலய கலியாண மண்டபத்தில் திருமணத்தை நடாத்துவதெனவும் தீர்மானித்து கொண்டனர். பேச்சு முடிந்ததும் மாப்பிள்ளை வீட்டார் விடை பெற்று செல்லும் போது! பெண்வீட்டார் அவர்களது வாகனம் வரை சென்று வழியனுப்பி வைத்தனர்.

புறோக்கர் பொன்னையாவை நோக்கி கைகூப்பி கும்பிட்டு, நன்றி சொல்லி வேறு ஒரு புறோக்கராக இருந்திருந் தால் என் பிள்ளையின் கலியாணம் குழம்பி இருக்கும். உமது மகளின் சம்மந்தம் போல ஆர்வம் காட்டி, உமது பீசையும் எதிர்பாராது நயமாக பேசி ஒப்பேத்தி போட்டீர்; என சந்தோசத்துடன் கூறினார் மாணிக்கம்.

வயது போன வாத்தியார் தன்னை கையெடுத்து கும்பிடு வதை ஜீரணிக்க முடியாமல் சங்கடப்பட்ட புறோக்கர், நான் பெரிசாக எதையும் செய்து விடவில்லை. உண்மையை மட்டும் அவர்களுக்கு சொன்னேன். அவ்வளவுதான். பல பிரசித்தி பெற்ற கல்விமான்களை, பல்கலைக்கழக விரிவுரையாளர்களை உருவாக்கிய நீங்கள் என்னை கையெடுத்து கும்பிடலாமா? என்னை கும்பிடாமல் அந்த சந்நதியானை வேண்டி, அவனுக்கு நன்றி சொல்லுங்கோ என்றார்.

மகளின் கலியாணம் முடிவானதை எண்ணி அளவற்ற ஆனந்தம் அடைந்தார். தனது அறுபத்து ஐந்து வருட மானிட வாழ்வில் இன்றே முழு நிலாவை முதல், முதல் பார்ப்பது போன்று பூரித்தார். அருமை மகள் இல்லறத்துள் புகுந்து பேரப்பிள்ளைகளை ஈன்று தன் கையில் தரப்போகிறாள் என புளகாங்கிதம் அடைந்தார்.

பரந்து விரிந்தது "மகிழ்ச்சியின் எல்லை வானம் வரை."

- 04.10.15. வீரகேசரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறிகொடுத்த பின்பும் வாழத் துடிப்பவர்கள்

கிடுகால் அமைக்கப்பட்ட தாவாரத்தின் கீழ் நிறுத்தியிருந்த மிதிவண்டியை வீட்டின் முன் வாசல் பக்கம் மெதுவாக உருட்டிவந்து இரும்பிலாலான பின் இஸ்ராண்டை தட்டி சைக்கிளை நிற்பாட்டி விட்டு, மனைவியின் செவியில் விழுமாறு எல்லாம் போட்டு முடிஞ்சுதா? என உரத்த குரலில் கேட்டார் இரத்தினம்.

ஓம்...ஓம்...முடிஞ்சுது. கொஞ்சம் பொறுங்கோ. எல்லாவற்றையும் பைகளுக்குள் போட்டுக்கொண்டு இருக்கிறேன். இதோ வந்துவிடுவேன் என குசினிக்குள் இருந்து குரல் கொடுத்தாள்மனைவி பூபதி.

இரத்தினம் சைக்கிள் கரியரின் குறுக்கு வாட்டில் அகன்றதும்,சற்று நீளமானதுமான மரப்பலகையை ஆடாமல்,அசையாமல் இறுக்கமாக கட்டி, அதன் மேல் அலுமீனியத்திலான சதுரப்பெட்டியை வைத்து அதையும் கரியருடன் இறுக பிணைத்து, மனைவி சுடச்சுட கொண்டு வந்து கொடுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதிகளை அலுமீனிய பெட்டிக்குள் வைத்து அவற்றை மூடும் போது! கடலை,வடையின் வாசனை அவன் மூக்கை துளைத்தன.

அவற்றின் வாசனையால் சில கடலைகளை எடுத்து வாயில் போட்டு கொறித்தபடி ஓ நல்ல சுவையாக இருக்கிறது பூபதி உன்னைப்போல! என மெல்லிய கிண்டலுடன் கூறி மனைவியை பார்த்தவாறு சதுரப்பெட்டியை மூடி சரி பார்த்து நிற்க, அவள் திண்ணையில் கிடந்த வேறு இரு பைகளை எடுத்து வந்து சைக்கிள் கான்டிலின் இரு பக்கமும் தொங்க விட்டாள்.

அப்ப நான் கிளம்புறன் பூபதி. கடலோர வியாபாரம். அந்திக்கு முன் பொழுது சாயமுன்னர் எல்லா சரக்கையும் விற்று காசாக்கி போட வேணும். பிந்தினால் காசை பார்க்க முடியாது. முருகா நீதான் இந்த ஏழைகளுக்கு உதவவேணும் என ஆண்டவனை வேண்டியபடி தம்பி கவனம் என்று மகனை ஒருதரம் மனைவிக்கு நினைவூட்டி சைக்கிள் இஸ்ராண்டை தன் வலது காலால் மெதுவாக தட்டி புறப்பட தயாரானார்.

அதேநேரம் நானும் கூட வாறனப்பா என மகன் சிரஞ்சீவி குரல் கொடுத்தான். அங்கெல்லாம் நீ வரக்கூடாது. அப்பாவைப்போல வாழ்க்கையில் கஷ்டப்படாது நீ நல்லாக படித்து உத்தியோகம் பார்க்கவேணும்.அப்பதானே குட்டி உங்கடை அம்மா சந்தோசப்படுவாள் என்றான்.

நாளைக்கு பள்ளிக்கூடம் இல்லைத்தானே அப்பா. இண்டைக்கு மட்டும் வாறன். நான் கடற்கரையை பார்ப்பன், வாற சனங்களை பார்ப்பன். உங்களை தொந்தரவு செய்ய மாட்டன் என்றான் சிரஞ்சீவி.

பிள்ளை ஆசைப்படுகுது. இண்டைக்கு மட்டும் கூட்டிக் கொண்டு போங்கோவன். அவன் நெடுக புத்தகத்தோடேயே இருக்கிறது? என்றாள் தாய் பாச மிகுதியாய்.

பின்பக்கம் கடலைப்பெட்டி, முன்பக்கம் காண்டில் திருப்ப முடியாத அளவுக்கு சாமான்கள். இவனை எப்படி ஏத்துவது? என்ற படி சரி வா, என மகனை கூப்பிட்ட உடனே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதூகலத்துடன் துள்ளி, குத்தித்து ஓடிவந்தான் சையிக்கிள் நோக்கி.

தன் இடது காலை நிலத்தில் ஊன்றி சீற்றில் அமர்ந்த வண்ணம், மகனை சைக்கிள் வாரில் இருத்தி மெது மெதுவாக சைக்கிளை மிதிக்க தொடங்கினார். துவிச்சக்கர வண்டி சகல சுமைகளையும் சுமந்த வண்ணம் கொழும்பு கோல்பேஸ் கடற்கரை நோக்கி பயணமானது.

அரை மணித்தியால பயணத்தின் பின் கோல்பேஸில் இறங்கி மணலிலுள் சைக்கிளை உருட்ட முடியாது கஷ்டப் பட்ட வேளை! சிரஞ்சீவி பின்பக்கம் சைக்கிளை தள்ளி தகப்பனுக்கு உதவினான்.

சைக்கிளை நிற்பாட்டி தான் கொண்டு சென்ற தறுப் பாளை மணலை பரவி ஒழுங்குபடுத்தி அதன்மேல் விரித்து அதன்மேல் வடை,சுண்டலை சிறிது பரப்பி தான் உட்கார்ந்த வாறு "கடல... கடல... வட... வட சாயா... சாயா" என கூவி னான். தந்தை இப்படி கூவுவதை மகன் புதினமாக பார்த்தான்.

சுத்தமான கடற்காற்றை சுவாசிக்க வந்தவர்கள், பொழுது போக்க வந்தவர்கள், வெளிநாட்டினர், அரை குறை ஆடையுடன் வெய்யில் காய்பவர்கள், தேகப்பயிற்சி செய்பவர் கள், பந்து விளையாடுபவர்கள், பட்டம் விடுபவர்கள், கையுடன் கை கோத்தபடி சல்லாபம் புரிந்திடும் காதலர்கள், குறுக்கும் நெடுக்கும் ஓடிவிளையாடும் குழந்தைகள் போன்றோரை அதிசயமாக பார்த்தான் சிரஞ்சீவி. அவனுக்கு இவ்வ அனைத்தும் புதிய விடயங்களாகவே தென்பட்டது. வானில் விதம் விதமாக, பலவர்ண நிறங்களில் அந்தரத்தில் பறந்திடும் பட்டங்களை கண்டு ஆனந்தப்பட்டான். ஓடி விளையாடும் குழந்தைகளை பார்த்தபடியே நின்றான். இதை அவதானித்த இரத்தினம் நீயும் அப்பிள்ளைகள் மாதிரி மண் விளையாட போகிறாயா? என கேட்டார். அவன் உடனே ஆம் அப்பா என்றான். சரி தூரம் போகாது தன் வியாபார இடத்தின் பின் பக்கம் விளையாடும் படி கூறினார். அவனும் அங்கு நின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணை அளைந்து விளையாடுவதும், பறக்கும் பட்டங்களை பார்ப்பதுமாக இருந்தான். மகன் மீதும் ஒரு கண் வைத்தபடியே தனது வியாபாரத்திலும் கவனம் செலுத்தியபடி இருந்தார் இரத்தினம்.

அவன் விளையாடி களைத்து வந்தபோது! அவனை தறுப்பாளில் இருத்தி தேனீரும், சுண்டலும் கொடுத்தார். அவன் சாப்பிட்டபடியே மீண்டும் தகப்பன் கடல... கடல... வட... வட...என கூவியபோது! கடலையை கொறித்தவாறு தானும் தந்தையுடன் சேர்ந்து கடல.. வட.. என கூவினான்.

குறுக்கும்,நெடுக்குமாய் சென்றவர்கள் சிறுவனின் குரல் கேட்டு அங்கு வந்து இரத்தினத்திடம் சுண்டல்,வடை வாங்கி உண்டனர். பேப்பரை கூம்பு வடிவில் சுருட்டி அதனுள் கடலையை போட்டு, வடையை அலுமீனிய பேப்பரில் சம்பலுடன் சேர்த்து கொடுத்து வியாபரத்தை செய்தாலும், அவர்களிடமிருந்து பணம் வாங்குவதில் கருத்தாக இருந்த தோடு, மீதி சில்லறை பணத்தையும் கொடுக்க தவறவில்லை.

இருந்தபோதும் சில்லறைதான் அவருக்கு பிரச்சனை யாக உள்ளது. பணம் படைத்தவர்கள், நல்ல மனம் படைத்தவர்கள் மீதி சில்லறையை அதிகம் எதிர்பார்ப்ப தில்லை. ஆனால் கருமிகள்,ஏழைகள் காவலிருந்து மீதிப் பணத்தை பெற்று செல்வர். வாடிக்கையாளர் மீதிப்பணம் பெறாது செல்லும் நாட்களில் அவருக்கு கூடுதல் இலாபம் கிடைக்கும். மழை நாட்களில் வியாபாரம் படுத்து விடும். பல முறை சரக்கு விற்பனை இல்லாது வீடு எடுத்து சென்று அருகிலுள்ள சிங்கள ஏழை கைம் பெண்ணுக்கு கொடுப்பார். அப்பெண் தானும், தனது இரு பிள்ளைகளும் உண்டு, தான் வளர்த்திடும் ஆடுகளுக்கு மீதியை உணவாக கொடுப்பாள்.

இன்று மகனை கூடவே அழைத்து சென்றதோ, என்னவோ அத்தனை சரக்குகளும் மீதி இல்லாது விற்று தீர்த்து விட்டது. மீண்டும் முருகனை இரு கரம் கூப்பி வேண்டி, நன்றி சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரக்குகள் அனைத்தும் விற்று தீர்த்து காசான திருப்தியில் மகனை அணைத்து முத்தம் கொடுத்து,தறுபாளை தட்டி மணலை போக்கி மடித்து, வெறுமையான பாத்திரங் களை சைக்கிளில் கட்டி, மகனையும் சுமந்த வண்ணம் மாலைப் பொழுதில் களைப்புடன் வீடு திரும்பினார்.

வீட்டு கேற்றை திறந்து சைக்கிளை உறுட்டியபடி உள் சென்றவேளை! பூபதி ஓடிவந்து மகனை சைக்கிள் பாறிலிருந்து தூக்கி முத்தமிட்டாள். அதே நேரம் சரக்கு அனைத்தும் விற்று தீர்த்து விட்டதாக மனைவிக்கு கூறி, மகனை சுட்டிகாட்டி கோல்பேஸில் நடந்தனவற்றை கூறினார். அவள் திரும்பவும் அவனை அள்ளி முத்தம் கொடுத்தாள்.

இப்படியே இரத்தினம் வயிற்று பிழைப்புக்காக கோல்பேஸில் தினமும் வியாபாரம் செய்தபடி, இடைக்கிடை மகனையும் அழைத்து செல்ல தொடங்கினார். ஒரு நடுத்தர சிங்கள குடும்பம் தமது நாலு வயது மகனுடன் முதல் முதல் இரத்தினத்திடம் சுண்டல் வாங்கினார்கள். தனது தந்தை ரவுண்டான சரைக்குள் சுண்டல் வாங்கியதை பார்த்த அந்த குழந்தை தனக்கும் அப்படி வேணும் என்று அடம்பிடித்தது. அவனது பெற்றோர் அவனை சமாதனப்படுத்த முயன்றார்கள். இதை கவனித்த இரத்தினம் "பொட்டகிண்ட ஐயெ" என சிங்களத்தில் கூறி அவர்களை தடுத்து நிறுத்தி சிறு சரை சுருட்டி வெண்காயம், மிளகாய் அற்ற சுண்டலை தெரிந்து அச்சரைக்குள் போட்டு அக்குழந்தையின் கையில் கொடுத்தார். தனக்கும் சுண்டல் கிடைத்ததையிட்டு பெற்றோருக்கு காட்டி அளவில்லா மகிழ்ச்சி பிரதாபம் செய்தது. சிறுவனின் பெற்றோர் இரத்தினத்துக்கு நன்றி சொல்லி சென்றனர்.

அன்றிலிருந்து தன்னிடம் கடலை, வடை வாங்க வருபவர்களின் குழந்தைகளுக்கு சுண்டல் கொடுப்பதற்காக சிறு கடதாசிப்பைகளை தயார் படுத்துமாறு மனையியிடம் கூறினார். அவளும் கோதுமை மா பசை மூலம்சிறு பைகளை தயார் செய்து கணவனுக்கு உதவினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே சிங்கள குடும்பம் கடற்கரை வரும்போது! அவர்களின் குழந்தை நேரடியாக ஓடிச்சென்று இரத்தினத்தின் கடை முன் நிற்பான். இரத்தினமும் சிரித்த படி அவனுக்கு அன்பாக சுண்டலை கொடுப்பார். இப்படியான பழக்கத்தில் தொடங்கிய புரிந்துணர்வு, காலப்போக்கில் இரத்தினத்திற்கும் சிங்கள குடும்பத்துக்கும் இடையில் நல்ல நட்பு வளர காரணமாகியது.

ஒரு அந்தி நேரம் இரத்தினம் வியாபரத்தை முடித்து சகல சாமான்களையும் சைக்கிள் கரியரில் வைத்து கட்டி, தறுப்பாளை உதறி கரியரில் செருகி சகலதையும் சரிபார்த்து வீட்டிற்கு புறப்பட ஆயத்தமான வேளை! அந்த சிங்கள குடும்பம் அங்கே வந்தனர்.

அக்குடும்பம் இரத்தினத்தை பார்த்து நீங்கள் எந்த ஊர்? ஏன் சுண்டல் வியாபாரம் செய்கின்றீர்கள்? வேறு தொழில் ஏதும் தெரியாதா? அல்லது வசதி இல்லையா? என நட்புடன் வினாவினர்.

இக்கேள்வியை சற்றும் எதிர்பாராத இரத்தினம் அமைதியாக நின்றதோடு, அவரது கண்களும் கலங்கின. இதை அவதானித்த அக்குடும்பம் "மாவத்சமா வென்டோன்னே" என்னை மன்னித்து கொள்ளுங்கள். "அன்டன் எப்பா.அஸ்ஸ சுத்த கரண்ட" அழவேண்டாம். கண்களை துடைத்து கொள்ளுங்கோ. தெரியாமல் உங்கள் மனதை புண்படுத்தி விட்டோம். என்று கூறியவாறு சங்கடப்பட்டு நின்றனர்.

பரவாயில்லை மாத்தையா என கூறி, தனது குடும்பம் எப்படி வாழ்ந்தது, குடும்பத்திற்கு என்ன நடந்தது, தாம் எப்படியெல்லாம் பாதிக்கப்பட்டு, அகதியாக இங்கு சுண்டல் விற்கும் நிலைக்கு வந்தேன் என்பதை நிலத்தை பார்த்த வண்ணம் கரகரத்த குரலில் தமது சோக கதையை கூறத்தொடங்கினார்.

எனது ஊர் வன்னி ஒட்டிசுட்டான். பசுமை நிறைந்த வயல் வெளி, நிழல் தரும் விருட்சங்கள், பட்சிகளின் உறைவிடம், குளம்,குட்டையை கொண்ட விவசாய பூமி. சோத்துக்கு குறைவில்லாத பூமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் குடுப்பத்தில் ஐந்து பேர்கள். மூத்தவனுக்கு பதினாறு வயது, மகளுக்கு பதினைந்து வயது. சுட்டு விரலால் கடைக்குட்டியை சுட்டி காட்டி இவனுக்கு எட்டு வயது. மூத்த இரு பிள்ளைகளும் படித்துக்கொண்டு இருந்தனர். பாழாப் போன நாட்டு பிரச்சனை என் குடும்பத்தை சின்னா பின்ன மாக்கி மீளா துயரத்தில் எம்மை தள்ளி விட்டது மாத்தையா.

நான் நல்ல விவசாயி. நாலு ஏக்கர் சொந்த நிலம். அவற்றில் சொந்தமாக உழவு இயந்திரம் வைத்து இரண்டு போக விவசாயம் செய்து வந்தேன். என் காணிக்குள் இரு கிணறுகளும் உண்டு. ஒவ்வொரு கிணற்றை சுற்றி வாழைகளும், தென்னைகளும் நல்ல பிரஜோசனம் தந்தன. சிறிய ஓட்டு வீடு. வருமானம் குடும்பத்துக்கு போதுமானது. ஒவ்வொரு அறுவடையிலும் மனைவியின் கெட்டித்தனத்தால் கொஞ்ச நகைகளும்,போதுமான பணமும் சேமித்து வைத்திருந்தோம். பிள்ளை குட்டிகளுடன் மகிழ்வான வாழ்க்கையை உங்களைப் போல வாழ்ந்தோம் மாத்தையா. இப்போ எல்லாவற்றையும் பறிகொடுத்து இவனுக்காக வேதனையை சுமந்த வண்ணம் ஊர்விட்டு தெரியாத முகங்கள், புரியாத மொழியுள்ள ஊரில் வாழுகிறோம். இங்கு யாருமே எம்மை மனிதர்களாக பார்க்க வில்லை. வித்தியாசமாக பார்க்கிறார்கள், பேசுகிறார்கள். பயம், அச்சத்தால் ஒதுங்கி,ஒதுங்கி இவனுக்காக உயிர் வாழுகிறோம்.

உறவுகள், சுற்றத்துடன் கூடி குடித்து, உண்டு மகிழ்ந்து, நண்பர்களுடன் அரட்டை அடித்து,கோயில் குளம் என சுதந்திரமாக சிறகடித்து வாழ்ந்தோம். சிறகை ஒடித்து விட்டாவது எங்களை வாழ விட்டிருக்கலாம். உயிர்களையே எடுத்து விட்டார்கள் பாவிகள்.

2007ல் நான், மனைவி, மகள் மூவரும் வவுனியா சென்றவேளை! வவுனியா இராணுவ முகாமுக்கு முன் எமது பஸ்ஸை வழி மறித்த இராணுவம், அதில் பயணித்த இளம் வயதினர் பலரை சந்தேகத்தின் பெயரில் கைது செய்தனர். அவர்களில் "எமது மகளும் ஒருவர்". நானும், மனைவியும் எமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள் படிக்கின்றா. அவள் புலி இல்லை. அத்தோடு ஆதரவு கூட கிடையாது. நாம் எமது பாட்டில் வாழுகின்றோம். எமது மகளை விட்டு விடுங்கோ என அந்த இராணுவத்தினரின் காலில் விழுந்து கெஞ்சினோம், கதறினோம். ஆனால் எங்கள் அழுகுரல் அந்த இரக்கமற்ற இராணுவத்தின் காதில் விழ வில்லை.

பின்னர் தினமும் வவுனியா முகாமுக்கு சென்று மகளின் படத்தை காண்பித்து அவளை விட்டுவிடுமாறு கதறினோம். மனித உரிமை அமைப்பு, செஞ்சிலுவை சங்கம், சமாதானத் திற்கான அமைப்பு போன்றனவற்றிற்கு எழுத்து மூலம் முறையிட்டு அலைந்தோம். ஆனால் மகள் கிடைக்கவில்லை.

ஒரு வருடத்தின் பின்னர் எனது மகளுடன் கைதான வேறு பிள்ளை மூலம் பேரிடியான செய்தி அறிந்து அதிர்ந்து போனோம். இராணுவம் முகாமில் வைத்து "நீ புலிதானே, புலிக்கு சப்போட்டு தானே என கேட்டு அடித்து துன்புறுத்திய போது! எமது மகள், இல்லை நான் படிக்கிறேன். என திரும்ப, திரும்ப சொல்லியபோதும்; நம்பாது இரக்கமற்ற இராணுவம் சித்திரவதை செய்து கொன்று புதைத்து விட்டனர். பொடி கூட எமக்கு தரப்படவில்லை".

மூத்த மகன் பாடசாலை விட்டு வீடு திரும்பும்போது! பற்றைக்குள் மறைந்திருந்த "இயக்கம் தம்முடன் போராட்டத் துக்கு வலுக்கட்டாயமாக இணைப்பதற்கு மகனின் விருப்பமில்லாமலே பிடித்து சென்றனர். ஒரு மாத பயிற்சியின் பின் மகன் மறுக்க, மறுக்க வலுக்கட்டாயமாக சண்டைக்கு அனுப்பியுள்ளனர். பிடித்து சென்ற மூன்று மாதத்தின் பின்னர் உயிரற்ற மகனின் உடலை எம்மிடம் கொண்டு வந்து தந்தனர் பாவிகள்." என சொல்லி வாய்விட்டு அழுதார்.

தகப்பன் அழுவதை எதுவும் புரியாதவனாக அண்ணாந்து பார்த்தபடி சிரஞ்சீவி நின்றவேளை, அந்த சிங்கள தாய் அவனை கட்டி அணைத்தாள் இரக்கத்துடன்.

எங்கள் இரு பிள்ளைகளின் இழப்பு எம்மிருவரின் ஈரல் குலையை அறுத்து விட்டது. வேதனை தாங்காது துடித்தோம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தினோம், கதறினோம். பிள்ளைகளை கொன்றவர்களுக்கு இடியேறு விழுமென மனைவி சாபம் போட்டாள். கடவுளை திட்டினாள். குரல் அடைத்து, தொண்டை அடைத்து விக்கி, விக்கி தினம், தினம் அழுவாள். மயங்கி விழுவாள்.

நான் பயந்து போய் டாக்டரிடம் அழைத்து சென்று காட்டினேன். அவர் மனையியை நன்றாக சோதனை செய்த பின்னர், அவளுக்கு எதுவித நோயும் உடம்பில் இல்லை. பிள்ளைகளின் இழப்பு அவள் மனதை நன்றாக பாத்தித்து விட்டது". இதிலிருந்து மீள வேண்டுமானால் இயன்றவரை பறி போன பிள்ளைகளின் நினைப்பு வராத மாதிரி பார்த்துக் கொள்ளுங்கோ என்றார்.

அது எப்படி முடியும் டாக்டர் என நான் கேட்டபோது! கஷ்டமான காரியம்தான். நிலைமை எனக்கும் புரிகிறது. இருக்கிற பிள்ளையை வைத்து மனைவியை ஆறுதல் படுத்துவது அவள் உடல் நலத்திற்கு நல்லது. இங்கு நிலைமை மேலும் மோசமடைய போகிறது.

சொந்த வீட்டை, ஊரை விட்டு தூர இடத்திற்கு போய் அமைதியாக வாழ முயலுங்கோ. இங்கிருந்தால் பறிகொடுத்த பிள்ளைகளின் நினைவு தாய்க்கு கட்டாயம் வந்தே தீரும். இப்போது மனம் மட்டுமே பாதிப்படைந்துள்ளது. உடலுக்கும், மூளைக்கும் பாதிப்பு ஏற்பட முன்னர் மாற்று இடம் தேடுவது மிக மிக அவசியம் என்றார் டாக்டர்.

சொந்த வீட்டை, ஊரை விட்டு, சோறு போட்ட மண்ணை விட்டு பிரிய மனம் இடம் கொடுக்க மறுத்தது. டாக்டர் கூறியது போல பூபதியின் உடல் நிலை மோசடைந்து வருவது தெரிந்தது. பறிகொடுத்த பிள்ளைகளின் நினைவால் சாப்பாடற்று, தூக்கம் கெட்டு அவளின் முன்னைய தோற்றம் மாறி இரு கண்களும், பற்களுமாய் உரு மாறத்தொடங்கினாள்.

மேலும் வன்னி மண் பெரு யுத்தம் ஒன்றிற்கு தன்னை தயார் படுத்த தொடங்கி விட்டது. இத்தயார் படுத்தல் என் தொண்டையில் ஓர் உருண்டை சிக்குண்டு இருப்பது போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பயப்பிரம்மையை ஏற்படுத்தியது. சில வேளைகளில் இராணுவம் ஏவும் செல் குண்டுகள் அசுர வேகத்தில் சீறிப்பாய்ந்து, தீப்பிழம்பை கக்கியவாறு எமது வீட்டின் மேலாக செல்லும். சிலது எனது வீட்டை சுற்றி விழுந்து வெடித்து சிதறி சாம்பல் கக்கி அடங்கும்.

"பல தமிழ் மக்களின் தலை,கால்கள்,கைகள், உடல் களை தன் கோர பசிக்கு இரையாக்கும்". செல்வீச்சின் சத்தம் ஓய்ந்த பின் வன்னி மக்களின் அழுகுரல்கள் அங்காங்கே காதில் கேட்கும். "இழந்த உறவுகளின் வானை தொட்டு நிற்கும் அழுகுரல் இதயங்களை குத்தி புண்ணாக்கும்". பசுமையை தந்து உணவையும் தந்திடும் பல தென்னை, பனை, பலா மரங்கள் செல்லுக்கு தமது தலைகளை பறிகொடுத்து முண்டங்களாக காட்சி தரும்.குரங்கு கூட்டங்கள் பயத்தினால் திக்கு தெரி யாமல் வாலை சுறுட்டியபடி அங்குமிங்கும் தாவித்திரியும். பட்சிகள் ஒதுங்க இடமின்றி குரலெழுப்பியபடி வானில் திசை மாறி பறக்கும். எல்லாவற்றையும் சிந்தித்து என் மனைவியை குணப்படுத்தவும், இவனையும் பறிகொடாது காப்பாற்றவுமே நாம் அகதிகளாக கொழும்பு வந்தோம் மாத்தையா.

இங்கு வந்து முகத்துவாரத்தில் என்னிடம் மிளகாய், வெண்காயம் கட்டும் ஒரு தெரிந்தவர் வீட்டில் தங்கி இருந்தோம். அவர் வியாபார அலுவலாக யாழ் வந்தால் எனது வீட்டிலேயே தங்குவார். அவரை என் மனைவி சொந்த சகோதரன் போல கவனிப்பா. அவர் மூலம் ஒரு தமிழ் கடையில் வேலை செய்தேன். அங்கும் நிலைக்க முடியவில்லை.

"புலனாய்வு பிரிவினர் கடைக்கு வந்து நீ இயக்கம் தானே? எப்படி உனது மகன் இயக்கத்தில் இருந்து செத்தான்? உனக்கும், அவர்களுக்கும் என்ன தொடர்பு? இப்படி கேள்விகள் மேல் கேள்வி கேட்டு பயமுறுத்தினார்கள்." கடை முதலாளியும் என்னை வேலைக்கு வைத்திருந்தால் தனக்கு பிரச்சனை வரலாம் என்ற எண்ணத்தில் என்னை வேலையி லிருந்து நீக்கி விட்டார். குடியிருந்த வீட்டுக்காரரும் பயத்தின் நிமித்தம் எங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டை காலி பண்ணும்படி கூறி விட்டார்.

"சொந்த இடத்திலும் வாழமுடியவில்லை. வந்த இடத்திலும் வாழ விடுகிறார்கள் இல்லை. நாங்கள் எங்கே மாத்தையா போவது? குடும்பத்துடன் செத்து விடலாமோ என எண்ண தோன்றியது." வெள்ளவத்தை இராமகிருஷ்ணன் மடாதிபதி எம் பரிதாப நிலையை பார்த்து தற்போது தற்காலிகமாக தங்க ஒரு இடம் தந்துள்ளார். அங்கிருந்துதான் தினமும் சைக்கிளில் வயிற்று பிழைப்புக்காக இந்த கடற் கரைக்கு பயந்து, பயந்து வருகிறேன் என கூறி, தனது சேட்டை தூக்கி கலங்கிய கண்களை துடைத்துக்கொண்டார்.

கண்கள் கலங்கியவர் தன்னை ஆசுவாசப்படுத்தியபடி எங்களைப்போல எண்ணற்ற தமிழ் குடும்பங்கள் பிள்ளைகள், பெற்றாரை, கணவனை, உறவுகளை பறிகொடுத்து வாழ வழி தெரியாது தவிக்கிறார்கள். ஏன் மாத்தையா தமிழருக்கு மட்டும் இந்த கொடுமைகள்? மாறி மாறி வரும் சிங்கள அரசுகள் எம்மீது அதிகாரம் செலுத்தி, பாகுபாடு காட்டி எம்மை வதம் செய்கிறார்கள். எமது பெண்களை கூட விட்டு வைக்கிறார்கள் இல்லை. அவர்களை தமது தாய்,சகோதரி என்ற எண்ணம் அற்று குறைந்த பட்சம் அவர்களும் பெண்கள்தான் என்ற சிந்தனை கூட இல்லாது மானபங்கம் செய்து அவற்றை அப்பெண்கள் தங்கள் எதிர்காலம், சமூகத்துக்கு அஞ்சி வெளியில் சொல்ல முடியாது மனதினுள் பூட்டி வைத்து தினம் தினம் வேதனையில் துடிக்கிறார்கள்,உளவியல் நோய்க்கு ஆளாகுகிறார்கள். எமக்கு சொந்த நாட்டில் வாழ வழி தெரியாமல் எதிர்காலம் எம்மிடமிருந்து பலவந்தமாக பிடுங்கப்பட்டு, நிம்மதியற்று, வாய் பேசாது, கூனிக்குறுகி வாழுகிறோம்.

தமிழர்களாக பிறந்த ஒரே காரணத்திற்காக மனிதாபி மானம் துளியும் இல்லாது நாம் தண்டிக்கப்படுகிறோம். நாங்களும் உங்களைப்போல இந்த நாட்டில் பிறந்த மனிதர்கள்தானே மாத்தையா. எங்களை ஏன் தினம் தினம் சாகடிக்கிறார்கள்? எம்மை எம் வழியில் வாழ விட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவருக்கும் இடைஞ்சல் இல்லாது ஒதுங்கி சந்தோசமாக வாழ்வோம். முடியலை மாத்தையா,முடியலை. இந்த நாட்டில் வாழ பிடிக்கவில்லையென சிறிது உணர்ச்சி சோகத்துடன் மீண்டும் தன் சேட்டு தலைப்பால் கலங்கிய கண்களை துடைத்தார்.

மனிதாபிமானமுள்ள அக்குடும்பத்தின் நான்கு வயது சிறுவன் "தாத்தே அய் மே மாமா கிறன்னவா." "அப்பா, இந்த அங்கிள் ஏன் அழுகிறார்" என புரியாது கேட்டான். சிறுவனின் கேள்விக்கு விடை காணமுடியாமல் பெற்றோர் அவனை அணைத்து கொண்டனர்.

அந்த பிஞ்சு உள்ளத்தின் கேள்வி பெற்றாரின் இதயத்தில் முள்ளாக குத்தியது.

ஐயே உங்கள் மனைவியின் உடல் நிலை இப்போது எப்படி? என கேட்டார்கள். பறிகொடுத்த பிள்ளைகளை நினைத்து இடைக்கிடை அழுவா. ஆனால் இவன், மகனை காட்டி தாயை கண்ணீர் சிந்த விட மாட்டான். தாய் அழும் போது பக்கத்தில் நின்று சுரண்டுவான். உடனே அழுகையை நிறுத்தி இவனை அணைத்து கொள்வாள்.

மாத்தையா! இரு அன்புச்செல்வங்களை பறிகொடுத்த பின்னரும் நாம்! "வாழும் இவனுக்காக வாழத்துடிக்கிறோம்." இவனும் இல்லையேல் நாம் இருவரும் ஏலவே நஞ்சரிந்தி செத்திருப்போம்.

தமிழர் பக்கத்தில் ஞாயம் இருக்கிறது. ஆட்சிக்கு வருபவர்கள் புத்த பிக்குகளுடன் சேர்ந்து தமிழ் மக்களை ஓரம் கட்டி, வேதனைப்படுத்தி, குளிர் காய்கிறார்கள். அவர்களின் ஞாயமான உரிமைகளை கொடுக்கலாமே! எல்லோரும் இந்நாட்டு மக்கள் என நினைத்து சகலருக்கும் சம வாய்ப்பை வழங்கியிருந்தால் சுண்டல் விற்பவர் தனது இரு பிள்ளைகளையும் பறிகொடுத்திருக்க மாட்டார். சொந்த வீட்டை விட்டு, தொழிலை விட்டு மொழி தெரியாத இடத்தில் ஐம்பது காசுக்காக நாள் பூராகவும் சுண்டல் விற்கும் நிலைக்கு தள்ளப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருக்க மாட்டார். நாட்டின் பொருளாதார இழப்போடு, இருபக்கமும் அநியாயமாக போன உயிர்கள் காப்பாற்ற பட்டிருக்கும். எமது சிங்கள சமூகத்துக்கு எப்போ சகோரத்துவ உணர்வு ஏற்பட போகிறதோ! என்றவாறு அவரது உள் மனது பேசிக்கொண்டது. விடைதெரியா கேள்விக்குள் தன்னை ஆட்படுத்திக் கொண்டார். அதே நேரம் அப்பெண் தனது கணவன் காதில் ஏதோ இரகசியமாக கூறினாள். பின்னர்,

"அய்யே! அப்பே கெதறட்ட இண்டகோ. காபற எக்க தியாணுவ. அப்பே கெதற லங்கட்ட தெமல பாசல தியாணுவ. காட்டத் பய வெண்டே யப்பா".

"அண்ணா! எமது வீட்டில் அறையொன்று காலியாக உள்ளது. நீங்கள் வந்து அங்கு தங்கலாம். பக்கத்தில் தமிழ் பாடசாலை உள்ளது. மகனை அங்கு படிப்பிக்கலாம். யாருக்கும் நீங்கள் பயப்பட தேவையில்லை. நாங்கள் துணையாக இருப்போம் என கூறினாள். "அந்த இரக்கமுள்ள சிங்கள பெண்.

தமிழர் இருக்க இடம் கொடாது விரட்டிவிட்ட சூழலில், முன் பின் அறிமுகமற்ற வேற்று மொழி மனிதர்களின் அன்பான வார்த்தையை கேட்டு எதுவும் பேச முடியாது, மகனை அணைத்த வண்ணம் விழி மூடாது அவர்களையே பார்த்தபடி நின்றார் இரத்தினம், நன்றியுடன்.

- கி.பி. அரவிந்தன் நினைவு சிறுகதைப்போட்டி - 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூர தேச தொலைபேசி அழைப்பு

அதிகாலை! குருவிகளின் தூக்கம் கலையவில்லை, காகங்கள் கரையவில்லை, பட்சிகள் சிறகு விரிக்கவில்லை, நீர்த்தடாக தாராக்கள் தம்பட்டம் அடிக்கவில்லை. சுவிஸ் தெளிந்த நீரோடைபோல் நிசப்தமாக ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தது.

அதே வேளை சுந்தர் வீட்டு "தொலை பேசி மணி அலறியது." பரிமளா திடுக்குற்று கண் விழித்து தொலைபேசியை எடுப்போமா அல்லது பேசாது படுப்போமா என்ற மனப் போராட்டத்தில் தடுமாறிய வேளை! தூக்கத்தில் இருந்த கணவன், பிள்ளைகளின் நினைவு வர மணியோசையின் அலறல் அவர்களின் தூக்கத்தை கெடுத்துவிடும் என்பதாலும், விடிந்தால் பிள்ளைகளுக்கு பாடசாலை என்ற காரணத்தின் நிமித்தம் இருள் விளக்கின் சுவிச்சை இருளில் தேடிப் பிடித்து விளக்கை எரிய விட்டு அவசரம், அவசரமாக தொலைபேசியை எடுத்து காதில் வைத்து மெல்லிய குரலில் கலோ என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறு முனையில் பெண் குரல் ஒன்று "சுந்தர் நிற்கிறாரா?" என்ற கேள்வியை அனாமதேய கடிதம் போன்று கேட்டு நின்றது.

புரிமளா "யார் பேசுகிறது" என்று கேட்டாள்.அக்குரல் தன்னை யார் என அடையாளப்படுத்தாமல் திரும்பவும் சுந்தரையே சுற்றி சுற்றி நின்று, பின்னர் நான்தான் நான்தான் என்றது.

நான்தான்,நான்தான் என்றால் "உனக்கு பெயர் இல்லையா?" என எரிச்சலில் சீறினாள் அதிகாலை நேரம் பரிமளா அவள்மீது.

அவளின் காட்டமான சீற்றத்தின் பின்னரே அந்த அனாமதேயக்குரல் நான் தேவி கதைக்கிறன் என தன்னை அடையாளப்படுத்தியது.

அதிகாலை தொலைபேசி அழைப்பு என்றால் அது கட்டாயம் "ஸ்ரீலங்கா கோல்தான்" என்பது சுந்தருக்கும், பரிமளாவுக்கும் தெரிந்த விடயமே.அதிகாலை தொலைபேசி அழைப்பு வருகிறது என்றால் இருவருக்கும் ஒருவகை பயம் மனதில் குடி கொள்ளும்.இதயத்திலுள்ள குருதி வெளியேறி பயம் மட்டும் இதயத்தை நிரப்பி நிற்கும்.இப்படி மணி அடிக்கும்போது; அவர்களின் சுவாச காற்று வெளியேறும் போது சூடாக இருக்கும்.இதயம் அதி வேகமாக அடிக்கும்.

பரிமளாவுக்கு ஒரே எரிச்சலும்,ஆத்திரமும் ஏற்பட்டது தேவிமீது. அதிகாலை தம்மை மறந்த தூக்கம், தாங்க முடியா குளிர். இக்குளிருடன் மல்லுக்கட்டி புறா இறக்கை போர்வைக் குள் கோழிக்குஞ்சு போல தம்மை உட்புகுத்தி குளிரை வெற்றி கொண்டு தூங்கும் நேரம் பார்த்து தொலைபேசி அலறல்.

நேர காலம் நோக்காது கடன் தந்தவர்கள் போல் தூர தேசத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு எடுத்து தொல்லை தரும் இந்த மானிட ஜென்மங்களை நினைத்தால் யாருக்கு தான் வெறுப்பு ஏற்படாது?

பிள்ளைகள் இரவு இரவாக கண் விழித்து தமது பள்ளி பாடங்களை படித்துமுடித்து சிலசமயம் நேரம் பிந்தியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கத்திற்கு செல்வார்கள்.சுந்தர் தனது வேலை முடித்து இரவு வீடு வந்து தூங்க இரவு ஒரு மணி இரண்டு மணி ஆகும்.இப்படி கஷ்டப்பட்டு வேலை செய்து விட்டு வீடு வந்து உடல் அலுப்புக்கு தூங்கலாம் என்றால் இந்த காசுப்பேய்கள் விட்ட பாடில்லை.

தொலைபேசியின் மறுமுனையில் தொடர்பில் இருக்கும் தேவியிடம் "என்ன விடயம்" என கேட்டாள் பரிமளா?

"ஒண்டுமில்லை...சுந்தர் இருக்கிறாரா?" பரிமளாவின் கேள்விக்கு பதில் இறுக்காமல் திரும்பவும் தேவியின் கேள்வி.

"இல்லை அவர் வேலைக்கு போய்விட்டார்."

திரும்பவும் தேவியின் கேள்வி "எப்ப வருவார்?"

"தெரியாது." திரும்பவும் பரிமளாவின் வெறுப்பான பதில்.அவளுக்கு தெரியாதா,கணவன் எத்தனை மணிக்கு வேலைக்கு செல்கிறான், எப்போ வீடு திரும்புவான் என்பது. நேரத்துக்கு மதிப்பு கொடுத்து கடிகார முள்ளுடன் தம்மையும் இணைத்து பம்பரம் போன்று சுழன்று வாழும் இப்புலம் பெயர் நாட்டு மக்களுக்கு தெரியாத நேரமா?

"நான் தரும் நம்பரை எழுதுங்கோ. சுந்தர் வந்ததும் இந்த நம்பருக்கு உடனே தொலைபேசி எடுக்க சொல்லுங்கோ".என படைத்தளபதி இராணுவ வீரர்களுக்கு உத்தரவு போடுவது போல் கூறி தொடர்பை துண்டித்தாள் தேவி.

இதே நேரம் தொலை பேசி அலறியதும், தேவியும், மனைவி பரிமளாவும் உரையாடியதும் தன் காதில் விழாத அளவுக்கு கடுமையான வேலை அலுப்பில் தனை மறந்த உறக்கத்தில் இருந்தான் சுந்தர்.

"எல்லாத்துக்கும் இந்த மனிசன் குடுக்கிற இடம்தான். என்ரை சொல்லை கேட்டால்தானே.நாங்களும் இரண்டு குமரை வைச்சிருக்கிறம். அதுகளுக்கு கலியாணம்,காட்சி செய்ய காசுதேவை என்ற எண்ணம் இல்லாது யார் வந்து காசு கேட்டாலும் இல்லை என்று சொல்லாது, கையில் காசு இல்லா விட்டாலும் எவரிடமாவது கடன் வாங்கி கொடுப்பது.பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கடனை அடைக்க சொறிப்புண்ணில் சுடு நீர் பட்ட நாய் போல ஓடித்திரிவது." இப்படி தன் மனதுக்குள் கணவனை கரிஞ்சு கொட்டியபடி தூங்கி விட்டாள்.

சுந்தருக்கு அன்று காலை வேலை.அதிகாலை உறை பனிக்குள் வேலைக்கு சென்று,மிகுந்த களைப்புடன் வீடு திரும்பி முன் கதவுடன் அமைந்துள்ள கொறிடோலில் பாதணியை கழட்டி வைத்து,வீட்டுக்குள் அணியும் செருப்பை காலில் மாட்டியபடி உடுப்புக்களை களையாது மிகுந்த களைப்புற்று சோபாவில் அமர்ந்த வண்ணம் தலையை பின்பக்கம் சாய்த்து கண்களை மூடியபடி இருந்தான்.

அவன் சோர்ந்துபோய் இருந்த நிலையை தெரிந்து கொண்ட மனைவி அவன் விரும்பி அருந்தும் அப்பிள் யூசை ஒரு கிளாசில் எடுத்து வந்து அவனிடம் கொடுத்து விட்டு "தொலைபேசி அழைப்பு பற்றி" எதுவும் கூறாது சமையல் கட்டுக்கு சென்று விட்டாள்.

சிறிது நேரத்தின் பின்னர் சோபாவை விட்டெழுந்து தனது உடைகளை களைந்து குளியல் அறைக்கு சென்று இதமான சுடு நீரில் உடல் அலுப்பு தீரும் குளித்தான்.குளித்து முடிந்ததும் தனது இரவு உடைகளை அணிந்த பின் அந்த கிழமை வீரகேசரி, தினமுரசு, துக்ளக், இண்டியன் ருடே, தெணியானின் காத்திருப்பு நாவலையும் எடுத்துக்கொண்டு வீட்டு முன் மாடத்திற்கு வந்தான்.

இதேவேளை, "இஞ்சாருங்கோ,இஞ்சாருங்கோ விடியப் புறம் தேவி ரெலிபோன் எடுத்தவா.உங்களை உடனே எடுக்கட்டாம்." என்றாள்.

"எந்த தேவி?"

"அவதான் உங்கடை திருகோணாமலை நண்பன் மாசிலாமணியின் மனைவி."

"எதுக்காம்"

"அவ எதுவும் சொல்லவில்லை.எதோ அவசரமாம். நீங்கள் அவவுக்கு ரெலிபோன் எடுக்க வேண்டாம் என்றாள் பரிமளா."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. நண்பனின் மனைவி ஏதோ பேச விரும்புகிறாள். என் மனைவி தடுக்கிறாள். தேவி பணம் கேட்கதான் டெலிபோன் எடுத்திருக்கலாம். அல்லது என் நண்பனுக்கு ஏதும் சுகயீனமோ என தன் மனதுக்குள் குழம்பினான். சிலவேளை என்னை பண உதவி கேட்டால் நான் இப்போது இருக்கும் நிலமையில் என்ன செய்வது. தனது மனைவி,பிள்ளைகளை ஏஜென்சி மூலம் வெளிநாடு கூப்பிட்ட கடன் இன்னும் முடியவில்லை. அக்கடனுக்கு வட்டி வேறு கட்ட வேணும். நண்பர்களிடம்வாங்கிய கைமாற்றுக்கடன் நாணயம் தவறாது கொடுக்க வேணும். இருந்தாலும் உயிர் நண்பனின் மனைவியாச்சே! பணம் கேட்டால் கொஞ்சமென்றாலும் கொடுக்கத்தானே வேணும் என தன் மனதுள் சொல்லிக்கொண்டான். இது! பரிமளாவின் காதில் விழுந்தால் கொஞ்ச நேரத்துக்கு வீட்டை இரண்டாக்கி கூறு போட்டு விடுவாள் என்பது அவனுக்கு தெரிந்த விடயம் தான். தன்னில் ஆரம்பித்து, தனது தாய், சகோதரி, குடும்பத்தை இதே சாக்கில் இழுத்து மறந்து போன விடயங்களை எல்லாம் இதே சாட்டில் நினைவூட்டி என் மனதை புண்ணாக்கி விடுவாள்.இப்படி திட்டி தீர்ப்பது அவளுக்கு கைவந்த கலையும், உள்ளூர ஒரு திருப்தியும் ஏற்படும்.

என்னங்கோ டெலிபோன் எடுக்கும் போது! அவ காசு கேட்டால் என்ன சொல்லப்போகிறியள்? இப்ப வசதி இல்லை என ஒரே சொல்லில் சொல்லி விடுங்கோ. இழுவல் கதை கதைக்கவும் வேண்டாம்.கன நேரம் ரெலிபோன் பேசவும் வேண்டாம். அவவுக்கு முதலும் நீங்கள் காசு கொடுத்தனீங்கள். நானும் குமருகளை வைத்திருக்கிறன். நாளைக்கு அதுகளுக்கு ஒரு கலியாணம்,காட்சி நடந்தால் காசுக்கு எங்கே போவது? உவை அப்பப்போ வந்து சாட்டு சொல்லி காசு வாங்கிக் கொண்டு வால் காட்டிப்போட்டு போய்விடுவினம் என சத்தம் போட்டாள்.

"எடி கத்தாதை. மேலேயும்,கிழேயும் சுவிஸ்காரர் இருக் கிறாங்கள். உன்ரை சத்தத்தால் அவங்கள் வீட்டு கொம்பனிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிப்போட் பண்ணினால் வீட்டால் எழுப்பி போடுவாங்கள். பிறகு பிள்ளைகளோடு றோட்டிலேயே நிக்கிறது?"

"இஞ்சை பாருங்கோ! நாங்கள் இங்கு வர முன்னர் நீங்கள் ஊருக்கு குடுத்தியள்சரி. வாசிகசாலை, கோயில்க்காறர் வந்தால் எவ்வளவு நேரம் எங்கடை காசில் தொலைபேசி கதைக்கிறியள்.இனிஎன்டாலும் ஜோசிச்சு நடவுங்கோ.எங்கள் பெரிய குடும்பத்துக்கு உங்கடை சம்பளம் வர வர போதாது என்பது உங்களுக்கே தெரியும்." என பொரிஞ்சு தள்ளினாள்.

சுவிஸில் குடும்பமாக வாழ்வதென்பது மிகவும் கஷ்டமே. உயர்ந்து செல்லும் வாழக்கை செலவு,பிள்ளைகளின் படிப்புக்கு ஒரு தொகை, வாகன பராமரிப்பு, பிறந்ததினம், திருமணம், சாமத்தியம் போன்றனவற்றுக்கு மொய் எழுத ஒரு தொகை, ஊர்த்தொண்டு, கோயில் என... பெரும் திண்டாட்டம் தான். மனைவி ஏசுவதிலும் ஞாயம் இருக்கு. உதவாமல் இருக்க இந்த பாழ் பட்ட மனம் விரும்புது இல்லையே.

சுந்தர் அதிகாலை கண்விழித்து தேவியுடன் தொடர்பை ஏற்படுத்த தொலைபேசி இலக்கத்தை அழுத்தி அழுத்தி முயன்றும் தொடர்பு கிடைக்கவில்லை. இலங்கைக்கு தொடர்பை ஏற்படுத்துவது பெரும்பாலும் முயற்கொம்பு. மனம் தளராது தொடர்ந்து சிலந்தி போல முயன்றதால் கொழும்புக்கான அழைப்பு கிடைத்து. தொர்டர்பு கிடைத்ததும் கலோ வணக்கம்.சுவிஸிலிருந்து சுந்தர் பேசுகிறேன்.திருமலை தேவியுடன் பேசலாமா? என கேட்டான்.மறுமுனையிலிருந்து "கோல் த லைன் பிளீஸ்" என கூறிவிட்டு தேவிக்கு தகவலை தெரிவிக்க சென்ற இடைவெளியில் "ஏமாறாதே ஏமாற்றாதே ஏமாறாதே ஏமாற்றாதே" என்ற சினிமாப்பாடல் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டு கொண்டிருப்பதை தொலை பேசிக்குள்ளால் கேட்ட சுந்தர் மனதில், ஒரு குழப்பத்தை உண்டாக்கியது. என்னிடம் உதவி கேட்பவர்கள் மனதில் கபடம் வைத்து இந்த சினிமா பாட்டைப்போல என்னை ஏமாற்றுகிறார்களா? அல்லது நேர்மையான எண்ணங்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை கருதி என்னை அணுகுகிறார்களா? எனவாறு சிந்தித்த படி இருந்த வேளை!

மறுமுனையில் "கலோ" நான் தேவி கதைக்கிறான். நீங்கள் யார் பேசுறது? நான் சுந்தர்.எப்படி நலமாக இருக்கிறீர் களா? பிள்ளைகள் எப்படி? மாசிலாமணி நலமா? என நலம் விசாரித்தான்.

ஓம்,ஓம்,எல்லோரும் சுகமாக இருக்கிறம். ஆனால் நாட்டு பிரச்சனையால் ஒவ்வொரு நாளும் என்ன நடக்குமோ என்ற பயத்துடன் தான் காலத்தை ஓட்டுகிறம்.எந்த நேரமும் எதுவும் நடக்கலாம். அப்படித்தான் இங்கு நிலைமை இருக்கு.

அவசரமாக ரெலிபோன் எடுக்க சொன்னனீங்கள் என மனிசி சொன்னா.என்ன விடயம் தேவி?

ஒண்டுமில்லை சுந்தர்.எனக்கு "அவசரமாக கொஞ்ச காசு தேவைப்படுகுது."

"ஏன் இப்ப உங்களுக்கு காசு?"

"என்னுடைய மருமகன் வெளிநாடு போக இருக்கிறார். ஓர் இரண்டு இலட்சம் ரூபா ஒரு கிழமைக்கு இடையில் தந்தால் உதவியாக இருக்கும்.ஏஜென்சிக்கு கொடுக்க வேணும். கொடுத்தால்தான் ஏத்துவான் என்று சொல்லுகிறான். அதுதான்... என இழுத்தாள்.

"இரண்டு இலட்சம் என்றதும் சுந்தரின் தலையில் சம்மட்டியால் பலமாக யாரோ ஓங்கி அடிப்பது போல உணர்ந்தான்."அவன் சிறிது சிந்தனையின் பின்னர்,உங்களுக்கு நிறைய சொந்தங்கள்,உறவுகள் பலர் பரந்துபட்டு சகல வெளிநாடுகளில் இருக்கிறார்களே! உங்களது பெரியம்மாவின் மகன்,தங்கையின் மகன்,மாமாவின் மகன் இப்படி ஏகப்பட்ட இரத்த உறவுகள் இருக்கிறார்கள்.அவர்களிடம் உதவி கேட்டால் எல்லோரும் சிறு சிறு தொகையாக தந்தாலே எவ்வளவோ தொகை வந்துவிடும். அக்காசு அவர்களுக்கு சிறிய தொகை. அவர்கள் நல்ல வசதி,வாய்ப்பாக இருக்கிறார்கள். கொஞ்சமும் யோசனை இல்லாமல் இவ்வளவு பெரும் தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தை என்னை எப்படி கேட்பீர்கள்? "இரண்டு இலட்சம் ரூபா என்றால் எவ்வளவு சுவிஸ் பிராங் தெரியுமா உங்களுக்கு?. இவ்வளவு தொகையை பிரட்ட சுவிஸில் நான் நான்கு மாதங்கள் உழைக்க வேணும்." என்றான்.

"இல்லை சுந்தர். அவர்களை எனக்கு ரெலிபோன் எடுக்க சொன்னாலும் அவர்கள் எடுக்கிறார்கள் இல்லை. அப்படி யானவர்களை எப்படி நம்பி கேட்பது?"

ஒரு சிலர் அப்படி இருக்கலாம். எல்லோரும் அப்படியா, இல்லையே? இல்லை சுந்தர். எல்லோரும் ஒரே மாதிரியாகத் தான் இருக்கிறார்கள்.

உங்கள் நிலைமையை எல்லோருக்கும் கடிதம் மூலம் தெரிவியுங்கோ. எப்படியும் சிலர் பணம் அனுப்ப முயலு வார்கள். அப்படி ஒருதரம் முயன்று பாருங்கோ.

இல்லை சுந்தர். அவர்களிடம் கடமைப்பட எனக்கு விருப்பம் இல்லை.

உறவுகளிடம் உதவி கேட்பது கடமைப்படல் இல்லை தேவி. அது ஒரு உதவிதான். நீங்கள் அவர்களிடமே கேளுங்கள். "இஞ்சை பாருங்கோ தேவி முன்பும் ஒரு தடவை உங்கள் மகளின் கலியாணத்துக்கு உங்கள் உறவுகள் பலர் வெளிநாடுகளில் இருந்தபோதும்; நான் ஒரு குமர் கரை சேர வேணும் என்ற எண்ணத்துடன் மறுக்காமல் கடன்பட்டு தந்தனான். அக்கடனை அடைக்க நான் பட்ட கஷ்டம் எனக்கும், மனைவிக் கும் மட்டுமே தெரியும். மனைவி என்னை ஒரே பேச்சு."

"ஆமா நீங்கள் தந்த அக்காசு பிள்ளையின் கலியாண செலவுகளோடு முடிந்து விட்டது. இம்முறை இந்த உதவியை செய்யுங்கோ. இனிமேல் உங்களிடம் காசு கேட்டு வர மாட்டன்."

"யார் உங்கள் மருமகனின் ஏஜென்சி? அவரின் பெயர், ரெலிபோன் நம்பர், விலாசத்தை எனக்கு இப்ப தாங்கோ. நான் அவருடன் கதைத்து, உங்கள் மருமகன் வெளிநாட்டில் வந்து இறங்கியதும் அந்த இரண்டு இலச்சத்தையும் தரலாம் என கதைத்து பார்க்கிறான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேவி பதட்டத்துடன்,ஐயோ வேண்டாம்.நீங்கள் அவனுடன் கதைக்க வேண்டாம்.நீங்கள் காசை அனுப்புங்கோ. அதை கொடுத்து நான் கதைக்கிறன்."

"ஏஜென்சியுடன் நான் கதைப்பதற்கு நீங்கள் ஏன் பதட்டப்படுகிறீர்கள்?" இல்லை சுந்தர். அவன் எல்லோரும் கதைப்பதை விரும்ப மாட்டான்.

ஏன் விரும்ப மாட்டான்.நான் வெளி நாட்டில் இருக் கிறன். கட்டாயம் வெளியில் இருப்பவர்களுடன் ஏஜென்சிமார் பேச விரும்புவார்கள். அவர்களுக்கு பணம்தான் முக்கியம். அதனால் பேசுவார்கள்.

"இல்லை,நீங்கள் பேச வேண்டாம். எப்படியாவது சமாளித்து தாங்கோ. மருமகனை வெளியில் அனுப்பினால் எனது கஷ்டம் எல்லாம் தீர்ந்து போகும்."

உங்கள் பிரச்சனை பற்றியே பேசுகிறீர்கள். எனது குடும்ப நிலை பற்றி ஏற்கனவே உங்களுக்கு சொல்லியுள்ள போதும் கட்டாய படுத்துகிறீர்கள்.

அப்படியானால் நீங்கள் மலைக்கு போய் உங்கள் கணவனை அனுப்புங்கள். அவன் வந்து என்னுடன் பேசட்டும்.

"ஏன் அவர்?நான் கதைத்தால் போதாதா? என்னில் நம்பிக்கை இல்லையா?" என்றாள் தேவி.

ஆம்மா.அதுதான் உண்மை. "உங்களை ஒரு விடயம் கேட்கிறேன். ஒழிக்காது உண்மை சொல்லுவீர்களா?"

"என்ன கேழுங்கோ சுந்தர்"

உங்களுக்கு கஷ்டம் என நெடுக சொல்லுகிறீர்கள். ஆனால் நீங்கள் "மாளிகை போல ஒரு வீடு இப்ப கட்டி உள்ளீர்களாம்.நிலத்துக்கு மாபிள் பதித்துள்ளதோடு,ஆழுயர பிறிட்ச், அறைகள் அனைத்துக்கும் காத்தாடி,சுற்று மதில் என நல்ல வசதியாக இருக்கின்றீர்களாமே?"

உடனே தேவி "யார் சொன்னது, யார் சொன்னது?" என கேட்டாள்.

"இஞ்சை பாருங்கோ தேவி. சொன்ன ஆள் முக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. நான் அறிந்தது உண்மையா அல்லது பொய்யா?"

"அது...அது....உ.....ண்...மைதான் சுந்தர்."

உதுக்கெல்லாம் காசு எப்படி வந்தது உங்களுக்கு? நீங்கள் உங்கள் தங்கை மகனிடமும்,மாமாவின் மகனிடமும் காசு வாங்கி உள்ளீர்கள். இன்னொரு உங்கள் நண்பியின் மகன் ஒருவன் பிரான்ஸில் கனகாலமாக இருக்கிறான். அவனிடமும் பணம் பெற்றுள்ளீர்கள். உங்கழுக்கு உங்கள் சொந்தங்கள் ரெலி போன் கூட எடுப்பதில்லை என எல்லாவற்றையும் மறைத்து பம்மாத்து காட்டி, இவ்வளவு நேரமும் எனக்கு பொய்தானே சொன்னனீங்கள்?

"தேவி மௌனம்."

"என்ன தேவி பதிலை காணவில்லை? தேவி நான் திரும்பவும் உண்மையை சொல்லுகிறன். உங்களைப்போல பொய் பேச எனக்கு தெரியாது. பாலிய நண்பனின் மனைவி மற்றது நீங்கள் ஒரு பெண் என்பதால் உங்களை ஏச முடிய வில்லை. என் தலைமேல் பாரிய பொறுப்புக்கள். அது உங்களுக்கும் தெரியும். வெளி நாட்டில் இருக்கும் என்னால் ஒரு சிறிய கல்வீடு கூட கட்ட முடியவில்லை. ஆனால் நீங்கள் ஊரில் இருந்த படி மாளிகை கட்டி வசதியாக வாழுகிறீர்கள்.தயவு செய்து என்னை ஏமாத்த வேண்டாம். நீங்கள் எனது இடத்தில் இருந்து, நான் உங்களைப்போல இப்படி வந்து பணம் கேட்டு நச்சரித்தால் நீங்கள் என்னைப்பற்றி என்ன நினைப்பீர்கள். காறி உமிழ மாட்டீர்கள்?"

"நீங்கள் ஒரு பொய்காரி.இனிமேல் என்னிடம் யார் செத்து கிடந்தாலும் எந்த உதவியும் கேட்டு வராதீர்கள். உங்களுடன் நான் எந்த தொடர்பும் வைக்க விரும்பவும் இல்லை, பேசவும் விரும்பவில்லை. இன்றுதான் உங்களுடன் பேசும் கடைசி நாள். மாசிலாமணியை ஒரு தரம் என்னுடன் தொடர்பு கொள்ள சொல்லுங்கள் என காட்டமாக கூறி தூரதேச தொலைபேசி அழைப்பை துண்டித்தான்.

- எஸ்.பொ.நினைவு சிறுகதைப்போட்டி-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் செய்த நன்றி

தாயுடனும், காதலியுடனும் எப்படியும் இன்று இலங்கை நேரம் ஏழுக்கு பேசிவிடவேணும் என்ற மன துடிப்பில் தூங்காது கண்விழித்த வண்ணம் சுவரில் தொங்கிடும் மணிக்கூட்டையே பார்த்தபடி சுவிஸ் நேரம் இரண்டு மணி வரும்வரை தூங்காது காத்திருந்தான்.

கனடாவில் வசிக்கும் முரளி என்ற பையனை தனது பெற்றோர் தனக்கு திருமணம் செய்து வைக்க பேசுகிறார்கள்; என்ற செய்தியை தொலைபேசியில் அவள் கூறியதை கேட்ட சீலனுக்கு, ரீங்க்கார வண்டு ஒன்று அவனது செவியில் விரும்பத்தகாத ரீங்காரம் செய்வது போன்ற ஒலி, திரும்ப திரும்ப ஒலித்தபடி இருந்தது போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது.

இருவருக்குமிடையில் கடல் அலை அடித்து ஓய்ந்தது போன்ற ஒரு அமைதி தோன்றியது. மறுமுனையில் கலா சீலன்... சீலன்...என குரலிட்டாள். அது அவன் காதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழவில்லை. அவனோ பிரமை பிடித்தவன் போல அடுத்த முனையில் எதுவும் பேசாது அமைதியாக நின்றான்.

அவள் மீண்டும் மீண்டும் சீலன்,சீலன் பேசுங்கோ எனவாறு கேட்டபடி இருந்தாள். அதன் பின்னரே அவன் என்ன கலா என கேட்டான்.

என்ன தீடீரென சத்தத்தை காணோம். நான் பயந்து விட்டேன் என்றாள்.அப்படி ஒன்றுமில்லை கலா. நீர் உமது கலியாணம் பற்றி என்ன முடிவு சொன்னனீர் உமது அம்மா,அப்பாவுக்கு என கேட்டான்?

நான் எதுவும் வாய் திறந்து பேசவில்லை. ஆனால் கண்ணீர் கண்ணீரா வருகுது. எனக்கு பயமாய் இருக்கு. எங்கள் உள்ள அன்பு காதலை என்னுடைய விருப்பம் இல்லா கலியாணத்தால் பிரித்து விடுவார்களோ என்று பயமாய் இருக்கு.அப்படி என்னை அம்மா,அப்பா வற்புறுத்தி கட்டி வைத்தால் நான் என்ன முடிவு எடுப்பேன் என எனக்கே தெரியாது சீலன் என மறுமுனையில் கூறியவாறு அழுதாள்.

நோ நோ அப்படி எதுவும் நடக்காது.நடக்க நான் விடவும் மாட்டன்.முதல் நீர் அழுகையை நிறுத்தும்.உமக்கு உன்னுடைய விருப்பப்படி நான்தான் உன் கழுத்தில் எந்தகாலம் சென்றாலும் தாலிகட்டி அன்பு மனைவியாக ஏற்றுக் கொள்ளுவன் அம்பிகாவதி, அமராவதி காதலை விட எமது காதலின் கூர் முனையும், வீச்சும் அதிகம். நீர் இப்ப மனதை போட்டு குழம்பாது அமைதியாக இரும்.என்ன இப்ப உமது அம்மா,அப்பா கலியாணம் பேசத்தானே ஆரம்பித்து இருக்கினம்.இதுதான் முடிந்த முடிவு என்று இல்லையே. பயப்படாதையும். தைரியமாக இரும். நான் உம்மை எவ்வளவு சீக்கிரத்தில் என்னிடம் கூப்பிட முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கூப்பிடுவேன் என்றான்.

ஓம் சீலன் நீங்கள் எப்படியென்றாலும் என்னை உங்கு எடுத்து விடுங்கோ.கனடாவில் இருக்க பயமாய் இருக்கு. அத்தானும், அக்காவும் அம்மா, அப்பாவின் சொல்லை கேட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரளிக்கு செய்து வைத்து விடுவினமோ என மனம் இப்ப ஏங்குது.

தாயுடனும், காதலி கலாவுடனும் கதைத்த பின், அதிகாலை மூன்று மணிபோல் தூக்கத்திற்கு சென்ற சீலனை தூக்கம் அணைக்க மறுத்தது. படுக்கையில் சிந்தனை ஓட்டங்களை "தெறித்திட்ட முத்துக்களைப்போல சிதறவிட்டு" புரண்டு, புரண்டு படுத்து தூக்கத்திற்கு முயன்றான்.

ஆனால் அவனால் தூங்க முடியவில்லை. அவனது மனமோ வேதனையில் துடிக்க, பஞ்சணையும் நொந்தது அவனுக்கு.

காதலி கலா கூறிய செய்தியை கேட்டதும் அவன் இதயத்தில் ஓட்டை விழுந்தது போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது. ஊரில் ஒரே பாடசாலையில், ஒரே வகுப்பில் சின்ன வயதில் இருந்து ஒன்றாக படித்து ஒரே நேரம் இருவரும் கண்டி பெரதெனியா பல்லைக் கழகத்துக்கு டாக்டராக தெரிவு செய்யப்பட்டு இரு வருடங்கள் அங்கும் சேர்ந்தே கல்வி கற்றார்கள். ஆனால் விதியின் சதியில் சிக்குண்டு இணைபிரியா காதல் உள்ளங்கள் பிரிய நேரிட்டது.

சின்ன வயதில் பள்ளியில் படிக்கும் போது! ஒரு ஐஸ்பழம் வாங்கி இருவரும் மாறி மாறி சூப்பிய நினைவுகள், கடலை சரை வாங்கி இருவர் விரல்களும் ஒன்றை ஒன்று உரசுப் பட சாப்பிட்டு ஒரு தாபத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்த ஞாபகம்,உயர்தரம் படிக்கும் போது! நோட்ஸ் பரிமாறல், இனப்பெருக்கம் பற்றி வகுப்பில் உயிரியல் பாடம் நடக்கும் போது, கலாவை நான் திரும்பி பார்த்த அதே நேரம் அவளும் என்னை பார்க்க இரு விழிகளும் எதோ ஒரு மொழி பேசிக் கொண்டன. அந்த மௌன மொழியின் ஈர்ப்பு இருவரையும் காதலர் ஆக்கியது.

பெரதெனியாவில் பள்ளத்திலுள்ள கற்பாறைகளை ஊடறுத்து சலசலத்து ஓடும் மகாவலி கங்கை கிளையின் அழகில் தங்களை மயக்கி ஒருவரை ஒருவர் கட்டியணைத்து முத்தமழை பொழிந்தவாறு அங்கங்கே குடை மறைப்பிலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பாறைகள் மீதும் இருந்தவாறு சல்லாபமிடும் காதலர்கள். வகுப்பு முடிந்ததும் பெரதேனியா ரம்மியமிக்க உயிரியல் பூங்காவின் மரத்தடி, சிறு மரங்களின் கீழ், ஒதுக்கு புறம் ஆகியவற்றில் காதலர்கள் தமக்குரிய காதல் பாடத்தில் மேலும் கீழுமாய் ஆராட்சி செய்யும் காட்சியும் அவன் நினைவுக்கு வந்தன.

இப்படியான ஆராட்சி பாடத்தை சீலனும், கலாவும் ஒன்று சேர்ந்து நடாத்தி வெற்றியும் கண்டுள்ளார்கள்.

தாய் தன்னை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்காக பட்ட கடன்,குடியிருக்கும் வீட்டு காணியின் அடகை வட்டி முதலு மாக செலுத்தி மீட்க வேணும், சகோதரியின் படிப்பு செலவு, கொழும்பு வெள்ளவத்தையில் வாடகைக்கு பெறவிருக்கும் வீட்டின் மாதாந்த வாடகை, அத்தோடு அதற்கு செலுத்த வேண்டிய முற்பணம், இவற்றோடு தான் கற்கவுள்ள ஜேர்மன், ஆங்கில கோசுக்கான செலவு வேறு.

இவற்றை எல்லாம் சமாளிக்க ஒரு தொகைப்பணம் ஒவ்வொரு மாதமும் கையில் புரளவேணுமே.அதற்குரிய பணத்தை எந்த வழிமுறையை கையாண்டு சமாளிப்பது என ஏங்கினான், தவித்தான்.

உலக நாடுகளை எடுத்துக்கொண்டால் “சுவிஸில் வாழ்க்கைத்தரம் மிக சிறப்பானது. ஆனால் வாழ்க்கை செலவோ அதிகமானது.” இப்படிப்பட்ட ஒரு நாட்டில் இரு வேலை பாராது எமக்குள்ள அக, புற செலவுகளை இலகுவில் சமாளித்து விட முடியாது.

தான் தற்போது பார்த்திடும் மக்டொனல்ஸ் வேலையில் பெறும் ஊதியம் ஒருபக்க செலவுக்கே போதக்கூடியது. ஒரு நாணயத்திற்கு இரு பக்கங்கள் எப்படி முக்கியமோ, அதுபோல இரண்டாவது தொழில் முக்கியமாக இருந்தது சீலனுக்கு.

இரண்டாவது வேலை பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கு மானால்! தற்போதைய வேலை நேரம் பொருந்தி வராதே என்ற மறு பிரச்சனை தொக்கி நின்றது. “நின்ற வெள்ளத்தை வந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளம் அள்ளி சென்றது போல" ஆகிவிடாமல் பார்க்க வேண்டிய இக்கட்டான நிலையும் சீலனுக்கு.இருந்த போதும் அப்துல் கலாம் சொன்னது போன்று "நல்லது நடக்க கனவு காணுங்கள் அது நிறைவுறும்," கண்ணதாசன் சொன்னது போல "நம்பிக்கை வைத்து கல்லையும் பார்த்தால் அது தெய்வமாக காட்சி தரும்," இவற்றை விட அவனது யாழ் பல்கலைக்கழக விரிவுரை ஆசான் குமாரவேலு சொன்னது போல "முயற்சி திருவினையாக்கும்" போன்ற வேத வாக்குகளை மனதில் நிறுத்தி, மனம் தளராது முயற்சி செய்வோம் என்ற திடமான முடிவுக்கு வந்தான்.

மறுநாள் சீலன் மக்டொனால்ஸ் வேலைக்கு செல்வதற்காக தனது வாசல் கதவை திறந்து வெளியில் வந்த போது! வானம் இருட்டி தமக்குள் குழம்பியபடி,முகில்கள் மெல்ல மெல்ல நடை போட்டு அசைந்தன.பனிமலைகளுக்கு விடை கூறி அங்கிருந்து புறப்பட்ட இளம் காற்று சீலன் அணிந்திருந்த அழகு மிக்க ரீ சேட்டை ஊடறுத்து அவனுக்கு குளிரை உணர்த்தி நின்றது. அவன் மேல்நோக்கி அண்ணார்ந்து வானத்தை ஒரு தரம் நோக்கினான். மழை பெய்வதற்கான அறிகுறிகளை அவனது கண்கள் கண்டு கொண்டன.தனது வீட்டிலிருந்து சிறிது தூரம் நடந்து சென்றால்! அவன் போய் சேர வேண்டிய இடத்துக்கான பேரூந்து நிலையத்தை அடைந்து விடலாம். இதே நேரம் வானம் சிறு சிறு துளிகளாக தனது கண்ணீரை தூறல் வடிவில் சிந்த தொடங்கியது. அவனோ தனது கால் பாதங்களின் இடைவெளியை மேலும் அகட்டி நடையின் வேகத்தை அதிகரித்தான். அவன் கையில் குடை வேறு இல்லை.

சுவிஸ் நாட்டில் சொல்லாமல், கொள்ளாமல் காற்று வீசிடும், மழை பெய்திடும். இவற்றை நாம் புரிந்து கொள்வது கடினமாகவே இன்னும் தோன்றுகிறது.

சீலனின் நடையின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க, வானத்தின் தூறல் வேகமும் அதிகரித்து! ஈற்றில் அவனது நடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகத்தை தூறல் வேகம் வென்று மழையாக நிலத்தை முத்தமிட்டது.

சிறிது நனைந்த படி பஸ் தரிப்பிடத்தினுள் நுழைந்து தன் கைக்குட்டையால் நெற்றியிலிருந்து நாடி வரை துடைத்து விட்டு தனது தலையை துவட்டும் வேளை! அவன் செல்ல வேண்டிய பஸ் உறுமலுடன் மழையில் நனைந்தபடி வந்து நின்றது.

பஸ்ஸினுள் கூட்டம் அதிகமாக இருந்தது. பஸ்ஸின் இருக்கை கம்பி வளையத்தை தான் விழுந்து விடாதபடி ஆதாரமாக பிடித்தவாறு, தான் இறங்க வேண்டிய இடத்தை நோக்கினான். ஆனால் மழையோ தனது நீரால் பஸ்ஸின் சாரளத்தை ஆக்கிரமித்து வெளியிடங்களை பஸ்ஸினுள் இருந்து பார்க்க முடியாதவாறு யாழ் ஏலோல சிங்கன் போல தடைபோட்டு நின்றது. பஸ் எங்கு செல்கிறது, எந்த தரிப்பிடத்தில் நிற்கிறது என்பதனை அவனால் தெரிந்து கொள்ள முடியவில்லை. இருந்த போதும் பஸ்ஸினுள் உள்ள திரை, பஸ் செல்லும் இடத்தையும், தரிப்பிடத்தையும் அப்பப்போ பறைசாற்றியபடி இருந்தது.

சிலவேளை இயற்கையை கூட மனிதன், தனது மூளையின் சக்தியால் வெல்லுகிறான். ஆனால் பலமுறை இயற்கையிடம் மனிதன் தோற்று போகிறான். ஏனெனில் அது இயற்கை அல்லவா?

பஸ்ஸால் இறங்கி மக்டொனால்ஸ் உடுப்பு மாற்றும் அறைக்கு சென்று தனது வேலைக்கான உடுப்பை மாற்றியபின், இன்னும் வேலை ஆரம்பிக்க 20 நிமிடங்கள் இருந்த படியால் ஒரு கோப்பியை அடித்து எடுத்து வந்து ஊழியர் இளைப் பாறும் அறையில் மேசைமீது வைத்து விட்டு, கலக்கமான முகத்துடன் கோப்பியை அருந்தாது சிந்தனையில் இருந்தான்.

அதே வேளை, தனது இளைப்பாறும் 30 நிமிட நேரத்தில் பானுவும் ஒரு கோப்பியுடன் அங்கு வந்தாள். சீலன் சோகமே உருவாக, கண்கள் கலங்கியபடி இருப்பதை கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனருகில் உட்கார்ந்தாள். என்ன சீலன், ஒரு மாதிரியாக இருகிறாய். முகத்தில் எவ்வித களையும் இல்லாமல் சோகத்துடன் இருப்பது போல் தெரிகிறது.

என்ன நடந்தது? "கலாவுக்கு கனடாவில் முரளியை முடிவு செய்து விட்டார்களா?, அம்மாவுக்கு உடம்பு சரி யில்லையா? அல்லது உனக்கு உடம்புக்கு முடியவில்லையா? என தனது சகோதரனை கேட்பதுபோல உரிமையுடன் கேட்டாள்.

அவனோ பதில் எதுவும் கூறாது அமைதியாக இருந்தான். மீண்டும் பானு கேட்டாள். அவனை நேசிக்கும் இரு உள்ளங்களில் பானுவும் ஒருத்தி. அவளிடம் தனது பிரச்சனைகளை சொன்னால் மனதுக்காவது சிறு ஆறுதல் கிடைக்கும் என எண்ணியவாறு...

தனது மவுனத்தை கலைத்து, அக்கா!...எனக்கு... என இழுத்தான். "எதுவாக இருந்தாலும் தயங்காது சொல் என்றாள்" பானு.

தங்கச்சிக்கு கொழும்பில் வெளிவாரி பட்டப்படிப்புக்கு இடம் கிடைத்துள்ளது. அம்மா தங்கச்சியை கூட்டி வந்து வெள்ளவத்தை இராம கிருஷ்ணன் விடுதியில் நிற்கிறா. அடுத்த மாதம் படிப்பு தொடங்குகிறது. குமர்ப்பிள்ளை. தனிமையில் இருக்க விட முடியாது. இருவருக்கும் கொழும்பு புதிய இடம். அங்கு எவரையும் தெரியாது. யாரையும் அங்கு நம்பவும் முடியாதல்லவா?

அதனால் ஒரு வீடு வாடகைக்கு எடுக்கவேணும். அம்மா ஏலவே வெள்ளவத்தையில் வீடு ஒன்று பார்த்துள்ளா. அவ்வீட்டிற்கு வாடகை, முற்பணம் வேறு செலுத்த வேணும், மாதம் தங்கச்சியின் கல்விச் செலவு, நான் இங்கு வருவதற்காக பட்ட கடன், எனது முடிக்கபடாத டாக்டர் படிப்பை தொடர இங்கு ஆங்கிலமும், டொச்சும் பயில விண்ணப்பித்துள்ளேன். இன்னும் இரு மாதமளவில் என் படிப்பை தொடங்கலாம் என எண்ணுகிறேன். மொழி தெரிந்தால் நல்ல வேலை எடுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும் என நீங்களும் கூறினீர்கள் அல்லவா என்றான் சீலன்.

முதல் நீ கவலையை விடு. மனதை தேற்றிக்கொள். சகலதும் மெல்ல மெல்ல ஒழுங்காக நிறைவேறும். நீ விரும்பினால் சொல்லும். நான் வேலை செய்யும் கம்பனியில் உனக்கு அதிகாலை பேப்பர் போடும் வேலை பெற்று தருகிறேன். நீ பேப்பர் போட்டு விட்டு இங்கு பத்து மணி வேலைக்கு அல்லது ஒருமணி வேலைக்கு வர முடியும். இரவு வேலையை தவிர்ப்பது உமக்கு நல்லது. நீர் தூங்கி விட்டு அதிகாலை பேப்பர் போட வசதியாக இருக்கும். அத்தோடு உமது உடம்பையும் பாது காத்திட முடியும் என்றாள்.

ஆம் அக்கா நல்ல யோசனைதான். ஆனால் இங்கு எனது வேலை நேரம் ஒத்து வராதே. இரவு ஒரு மணிக்கு வேலை முடித்து, எப்படியக்கா அதிகாலை நாலு மணிக்கு தூக்கத்தை விட்டெழுந்து பேப்பர் போட செல்ல முடியும்?

நீர் அதைப்பற்றி யோசிக்க வேண்டாம். "இங்கு படிப்பதற்கும், இராணுவ பயிற்சிக்கும் முதலாளிகள், நிறுவனங்கள் ஊழியர்கள் கேட்கும் நேரங்களை ஒதுக்கி கொடுக்கவேண்டியது கட்டாயம். அது சட்டத்திலே கூட உண்டு." எமது மனேஜர் பீல்மான் நல்லவர் என்பது உனக்கு தெரியும் தானே.

ஆம் அக்கா நீங்களும் பேசிப்பாருங்கள். நானும் எனது படிப்பு பற்றி மனேஜருக்கு சொல்லுகிறேன். அப்படி இரவு வேலையை தவிர்த்தால் என் எதிர்கால கல்வியை கற்பதற்கும், இரண்டாவது வேலை செய்வதற்கும் பெரும் வசதியாக அமையும்.

"சீலன்! இப்ப அம்மாவுக்கும்,தங்கச்சிக்கும் வீடு எடுக்க எவ்வளவு பணம் தேவை"?

அது... அது... வந்து... வந்து... அக்கா... என எந்த பதிலும் கூறாது இழுத்தான்".

"இலங்கைப்பணம் எப்படியும் மூன்று இலட்சம் தேவை என அம்மா சொன்னா என்றான்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் சற்று ஜோசனையின் பின், அப்பணத்தை நான் உனக்கு தருகிறேன். அம்மாவுக்கு உடனே அனுப்பி விடுஎன்று கூறினாள்.

சீலன் சிறிதும் எதிர் பார்க்கவில்லை.பானு தன் இடர் கண்டு உதவிடுவாள் என்று. அக்கா என்ன சொல்லுகின்றீர்கள்? அவளை பார்த்தான்.

அவன் பார்வையின் அர்த்தத்தை புரிந்திட்ட பானு, புன்சிரிப்புடன் நீ நம்பவில்லையா? உண்மைதான் சொல்லுறன். நான் பணம் தருகிறேன் என்று.எனக்கு நீ உடனே திரும்ப தரவேண்டும் என்ற அவசரம் இல்லை.உனது பதின் மூன்றாவது சம்பள பணத்தில் திரும்பத் தந்தால் போதும் என்றாள்.

அப்போது! அவன் அவனை அறியாது உணர்ச்சி பெருக்கத்தில் அவளது வலது கரத்தை பற்றி நன்றி கலந்த கண்களுடன் அவளை பார்த்தான்.

அவளும் அவனது பார்வையின் அர்த்தத்தை புரிந்தவ ளாக தன் விழியகட்டி, பரவாயில்லை எனும் சைகையை வெளிப்படுத்தினாள்.

இரு கிழமைகளின் பின்னர் பானு மனேஜருடன் பேசி சீலனுக்கு இரவு வேலையை தவிர்த்து, பகல் வேலைக்கான அனுமதியை பெற்று கொடுத்தாள். ஆனால் சனிக்கிழமை மட்டும் இரவு வேலை சீலன் செய்தே ஆக வேண்டும். அது கூட அவனுக்கு வசதியாகவே இருந்தது. மறுநாள் பேப்பர் போடும் வேலை இல்லை, விண்ணப்பித்த படிப்பு தொடங்கினால் அதற்கும் ஞாயிறு விடுமுறை நாள். நன்றாக தூங்கி உடலலுப்பை போக்க முடியும்.

இதற்குள் அவன் மனத்தில் இறக்கை முளைத்து வானிலுள்ள கண்சிமிட்டும் நட்சத்திரக்களுக்கிடையில் ஓடும் கருநீல முகில்களை ஊடறுத்து கனடா நோக்கி பறக்க தொடங்கியது.

கலாவின் பெற்றோர் முரளிக்கு அவளை பேசி முடிவாக்க முன் எப்பாடு பட்டாவது அவளை சுவிஸிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏஜென்சி மூலமோ அல்லது எவரின் ஸ்பொன்சர்" மூலமோ எடுத்து விட வேண்டும் என ஜோசிக்கலானான். ஏலவே தாயின், சகோதரியின் பிரச்சனைகளை முடிக்க முடியாது அவதியுறு பவன் எப்படி அவளை சுவிஸ் எடுப்பதெனவும் சிந்திக்க தவறவில்லை.

கனடாவில் தன்னுடன் படித்த மூன்று நண்பர்களிடம் பண உதவி கேட்கலாமா? அல்லது தாயின் வழி உறவுக் காரரிடம் உதவி பெறலாமா? எனவும் அசைபோட்டான். எப்படியாவது எதோ ஒரு வழியில் காதலியை தன்னிடம் அழைத்து விட வேண்டும் என்பதில் குறியாக இருந்தான்.

அன்று மாலை வேலை முடிந்து வீட்டிற்கு மிக உற்சாகத்துடன் வந்து, அன்றைய வீட்டு காரியங்களை முடித்து, தொலைக்காட்சி பார்க்க விரும்பாது, முன்னர் அறிமுகமற்ற நல்ல உள்ளம் படைத்த பானு அக்கா நான் எதிர்பாராத உதவிகளை எனக்கு செய்கிறா என வியந்து, இப்பெரும் உதவிகளுக்கு நான் எப்படி நன்றிக்கடன் செலுத்தப்போகிறேன் என்ற பரிதவிப்புடனும், மறு நாள் காலை தாய்க்கும், காதலி கலாவுக்கும் வீடு எடுப்பதற்கான பணமும், இரண்டாவது வேலையும் கிடைக்க இருக்கும் செய்தியை கூற வேண்டும் என்ற ஆவலில் இனிது தூங்கி விட்டான்.

15.10. 2015-ஞானம் கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்ப்புக்கள்

கா... கா கொக்கரக்கோ... கொக்கரக்கோ காகா... காகா கொக்கரக்கோ... கொக்கரக்கோ என காகம் கரையும் சத்தத்தையும், கோழி கூவும் சத்தத்தையும் கேட்டு திடுக்கிட்டு அவசரம் அவசரமாக படுக்கை விட்டு எழுந்து என்னப்பா என்னப்பா பொழுது புலரப்போகுது இவ்வளவும் தூங்குகிறீர்கள் சீக்கிரம் எழும்புங்கோ, எழும்புங்கோ" என புரிசன் சூசையை தட்டி எழுப்பினாள் திரேசா.

இந்த வயதிலும் குடும்ப ஜீவனத்திற்கு மாடாக உழைக்கும் ஓர் ஜீவன். இன்று உடல் அலுப்பில் சிறிது அயர்ந்து தூங்கிவிட்டார்.

அவர் மிகுந்த அசதியுடன் என்ன திரேசா இப்பதான் படுத்தது மாதிரி இருக்கு, அதற்கிடையில் விடிந்து விட்டதா? என்ற கேள்வியுடன் படுக்கையை விட்டு எழும்ப மனமில்லாது எழும்பி, நேற்றிரவு படுக்க போவதற்கு முன்னர் பற்ற வைத்த குறைச் சுருட்டை ஓலைப்பாய்க்கடியில் தனது வலது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரத்தால் தேடி எடுத்து அக்குறைச்சுருட்டை வாயில் வைத்து குப்பி விளக்கில் பற்ற வைத்து இரண்டு புகை இழுத்து வெளியில்விட்டபடி துண்டை இருதரம் மேலும் கீழும் ஆட்டி உதறி தோளில் போர்த்திய வண்ணம் காலைக்கடன் முடிப்பதற்காக இராசம்மாவின் வடலி நோக்கி சென்றார்.

கைகால் கழுவிய பின்னர் வீட்டு வாசலில் உள்ள சுவர் ஒட்டில் காணப்பட்ட தூசியை துடைத்தவண்ணம் அமர்ந்தார்.

"என்ன திரேசா உனக்கு எத்தனை நாள் சொல்லுகிறது திண்ணை மெழுகும்போது சாணிக்கட்டை இல்லாது நன்றாக அழுத்தி, தேய்த்து மெழுக வேணும் என்று."

நேற்று பிள்ளை நிவேதிதா தான் திண்ணை நிலம் மெழுகினாள் என அடுக்களைக்குள் புரிசனுக்கு சுடச்சுட தேநீர் கலந்தவாறு பதில் சொன்னாள்.

அடுக்களைக்குள் இருந்து ஆவி பறக்க பறக்க தேநீரை எடுத்து வந்து புரிசன் சூசையிடம் கொடுத்தாள். அவர் தேநீரை ஊதி ஊதி குடிக்கும் போது! என்னப்பா நேற்று நீங்கள் கடலுக்கு போன நேரம் வட்டி வைத்தி வந்து நாங்கள் வாங்கிய முதலையும், வட்டியையும் வரும் நத்தாருக்கு முன்னர் தரச்சொல்லிவிட்டு போனவர்.

"நத்தார் வருகிறது. இந்த முறையாவது பிள்ளைகளுக்கு புதிய உடுப்பு வாங்க வேணும், நவசியின் கடைக்காசு, சிதம்பரத்தின் அப்பக்காசு, பாட்டிசனிடம் வாங்கிய கைமாற்று கடன்கள் எல்லாவற்றையும் கொடுத்து தீர்த்து விடவேண்டும் என அடுக்கிக்கொண்டே போனாள் திரேசா."

அவளின் புலம்பலை கேட்டவாறே தேநீரை குடித்து முடித்துவிட்டு தலைப்பாகை துணியை உதறி சாணப்புளிதியை போக்கி கெட்டியாக மடித்து தலையின் இடது பக்கத்தில் தொடங்கி வலது பக்கம் நோக்கி எடுத்து சுற்றி மடிப்பொன்றை போட்டு அதற்குள் தலைப்பாகை துணியின் மறு பக்கத்தை செருகி கட்டியது சரிதானா என ஒரு தரம் உறுதிப்படுத்தி வாயில் சுருட்டுடன் மனைவி கொடுத்த வெற்றிலை, பாக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லுவத்தை இடுப்பில் செருகிக்கொண்டு தனது இஷ்ட தெய்வமான மாதாவை மனதுள் அசைபோட்டு தலை சாய்த்து வேண்டியபடி, கடற்கரை நோக்கி புலர்ந்தும், புலராத பொழுதில் புறப்பட்டார் சூசை.

கடற்கரை சென்றடைந்தவர் அணியம் வைத்திடும் கீற்றுக்கொட்டில் கதவை நகர்த்தி தீப்பெட்டி வெளிச்சத்தில் சூழ்லாம்பை பற்றவைத்து எரியவிட்டு அதன் வெளிச்சத்தில், வலை, நங்கூரம், தக்கை, சுக்கான், கயிறு போன்ற அணியங் களை ஒழுங்கு செய்து போட்டு எஞ்சினை சிரமப்பட்டு தூக்கி தொழில் வைத்து சுமந்து சென்று போட்டில் பூட்டியபடி இருக்கும்போது! அவருடன் கூடி தொழில் செய்யும் அந்தோனி வந்து சேர்ந்தான்.

அவன் அணிய கொட்டிலுக்கு சென்று அணியங்கள் சகலதையும் எடுத்து வந்து போட்டினுள் வைத்த பின்னர் எல்லா அணியங்களையும் சரிதான என சூசை உறுதிப்படுத்திய பின்னர் இருவரும் போட்டை கடலினுள் தள்ளிச்சென்றனர்.

நீரினுள் போட்டு சென்றதும், கடலுக்கு புறப்பட முன்னர் எஞ்சினை இயக்கினான் அந்தோனி. எஞ்சினின் இயக்கம், சத்தம் சரிதான் என சூசை உறுதிப்படுத்திய பின்னர் சுக்கானை பிடித்த வண்ணம் போட்டை ஓட்ட ஆரம்பித்தான் அந்தோனி.

சூசை வாயில் இருந்த சுருட்டை எடுத்து விட்டு ஒரு செருமல் செருமி எச்சிலை கடல் நீரில் உமிழ்ந்து துவாயால் வாயை துடைத்தவாறு, "அட தம்பி அந்தோனி என்ற விழிப்புடன், நீ வெளிநாடு போகலாம் தானே. இண்டைய சூழ்நிலையில் இளம்பொடியங்களின் உயிருக்கு உத்தர வாதம் இல்லைத்தானே. மூக்கை பிடித்தால், எப்படி வாய் திறக்க வேணும் என்று தெரியாத பொடியங்கள் எல்லோரும் போய் நல்லா உழைக்கிறான்கள். நீ உவ்வளவு பெரிய படிப்பெல்லாம் படித்து போட்டு கடற்தொழில் செய்கிறாய்." என கேட்டபடி மீண்டும் எச்சிலை கடல் நீரில் கலக்க விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பு என்னுடைய படிப்புக்கு பிரச்சனை இல்லாது நல்ல சம்பளத்தோடு வேலை தேடிக்கொள்ளலாம். நாட்டு நிலைமை காரணமாக நேர்முக பரீட்சைக்கு கொழும்பு போக பயமாக இருக்கிறது. இந்த இனப்பிரச்சனை போர் ஒரு முடிவை எட்டும் என்பது கிழக்கு மாகாண நிகழ்வுகள் கோடிட்டு காட்டுகிறது. இனப்பிரச்சனை போர் கட்டாயம் ஒரு முடிவை எட்டும் என உலக நடப்புக்களை பார்க்கும்போது தெரிகிறது அப்பு. அத்தோடு இங்கு பிரத்தியேக ரியூசன் பள்ளி பிள்ளைகளுக்கு சொல்லிக்குடுத்தே உழைக்கலாம்.

வெளிநாட்டில் இப்போது முன்னர் மாதிரி இல்லை. பலபேரை திருப்பி அனுப்புகிறார்கள். அத்தோடு வேலையும் எடுப்பது கஷ்டமென என்னுடைய கூட்டாளி கடிதம் போட்டுள்ளான். எனக்கும் சொந்த நாட்டை விட்டு தூர தேசம் போக மனம் விரும்புதில்லை அப்பு என்றான் அந்தோனி.

ஆம். அந்தோனி எம்.எஸ்.ஸி படித்தவன். படித்து விட்டு வேலை வரும் வரை பெற்றோருக்கு பாரமாக இருக்க விரும்பாது, சூசையுடன் வாரத்துக்கு கடலுக்கு செல்லுகிறான். சூசைக்கும், அந்தோனிக்கும் கடல்தொழில் பரம்பரை குலத்தொழிலாகும்.

வெளிநாட்டில் இருக்கும் கூட்டாளி ஆரடா தம்பி? என வினவினார் சூசை. அதுதானப்பு ஊறணி ஆஸ்பத்திரிக்கு பின்னால் தெணியம்மையில் இருக்கும் கந்தையாவின் மகன் இராஜன்.

அட அந்த பொடியனே? என்ற கேள்வியுடன், அதுகள் கஷ்டப்பட்ட குடும்பம் என்றாலும் மிகுந்த பண்பானதுகள். அந்த பொடியன் இராஜன் என்னுடைய சின்னவளுக்கு உன்னைப் போலவே ஐந்து சதக்காசு வாங்காது பாடம் சொல்லி குடுத்ததோடு, தனது புத்தகங்களையும் படிப்பதற்கு கொடுத்து உதவினான். அவன் வெளிநாட்டில் நிக்கிறான் எண்டு கேள்விப்பட்டன் என்றார்.

இருவரும் பேசியபடி உயர போய்க்கொண்டிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை, சூசை திடீரென "அட தம்பி 800 பாகத்திற்கு மேலே வந்து விட்டோம். இனி உயர போனால் நேவிக்காரன் வந்து தொல்லை தருவான். அதோடு இந்தியா றோளர்க்காரன் வந்து வலைகளை அறுத்து விட்டு போய்விடுவான்கள்." நீ எஞ்சினை நிற்பாட்டி இங்கே நங்கூரத்தை இறக்கு. இங்கேயே வலையை படுப்பம்.

அந்தோனி எஞ்சினை நிறுத்தி, நங்கூரத்தை பாய்ச்சி விட்டு சிறிது ஆழமாக வலையை படுத்தினான்.

அட தம்பி, சிவப்பு தக்கைகளை மிதக்கவிடு. பாழாப்போன இந்தியன் றோளர் இந்த உசரத்துக்கும் வந்து வலையை அறுத்து விட்டு போய்விடுவான். பின்னர் வீட்டில் உலை ஏறாது என முன் எச்சரிக்கையாக சொன்னபோது! அந்தோனி வெள்ளை நிற தக்கைகளை தவிர்த்து, சிவப்பு நிற தக்கைகளை கடலில் மிதக்க விட்டான்.

"கொண்டல் காற்று வடக்கிலிருந்து எழுந்தால் எப்படி வலை படுக்க வேணும், வாடை தெற்கிலிருந்து வீசினால் எத்திசையில் வலை விரிக்க வேணும் அத்தோடு நீரோட்டம் செல்லும் திசையை நன்கு கவனித்து அதற்கேற்ப வலை படுப்பதில் மகா கெட்டிக்காரன் சூசை."

"கடலைப்பற்றி நன்கு தெரிந்து, அறிந்து வைத்திருக்கும் அனுபவசாலி அவர்." அவருக்கு கடற்தொழில்; பரம்பரை தொழில் அல்லவா.

கடலை நம்பி வறுமையில் உழலும் நான்கு ஜீவன்களை கொண்டதே அவர் குடும்பம். அவரின் மூத்த மகள் ஜூசீ ய் க.பொ.த(உயர்தரம்) பரீட்சையில் சித்தியெய்தி பல்கலைக் கழகம் புகும் தகுதி இருந்தும், அரசின் தரப்படுத்தல் என்கின்ற தமிழ் மக்களின் கல்வியை தரைப்படுத்தும் வெட்டுப்புள்ளி நடை முறையினால் பல்கலைக்கழகம் புக முடியாது போய் விட்டது. அடுத்த மகள் பாடசாலை செல்கிறாள்.

சூசைக்கு ஒரே அண்ணன் குருசுமுத்து. இவருக்கு இரு ஆண்மகனும், ஒரு பெண்பிள்ளையும் உண்டு. மூத்த மகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவில். இளைய மகன் லண்டனில். மனைவியோ காணி,பரவை கொண்ட முதிசக்காரி.

குருசுமுத்துவோ பொருள் ஆசையும், சுயநலமும் உள்ளிட்ட ஒரு மனிதன். பெற்றோர் இறந்த போது! அவர்களின் செத்த வீட்டு செலவுகளை குருசுமுத்தே பொறுப்பேற்கும் நிலைக்கு தள்ளப்பட்டார். அவரிடம் வசதி இருந்தது, இருக்கிறது. சாப்பாட்டிற்கே போதிய வழி இல்லாது அல்லல் படும் சூசை சாவீட்டு செலவுக்கு பணத்துக்கு எங்கே போவார்? அதனாலேயே சாவீட்டு செலவுகளை அவர் ஏற்றார். இல்லையேல் தம்பி சூசையின் தலையில் கட்டி விட்டிருப்பார்.

பெற்றோர் இறந்த பின்னர் பொலிகண்டி ஆலடி றோட்டோரம் இருந்த பெற்றோரின் வீடு,வளவு தனக்கே உரித்தானது என அடாவடித்தனமாக உரிமை கொண்டாடி சகோதரனின் பங்கை தனக்கு எழுதி கையொப்பம் இட்டு தருமாறு அப்பப்போ சூசையுடன் பிரச்சனைப்படுவார். தான் கல்வீடு, வசதி, வாய்ப்புக்களுடன் சீவித்தாலும் றோட்டாரம் பெற்றோரின் வீடு அமைந்துள்ள காரணத்தாலும், இருவரின் சாவீட்டு செலவை தானே பொறுப்பேற்றதாலும் தனக்கே அந்த சொத்து உரித்துடையது என பேராசையுடன் வாதிடுவார். சகோதரன் பெண் பிள்ளைகளுடன் சீவியத்துக்கே அல்லல் படுவது நன்றாக தெரிந்தும், அந்த முதிச சொத்தை சகோதரனுக்கு கொடுக்க மனமில்லாது அதை ஏப்பம் விட துடிக்கிறார்.

இவரின் போக்கை நன்கு உணர்ந்த சூசை; பெற்றோரின் முதிச சொத்தில் தனக்குரிய அரைவாசி பங்கையும் சகோதரனுக்கு இனாமாக எழுதி கொடுத்து விட்டு ஏழு புளியடியில் ஓர் மண்குடிசை கட்டி வாழ்ந்து வருகிறார். அங்கிருந்தே கடலுக்கும் சென்று வருகிறார்.

"மனிதர்களுக்கு சுயநலம் தேவைதான். ஆனால் அது பிறரை வருத்துவதாக அமையக்கூடாது. பேராசை கூட பெரும் நட்டமாக அமைந்து விடும் என ஊரில் பெரியவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுவார்கள்." சூசை ஒரு சாது.

குருசு முத்துவின் மூத்த மகன், கனடாவில் இருந்து விடுமுறையை கழிப்பதற்காக ஊர் வந்து நின்ற போது! இலங்கை இராணுவத்தின் சுற்றி வளைப்பில் கைது செய்து கொண்டு செல்லப்பட்டவன், இன்று வரை விடுதலை செய்யப்படவில்லை. அவரும் மகனை தேடாத இடமில்லை, கொடுக்காத மனு இல்லை." குருசுமுத்துவின் மகன் இன்னும் வீடு திரும்பாததை யிட்டு குருசுமுத்துவின் குடும்பம் மட்டும் வேதனைப்படவில்லை. அந்தோனி குடும்பமும் அவனை நினைத்து கவலை கொள்கிறார்கள். சொந்த உறவல்லவா, எப்படி விட்டு போகும்?

குளிர்க்காற்று வீசிட, கடல் அலை தொட்டில் குழந்தையை தாலாட்டுவது போன்று வள்ளத்தை இதமாக தாலாட்டியபடி இருந்தது. அந்தோனியோ இழுத்து போர்த்திய படி அணிய கிடங்கிற்குள் தனை மறந்த உறக்கத்தில் இருந்தான்.

சூசையால் தூங்க முடியவில்லை. காலைக்கடல் உப்புக்காற்று அவரது வயது முதிர்ந்த உடலில் தீண்டி அவருக்கு குளிரை ஏற்படுத்தியது. துப்பெட்டி எடுத்து போர்த்த படி வள்ளத்தின் முன்பக்க கிடங்கில் அமர்ந்தவாறு, ஒரு சுருட்டை எடுத்து ஒருதரம் சுருட்டின் அடிப்பாகத்தை நாக்கால் நக்கி ஈரமாக்கியபின் எரிந்து கொண்டிருக்கும் சூழ் லாம்பில் அதை பற்ற வைத்து மூன்று நாலு புகை இழுத்து வெளியே விட்டபின் நாவில் ஊறிய எச்சிலை இருந்தபடியே எட்டி கடலில் உமிழ்ந்து வாயை சால்வைத்துண்டால் துடைத்த பின்னர் மீண்டும் சுருட்டை வாயில் வைத்து புகைத்தபடி, யோசனையில் ஆழ்ந்தார்.

இன்றைக்காவது அதிகமான மீன்கள் படவேணும். இன்னும் ஒரு கிழமையால் நத்தார் வரப்போகுது. நல்ல ஒரு சேலையில்லை திரேசாவுக்கு. கந்தலை தைத்து, தைத்து உடுக்கிறாள். பாவம் எப்படியோ வாழவேண்டியவள். இப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ வேண்டும் என்ற நிலை. வட்டி வைத்தியின் வட்டிக்காசு, மகள் நிவேதிதா கொம்பியூட்டர் படிக்க விரும்பி பல நாளாக காசு கேட்டபடி இருக்கிறாள். நான் காசு இல்லாத காரணத்தை சொல்லி தடை போட்டு வருகிறேன். மார்கழி மாதத்தில் நத்தாரோடு அண்டி மழை பெய்யும். மார்கழி மழை மூசிப் பெய்யும் என்பார்கள். மழை வர முன்னர் பனை ஓலை வாங்கி வீடு வேய வேணும். நவசியின் கடைக்காசு,பாட்டிசனின் கைமாற்றுக்கடன்; இப்படி சகலதையும் உள் மனதில் அசை போட்டு கடலம்மா, நீதான் இந்த ஏழைக்கு துணை புரிய வேணும் என வேண்டியவாறு, வானத்தை பார்த்தார்.

பொழுது வெளிக்கிறது என்பதற்கு அடையாளமாக ஆதவன் கீழ் வானத்தில் தோன்றி மென்மை கலந்த சிவப்பு மஞ்சள் ஒளிக்கீற்றை கடல் மேல் பரப்பி நின்றான். நாரைகள் இரண்டு துயில் விட்டு தமது இரை தேடும் படலத்திற்காக கத்தியபடி கடல் மேல் பறந்தன. இலங்கை போர் விமானம் ஒன்று பேரிரைச்சலுடன் வானத்தை ஊடறுத்து பறந்தது. பருத்தித்துறை டிப்போவின் அதிகாலை சேவையான திருமலை பேருந்து கடற்கரை வீதியால் வெளிச்சத்தை பரப்பியபடி பயணித்தது.

இனிமேல் வலையை வலிப்பம் என்ற எண்ணத்துடன் வாயில் குதப்பிய வெற்றிலையை கடலில் துப்பிவிட்டு கடலுக்கு கொண்டு செல்லும் நீரால் வாயலம்பி முகம் கழுவியபின் துவாயால் தலைப்பாகை கட்டியபடி “அட தம்பி அந்தோனி கிழக்கு வெளிச்சிட்டுது எழும்படா” என அவனை எழுப்பினார்.

அவனோ எழும்பாது தனது இளமைச்சலனத்தில் அழகான எண்ண ஓட்டங்களை மனதில் ஓடவிட்டு, “கடலில் இருந்து தரைக்கு சூசையின் ஒலைக்குடிலை சுற்றி மீனை கவ்வ காத்திருந்த பருந்து போன்று வட்டமிடலானான்”.

சூசையின் மூத்த மகள் நிவேதிதா மீது அவனுக்கு இனம் புரியாத ஈர்ப்பு. ஈர்ப்பு என்பதை விட மோகம் என்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லலாம். அந்தோனியும், நிவேதிதாவும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பள்ளியில் ஒன்றாக படித்தவர்கள். அவன் மேல் வகுப்பு. நிவேதிதா கீழ் வகுப்பு. இருவரும் ஒரே பாடசாலை என்பதால்; அவளுக்கு பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களை அந்தோனியிடம் கேட்பாள். அவனும் அவளுக்கு பாடத்தை விருப்புடன் சொல்லிக்கொடுப்பான்.

வயதிற்கேற்றது போல அவள் உடல் அங்கங்கள். "கலைக்கதிரவன் ஓடும் அலைகளில் பட்டு தெறிப்பது போன்ற அழகான மினுமினுப்பு. பார்ப்போரை சுண்டவைக்கும் கன்னத்தில் குழி விழுந்திடும் வட்ட முகம், பூத்து குலுங்கும் முன்னழகு, சிற்றிடை, தாரா நடை, அடக்கமான பேச்சு. இவற்றால் இவன் அவள் பால் ஈர்க்கப்பட்டான். இருந்த போதும், தனது விருப்பத்தை அவளிடம் சொல்ல முடியாத வாறு மனதினுள் ஏதோ ஒரு தயக்கம் தடுத்தாட்கொண்டது."

திரும்பவும் சூசை "அட தம்பி எழும்பட வலையை சீக்கிரம் வலித்து கரை சேரவேணும் என்றார்".

அவன் எழும்பி இரு கைவிரல்களையும் கோத்தபடி நீட்டி அப்பா என்ற வார்த்தையுடன் அலுப்பை முறித்துக் கொண்டு, குடிநீரில் முகம் அலம்பி, தனது படுக்கையை மடித்து அணிய கிடங்குக்குள் வைத்த பின்னர் வலையை வலிக்க ஆரம்பித்தான்.

வலை வலித்தவன் "எணை அப்பு, வலை எங்கோ கற்பாறையில் மாட்டி விட்டது போல இருக்கு. வலிக்க முடியவில்லை என்றான்". என்னடா தம்பி சொல்லுகிறாய்? இந்த உசரத்தில் பாறை இருக்க வாய்ப்பே இல்லையே! என கூறிய வாறு, தான் கரம்போட்டு வலையை வலிக்க முயன்றார். அவராலும் முடியவில்லை. பின்னர் வலையை அப்படியே அடாது, அசையாது கரம் போட்டு வலையின் மெல்லிய அசைவுகளை கைகள் மூலம் புரிந்து கொண்டு "அட தம்பி எதோ பெரிய சாமான் வலையில் சிக்கி விட்டது". நீ வலையின் நாணய கயிற்றை இதிலே மாட்டி, போட்டின் சுக்கான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனையிலும் மாட்டு என அவசரப்படுத்தினார்.

அவர் சொன்னது போல அவன் நாணய கயிற்றை மாட்டிய பின்பு, இருவரும் சேர்ந்து வலையை வலித்தும் முடியவில்லை.அட தம்பி எங்களால் இது இயலாது. வேறு போட்டிற்கு சைகை (சிக்கினல்) காட்டி உதவி கேட்பம் என்றவாறு, "அணிய கிடங்கிற்குள் இருந்த சிவப்பு துணியை எடுத்து வலிப்பானில் கட்டி தூர நின்ற போட்டுக்களுக்கு அசைத்து அசைத்து சிக்னல் காட்டினார்." ஆனால் எந்த ஒரு போட்டும் இவரது சிக்னலை அவதானிக்கவில்லை. இனிமேல் நின்று பிரயோசனம் இல்லை. நீ எஞ்சினை ஸ்ராட் பண்ணு. மெது வாக இழுத்துக்கொண்டு கரைக்கு போவம் என்றார் சூசை.

அவன் எஞ்சினை ஸ்ராட் பண்ணி ஓட முயன்றான். முடியவில்லை. "அட தம்பி முழு குதிரை வலுவையும் கூட்டி சுக்கானை பிடி என்றார்". அந்தோனியும் முழு எஞ்சின் வேகத்தையும் கூட்டி சுக்கானை பிடித்தபோதும், படகு மிக மெதுவாகவே நகர்ந்தது.

மாதாவே! இண்டைக்கு எதோ கண்திறந்து விட்டாய். சம்மட்டியின் பங்கு, அணியம் எண்ணெய் செலவு தள்ளி ஆயிரக்கணக்கில் இருவருக்கும் கிடைக்கும். திரேசா கலையில் கூறியவற்றை எண்ணிய படியும், இன்று வல்வெட்டித்துறை சாராய தவறணைக்கு சென்று ஒரு மெண்டிஸ் போத்தல் வாங்கி வந்து அடிக்கலாம் என்ற தனது அங்கலாய்ப்பையும் நினைத்து சந்தோசம் அடைந்து, வாய் ஒரே கச்சலாக இருக்கு. அதை போக்க ஒரு புகை விடுவம் என எண்ணி வல்லுவத்தினுள் இருந்த சுருட்டை எடுத்து வாயில் வைத்த போது! திடீரென கடலில் துப்பாக்கி சூட்டு சத்தங்கள் கேட்டன. துப்பாக்கி சன்னங்கள் இவர்கள் நின்ற படகுத்திசை நோக்கி கண்களுக்கெட்டிய தூரம் வரை சீறிப்பாய்ந்து வந்தன.

நேவிக்காரன் ஒரு போட்டை துரத்தி, துரத்தி வெடி வைத்தபடி வருகிறான். இந்த நேரம் பார்த்து இவர்களது போட்டும் பாரமிகுதியால் வேகமாக ஓட மறுக்கிறது. அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு படகுகளும் இவர்களது போட்டு பயணிக்கும் திசை நோக்கியே வேகமாக வருவதை அவதானித்த சூசை,ஒரு கணம் திகைத்து செய்வதறியாது நின்றாலும்; மறுகணம் நடக்கப் போகும் விபரீதத்தை உணர்ந்து "அட தம்பி கத்தி எடுத்து வலைகளை சீக்கிரம் வெட்டி கடலில் விடடா." இந்த இடத்தை விட்டு கெதியாக தாள போகவேணும். இதே உயரத்தில் நின்றோமானால் எம் உயிருக்கு ஆபத்து என மீண்டும் அவனை அவசரப்படுத்தினார்."

அந்தோனியோ அவரது குடும்ப நிலைமையை எண்ணி வலையை வெட்ட மறுத்தான். வருடம் பூராகவும் சம்மட்டி செபஸ்டியின் போட்டில் வாரத்துக்கு தொழில் செய்த போதும்! இன்றைக்கு பட்ட மீனைப்போல என்றுமே படவில்லை. அதை விட பெரிய சாமான் ஒன்றும் இன்று எங்கள் வலையில் சிக்கியுள்ளது. இம்முறை நத்தார் கொண்டாட்டத்தையாவது சூசை அப்பு குடும்பத்துடன் புதுத்துணி எடுத்து சந்தோசமாக கொண்டாடட்டும். தன் இதய ராணி நிவேதிதாவுக்கும் புதிய உடுப்பு கிடைக்கும் அல்லவா என்ற எதிர்பார்ப்புக்காகவும் வலைகளை வெட்ட சம்மதிக்கவில்லை.

"சூசையோ தானே கத்தியை எடுத்து அவசரம் அவசரமாக வலைகளை அறுத்து கடலில் விட்டு விட்டு வேகமாக ஓட்டு என கூறி மௌனமானார்."

அந்தோனி போட்டை மிக வேகமாக ஓட்டி; அவர்கள் நங்கூரம் பாய்ச்சி படுத்து மீன்பிடித்த இடத்திலிருந்து இருநூறு பாகம் கரையை நோக்கி கீழே வந்தவேளை!

"அவர்கள் நங்கூரம் இட்ட அதே இடத்தில் கடலையும், வானத்தையும் அதிரவைக்கும் பயங்கர வெடிச்சத்தம் கேட்டது. அத்தோடு புகை கக்கியபடி பெரும் தீப்பிழம்பும் தென் பட்டது."

வெடிச்சத்தத்தின் பின்னர் சூசை அந்தோனியின் முகத்தை பார்த்தார். "அவனது முகத்தில் பயத்தின் ரேகைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படர்ந்து காணப்பட்டன, இதயம் இறுகி இயங்க மறுத்தது போன்ற உணர்வில் ஒருதரம் உறைந்து நின்றான்." அந்த நிலையிலும் அவனின் உயிரை காப்பாற முடிந்ததைய்யிட்டு சந்தோஷபெருமூச்சு விட்டார் அவர்.

ஆனால் அவனோ; தனது உயிரை காப்பாற்றுவதற்காக அவருக்கு முதல் முதல் கிடைக்க இருந்த ஆயிரக்கணக்கான பணத்தை இழந்து விட்டாரே என மனம் நொந்து கொண்டான்.

கடலுக்கு போன வள்ளத்தை "எதிர்பார்த்து" மனைவி மார் தேத்தண்ணி, பாண், இடியப்பத்துடன் கரையில் காத்து நிற்பது வழமை. அப்படியே திரேசாவும் கணவன் சூசையின் போட்டை "மிகுந்த எதிர்பார்ப்புடன்" தேநீர், பாணுடன் இன்றைக்காவது கனக்க மீன்கள் பட்டிருக்க வேணும் என தெய்வத்தை வேண்டியபடி காத்திருந்தாள்.

போட்டு வந்து கொண்டிருப்பதை பார்த்து விட்டு அது தரை தட்ட முன்னர், பித்தம் வெடித்த காலினுள் கடற்கரை மணல் புகுந்து குத்த குத்த தனது சேலை நனையாதவாறு சேலையை ஒரு கையால் கெண்டைக்கால் அளவு உயர்த்தி பிடித்த வாறு ஓடிப்போய் மிகுந்த எதிர்பார்ப்புக்களுடன் வள்ளத்தை எட்டிப்பார்த்தாள்.

"வழமையாக மீன்களுடன் வலை இருக்கும். இன்று அந்த வலைகளையே காணாது ஏக்கத்துடன் புருசனின் முகத்தை பார்த்து கண்கள் கலங்கினாள்."

மனைவியின் எதிர்பார்ப்புக்களை புரிந்திட்ட சூசை, சோகம் ததும்பிய முகத்துடன் அவளையே பார்த்தபடி "தன் நெஞ்சின்மீது கையை வைத்தார்."

- திருமலை இலக்கிய ஒன்றிய 28 கதைத்தொகுப்பில்-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்க்கு எட்டா மீன் குழம்பு

நாக்கு செத்து போச்சு. தினமும் உப்பு, சப்பு, ருசி இல்லாது சாப்பிட்டு. "மீன் குழம்பு" வைச்சு சாப்பிட்டால்! எப்படியி ருக்கும், என தன் மனதுள் எண்ணியவாறு, கொல்லைப்பக்கம் சட்டி, பானைகள் கழுவிய படி இருந்த மனைவி பாறுவதத்திடம் தன் உள்ளக்கிடக்கை வெளிப்படுத்தினான், கணபதி.

"ஆமா! இறங்கு பெட்டிக்குள் பணம் கொட்டி கிடக்குது, அதை திறந்து எடுத்துச் சென்று மானாண்டி சந்தையில் மீன் வாங்கி வந்து நாக்குக்கு ருசியா சமைத்து போட என்று சினந்தாள்", பாறுவதம்.

மனைவியின் வசை கணபதிக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தியது. அந்த வதை பேச்சு அப்பப்போ நடப்பது வழமைதானே! அதுக்கேன் குரலை உயர்த்தி கத்திறாய்? அதை மெதுவா சொல்லலாம்தானே! என கூறி, எனது கை,கால் வீசிடும் காற்றுப்போல இயங்கிய வேளை! என்னுடைய கணவன் சீராளன். ஓய்வில்லாமல் ஓடிக்கொண்டிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் நதிபோல. குடும்பத்தை எண்ணி ஓடி, ஓடி சம்பாதிப்பதில் வல்லவர். எனக்கும், பிள்ளைகளுக்கும் எந்த குறையும் வைக்காதவர் என பக்கத்து வீட்டு பங்கயம் அக்காவுக்கும், தனது தாய்க்கும் சொல்லி பெருமைப்படுவாள். ஆனால் விதி செய்த சதியால் நான் முடங்கிய பின், முன்னர் குடும்பம் என எண்ணி தான் பட்ட கஷ்டம் எல்லாத்தையும் காற்றில் அள்ளுண்டு போக விட்டு தினமும் தான் தொட்டு தாலி கட்டிய மனைவியிடவே சினப்பு கேட்கவேண்டியுள்ளது என தன் மன உளைச்சலை வெளிக்காட்டாது இருந்த போதும், தமது "வறுமை நிலையில் மீன் குழம்புக்கு ஆசைப்படுவது பேராசை" என உணர்ந்து ஊமையானான்.

"ஒரு குடும்பம் பிள்ளை,குட்டிகளுடன் பிரச்சனை இன்றி ஓட வேண்டுமானால், பிரச்சனைகள் தோன்றும்போது! கணவனோ அல்லது மனைவியோ விட்டு கொடுத்து போக வேணும். அப்போதான் பிள்ளைகளின் எதிர்காலம் சூரியன் ஒளிபோல மிளிரும். அதனால் கணபதியே அமைதியாக விட்டுகொடுத்து அல்லது ஒதுங்கியே இருந்து விடுவான்."

கணபதி காலை, மாலை கள் இறக்குவான். அதிகாலை சேவல்,குருவிகள் தமது தூக்கத்தை விட்டு எழும்பிய அடையாளமாக கூவியும், கீச்சிட்டும் ஒலி எழுப்பும் போது! பறப்பனவுடன் கணபதியும் தூக்கம் விட்டு எழுந்து தனது சீவல் தொழிலுக்கு அதிகாலை மைம்மல் பொழுதில் புறப்பட்டு விடுவான். காலைச்சீவலை ஒன்பது மணிக்கு முடித்து விட்டு, அக்கள்ளை கோப்பிறேசனில் ஒப்படைக்கும் பொறுப்பை தன்னுடன் கூட பள்ளியில் படித்த தனது உற்ற நண்பன் வடிவேலுவின் தலையில் சுமத்திவிட்டு திண்டது பாதி, தின்னாதது பாதியாக சைக்கிளில் ஏறி மிதித்தபடி மறு தொழிலான தச்சு வேலைக்கு புறப்பட்டு விடுவான்.

வடிவேலு இருவரது கள்ளையும் தனது ஓட்டை சயிக்கிள் கரியற்றில் கட்டியும், காண்டிலின் இருபக்கமும் தொங்க விட்ட படியும் அல்வாய் பங்குவேம்படி சுடுகாட்டுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகில் அமைந்துள்ள தவறணைக்கு கொண்டு சென்று கொடுப்பான்.

வடிவேலு மாணிக்கத்துக்கு தெரிந்தவருமல்ல,உறவும் அல்ல, வடிவேலுவின் அப்பா காங்கேசன்துறையில் இருந்து தொழில் நிமித்தம் கொற்றாவத்தையில் கால் ஊன்றினார். கொற்றாவத்தையில் தொழில் புரிய தொடங்கியதும் அந்த ஊர் மக்களின் நல்ல குணத்தை நேரிடையாக கண்டு அவர் மெல்ல மெல்ல அந்த ஊர் மக்களுடன் பழக ஆரம்பித்து, தனது குடும்பத்தையே கொற்றாவத்தைக்கு அழைத்து வந்து மாணிக்கத்தின் வீட்டுக்கு பக்கத்தில் உள்ள மாம்தோப்பு,பனம் தோப்பு காணிக்குள் காணிக்காரரின் அனுமதியுடன் மண்குடிசை போட்டு வசிக்க தொடங்கினார். பின்னர் அதுவே அவர்களுக்கு நிரந்தரமாக வசிக்கும் ஊராகவும், சோறு போடும் இடமாகவும் மாறிப்போச்சு.

பக்கத்து வீடு என்பதால் சிறு,சிறு கொடுக்கல், வாங்கல், உதவி என ஆரம்பித்து இன்று இணைபிரியா நட்பு பாராட்டும் அளவுக்கு அந்த உறவு வளர்ந்துள்ளது.

தச்சு வேலை 5 மணிக்கு முடிவுற்றதும், மீண்டும் அதே அவசரத்தில் வீடு வந்து மனைவி கொடுக்கும் ஒரு டம்ளர் தேநீரை நின்ற நிலையில் மடக்,மடக் என அருந்தியபின், மாலைச்சீவலுக்கு இயனக்கூட்டை அரையில் கட்டி காதோல், மாதோல் மாட்டி, முட்டிகளையும் கொண்டு மறுபடியும் சைக்கிளில் மாலை சீவலுக்கு புறப்பட்டு விடுவான். புறப்பட்டு, இறக்கிய மாலைக்கள்ளை தானே தவறணைக்கு எடுத்து சென்று கொடுப்பான், கணபதி. காற்றுக்கு கூட சில வேளை ஓய்வு கிடைக்கலாம்.ஆனால் இவனுக்கோ ஓய்வுறக்கம் இல்லாதா வேலை.அவன் நல்ல பிரயாசி.

கணபதியும், வடிவேலுவும் சிறுவயதிலிருந்தே ஒன்றாக கொற்றாவத்தை ஆரம்ப பள்ளியில் படித்தனர்.கல்வி இருவரினதும் மக்கு மூளைக்குள் ஏறாததால் படிப்பை இடையில் நிறுத்தி விட்டு இருவரும் சீவல் தொழில் செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்தனர். வடிவேலுவால் அதிக பணை சீவ அவனது உடல் நிலை இடம் கொடுப்பதில்லை. அவனுக்கு தீராத சலரோகம். முட்டு வேறு. இருவரும் இணை பிரியா நட்புள்ளவர்கள். அவர்களின் நட்போ இறுக்கமானது. வடிவேலுவுக்கு நான்கு பிள்ளைகள். அவனது பெரிய குடும்பத்துக்கு அவனது உழைப்பு போதுமானதாக இல்லை. குடும்பம் வறுமையில் உழலுகிறது. பிள்ளைகள் படிக்கும் வயதினர். பிள்ளைகளின் படிப்பு செலவு, உடுதுணி போன்றவற்றிற்கு வடிவேலு மிகுந்த கஷ்டப்படுகிறார். மாணிக்கமும், அவர் மனைவியும் அடுத்தவர் கஷ்டம் பார்த்து இரங்கும் சுபாவம் உள்ளவர்கள். நண்பன் குடும்பத்திற்கு அப்பப்போ நல்லது, கெட்டவற்றிற்கு கணபதி குடும்பம் பண உதவி, பொருள் உதவி, சமையல் உதவி என பலவும் செய்வார்கள். இந்த உதவியை வடிவேலு குடும்பமும் நிராகரிப்பதில்லை.

அதே நேரம் வடிவேலுவின் மனைவி, கணபதி குடும்பத்திற்கு சதுர உதவிகளை இரவு, பகல் என நேரம் பாராது அன்புடன் செய்வாள்.

கணபதி சீவல் மூலமும், தச்சு வேலை மூலமும் சம்பாதிக்கும் பணம் அனைத்தையும் மனைவியிடம் கொடுத்து விடுவான். அவன் தனக்கென சல்லி காசு கூட எடுப்பது மில்லை, செலவு செய்வதுமில்லை. மனைவியின் பொறுப்பிலே விட்டு விடுவான். அவள் பிள்ளைகள் இருவரினதும் பள்ளிச் செலவு, போக்குவரத்து, உடுதுணி, வீட்டுச்செலவு அனைத்தை யும் கவனிப்பாள்.

சுட்டெரிக்கும் வெய்யிலுக்குள் காலில் செருப்பில் லாது, சேலை தலைப்பால் முக்காடு போட்டபடி மானாண்டி சந்தைக்கு சென்று மீன், அரிசி, உப்பு, புளி, மிளகாய், வெங்காயம், காய்கறி எல்லாம் வாங்கி வேர்த்து விருவிருக்க வீடு திரும்பி குடும்பத்திற்கு வாய்க்கு ருசியாக சமைத்து போடுவாள், பாறுவதம்.

அவள் சமையலில், மனைவி வைக்கும் "அரைச்ச மீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழம்பில்தான்" கணபதிக்கு அலாதி பிரியம். "மூக்கின் நாசித் துவாரத்தால் மணந்து மணந்து நாக்கை சுழட்டி சுழட்டி ஒரு பிடி பிடிப்பார்." மீன் குழம்பு என்றால் அவருக்கு அன்றைய தினம் தீபாவளிதான். அவள் கறி ஆக்கியதும் ஒரு தேங்காய் சிரட்டையில் வெறும் கறியை சுட சுட கொண்டு வந்து அவருக்கு கொடுப்பாள். அவரோ மீன் குழம்பை மணந்து, மணந்து, ஊதி, ஊதி குடிப்பார். புருசனுக்கு குழம்பு உறைக்க வேணும். பிள்ளைகளோ உறைப்பென்றால் சாப்பிடவே மாட்டார்கள். அதனால் அவள் மீன் குழம்பு ஆக்கும்போது! உறைப்பை போடமாட்டாள். இது கணபதிக்கு பிடிக்காது. சில வேளை வாய் விட்டு மனைவியை ஏசுவர். அவளும் குறைந்தவள் இல்லை. கணவனை மதிக்காது, வாய்க்கு வாய் காட்டுவாள். ஆனால் குடும்பத்தை பொறுப்பாக, சரியாக வழி நடாத்துவதில் கெட்டிக்காறி.

எவரிடமும் உதவி என்று எதுவும் கேட்க மாட்டாள். தானே எவ்வளவு வேலைகள் தலையில் சுமையாக இருந்தாலும், மாங்கு, மாங்கென கை, கால் ஆட்டி ஓடி, ஆடி வேலை செய்வாள். இந்த பழக்கத்தை அவள் தனது தாயிடம் சிறுவயதில் இருந்தே கற்றுக்கொண்டாள். அது இன்று அவளது குடும்ப வாழ்வுக்கு கை கொடுக்கிறது.

அவர் கொடுக்கும் பணத்தில் மிச்சம் பிடித்து வாரத்தில் இரு தடவை கொத்தமல்லி, பூடு, சீரகம், வெந்தயம், சின்ன வெண்காயம், கராம்பு, இஞ்சி, பதாம் பருப்பு எல்லாவற்றையும் குண்டிப்பலகையில் கால்கள் இரண்டையும் அகட்டி இருந்தவாறு அம்மியில் கழிபட அரைத்து "அடுத்த வீட்டு படலைவரை மணக்க மணக்க ஆக்குவாள் மீன் குழம்பு".

இப்படி மீன்குழம்பு ஆக்கும் நாட்களில் இரண்டு சிறங்கை அரிசி கூடப்போடுவாள் உலையில். பிள்ளைகள் மீன் குழம்பு என்றதும் வழமையை விட அதிகம் சாப்பிடுவார்கள். இதில் அவளுக்கு ஒருவகை சந்தோசமும் கூட. பிள்ளைகள், கணவன் சாப்பிட முன்னர் தனக்கு பசி எடுத்தாலும் சாப்பிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டாள், பாறுவதம். அவர்கள் சாப்பிட்டு சிலவேளை மிச்சம் விடுவார்கள். அதை எடுத்து சாப்பிடுவதில் அவளுக்கு ஒரு தனி அலாதி விருப்பம்.

"ஆனால், இப்போது அந்த நிலைமை மாறி ஒரு வருடம் கடந்தோடி விட்டது. அவள் வீட்டில் குழம்பு ஆக்கியும், வயிறாற உண்டும் மாதங்கள் பல ஆச்சு. கால தேவன் அவர்கள் வாழ்வில் மழையாக வந்து அவர்கள் வாழ்வில் நீண்ட வறுமை, துயரத்தை பரிசாக கொடுத்து திரும்பி பாராது இரக்கமற்று வந்த வழியே சென்று விட்டான்."

வெளிநாட்டில் வாழும் ஒருவரின் புதிய வீட்டை அவவ விடுமுறையில் நாட்டுக்கு வர முன்னர் முடித்து கொடுக்க வேண்டும் என்ற அவசரத்தில் கோப்பிசம், கூரை போடும் வேலைகள் மிக துரிதமாக நடைபெற்றது. அந்த நேரம் மழை காலமும்கூட. அன்றைய தினம் "மழை சற்று கூடுதலாக பெய்து கட்டிடத்தை நனைத்து ஈரமாக்கி சென்றது."

"கணபதி கோப்பிச வேலையில் மரம் ஒன்றை தூக்கி அடுத்த மரத்துடன் பிணைத்து ஆணி தைக்க முயன்ற வேளை! ஈரமான கட்டிடம் என்பதால் கால் சறுக்குபட்டு இடறி கீழே விழுந்தான். விழுந்ததும் அவனது வலது முழங்கால் முட்டி உடைந்து இரத்தம் பீறிட்டு வேதனையில் துடித்தான்."

கூட வேலை செய்பவர்கள் அவனை உடனே மந்திகை வைத்திய சாலைக்கு எடுத்து சென்று, அவசரப்பிரிவில் சேர்க்கப்பட்டு உடனடியாக முழங்காலில் சத்திர சிகிச்சையும் செய்யப்பட்டது. தொடந்து நான்கு மாதங்கள் வைத்திய சாலையில் இருந்தும் அவனது வலது கால் இயங்க மறுத்து விட்டது."

இதனால் "நொண்டி என்ற பெயருடன் நொன்டியாகவே வீட்டில் முடங்க வேண்டிய பரிதாப நிலை அவனுக்கு ஏற்பட்டு விட்டது."

கள்ளு கோப்பிரேசன் அவனது சம்பளத்தில் பிடித்து வைத்த பணத்துடன் தானும் சிறுதொகை போட்டு அவனுக்கு கொடுத்தது. அப்பணம் ஆஸ்பத்திரியில் இருக்கும் வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்து, சத்தான உணவுக்கு உதவியது.

"தற்போது! அவனது குடும்ப வாழ்வுக்கு வருமானமே இல்லை. குடும்பம் நூல் இல்லா பட்டம் வானில் நிலையாக பறக்க முடியாது தத்தளிப்பது போன்று, குடும்ப நிலை மாறத்தொடங்கி விட்டது. மனைவி சேமித்து வைத்திருந்த சிறு தொகை பணமும் வைத்தியம், மற்றும் குடும்ப செலவில் படிப்படியாக கரைந்து போனது. ஈற்றில் சாப்பாட்டிற்கே பிறரை கையேந்தும் நிலைக்கு குடும்பம் தள்ளப்பட்டது."

அவனிடம் முன்னர் உறவுகள், தெரிந்தவர்கள், நண்பர்கள் என உதவி கேட்டு வரும்போது! இல்லையென மறுக்காது கொடுப்பான். அவர்கள் திருப்பி தரும்போது பெற்றுக்கொள்ளுவான். அப்படி திரும்ப தராமல் விட்ட கணக்கு தண்ணியில் எழுதிய கணக்கு போல இல்லாமல் போன தொகை அதிகம். அதனால் மாணிக்கத்துக்கு ஊரில் நல்ல செல்வாக்கும், பெயரும் இருந்தது.

ஆனால், தற்போது அந்த நிலை எல்லாம் தலைகீழாக மாறி விட்டது. அக்கம், பக்கம் உறவுகள் இவர்களை கண்டாலே துட்டனை கண்ணுற்ற மனிதர்கள் போல பாராமுகமாக ஒதுங்கி போகும் நிலை உருவானது. "வறுமை, அண்டை வீட்டார்களின் இதயத்தில் ஈரமில்லாது மனிதத்தை புடுங்கி எறிந்து தூர விலக்கிவிட்டது."

"தற்போது குடும்ப சுமை பூராகவும் பாறுவதத்தின் தலையில். அவள் சுமைதாங்கியாக, மனைவியாக, தாயாக, குடும்ப தலைவியாக மாற்றம் கண்டு விட்டாள்." வீட்டில் பிள்ளைகளின் பட்டினியை எத்தனை நாட்களுக்கு ஒரு தாயால் தாங்கிக்கொள்ள முடியும்? வீட்டில் இருந்து குடும்பம், சமையலை பார்த்தவள் தற்போது குடும்ப சுமையை தான் சுமப்பதற்காக வேலைக்கு செல்ல வெளிக்கிட்டாள். "தோட்ட வேலை, பன்னவேலை, மண்சுமப்பது என கிடைத்த வேலை அத்தனையையும் செய்தாள்." பெண் தொழிலாளர்களுக்கு இலங்கையில் சம்பளம் மிக குறைவானதே. அதை வைத்து ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலோ அரிசி, பருப்பு, மீன் கூட வாங்க முடியாது.

கொற்றாவத்தை ஆயிட்டியப்புலம் முருகன் ஆலய திருவிழா நேற்றைய தீர்த்தத்துடன் முடிவுற்றது. இவ்வளவு நாட்களும் ஊரே விரத சாப்பாடுதான். மாமிசம் யாரும் சமைப்பதில்லை. மாணிக்கம் வீட்டிலும் மரக்கறிதான்.

இன்று பிள்ளைகளுக்கு வாய்க்கு ருசியாக "அரைச்ச மீன் குழம்பு" ஆக்கி கொடுக்க வேணும். அவர்கள் பசியாற சாப்பிட்டு அதிக நாட்கள் ஆகி விட்டன. சின்னவனின் ரியூசன் பீஸ் வேறு கட்ட வேணும். அது கட்ட வேண்டிய தவணை பிந்தி இரு கிழமைகள் ஆகுது. இவற்றை எல்லாம் குளை திண்ட ஆடு இரை மீட்பதுபோன்று இவளும் முன்னர் தாம் வாழ்ந்த வாழ்க்கையை எண்ணி, விழிகளில் இருந்து நீர் அருவியாய் சரம் கோர்க்க, உணர்வு மரத்துபோய் கவலையுடன் இருந்தாள், பாறுவதம்.

வீட்டில் இருந்த "வெள்ளி பாத்திரம்" சிலவற்றை எடுத்த படி, பொலிகண்டி ஆலடியில் இருந்து பருத்தித்துறை பஸ் 751 பிடித்து பருத்தித்துறையில் இறங்கினாள். பஸ்ஸால் இறங்கிய வுடன் நேரே பித்தளை, வெள்ளி பாத்திரம் விற்கும் முஸ்லீம் சகோதரனின் கடைக்குள் சென்று, கடைக்கார முஸ்லீம் சகோதரனுடன் முடிந்தவரை பேரம் பேசி வெள்ளிப் பாத்திரங்கள்... மீன், கருவாடு, அரிசி, காய்கறி, களிசான், சட்டை என உருமாற்றம் பெற்று திரும்பவும் அதே பஸ்ஸில் வீடு வந்தன.

கணபதி பொல்லை ஊன்றியபடி இன்றைக்காவது மணக்க, மணக்க சூடாக மீன் குழம்பு சாப்பிடலாம் என நாவூற மனைவி வரவை எதிர்பார்த்து காத்திருந்தார்.

பருத்தித்துறையிலிருந்து வீடு திரும்பியவள், வாங்கி வந்த பொருட்களை வீட்டு தாவரத்தின் கீழ் வைத்து விட்டு, மீன் பழுது பட முன் உடுப்பை மாற்றி, வீட்டின் பின்பக்கம் படர்ந்து நிற்கும் செம்பாட்டு மாவர நிழலில் மீனை நன்றாக செதில் அகற்றி, சிறு துண்டுகளாக வெட்டி, வெட்டிய துண்டுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறொரு பத்திரத்தில் இட்டு கழுவி,மீன் துண்டை கவ்வி செல்ல முயன்ற காக்கை கூட்டங்களை தடியால் சூ..சூ..என கலைத்தவாறு, மீன் செதில் தண்ணீரை மணம் வீசாத தூரத்தில் ஒதுக்கு புறமாக வேலியோரத்தில் பூவரசிற்கு பக்கத்தில் வளர்ந்து வரும் கறிவேப்பிலை கண்டின் அடியில் ஊற்றிவிட்டு குசினிக்குள் சென்றாள்.

வழமையை விட பெரிய சட்டியாக அடுப்பில் ஏற்றி பனம் மட்டைகளை நன்றாக அடுக்கி நெருப்பை மூட்டி, புளியை போதுமான அளவு கரைத்து, கறிவேப்பிலை, சீரகத்துடன் தேங்காய் பாலை கொதிக்க விட்டு, அரைத்த கூட்டை சட்டியினுள் போட்டு கதகத வென குழம்பு வந்ததும், மீன் துண்டுகளை இட்டு உப்பை அளவாக போட்டு கறி அகப்பையால் சிறு சொட்டு கறியை தன் உள்ளம் கையில் விட்டு ஒருதரம் ஊதி சூட்டை தணித்து நாக்கால் ஒற்றி ருசி பார்த்து மீன் அவிந்த பின் குழம்பு ஆக்கினாள்.

"குழம்பு வாசனை வீடெல்லாம் பரவியது. கணபதி இன்று மீன் குழம்பு, மீன் குழம்பு என பரவசம் அடைந்தார்."

புதுக்குடியிருப்பு புது மாத்தலனில் வசித்து வரும் பாறுவாதத்தின் பெற்றோர், "மருமகன் காலுடைந்து" படுத்த போது! நாட்டு பிரச்சனையால் உடனடியாக பார்க்க வர முடிய வில்லை.

அன்று சொல்லாமல் கொள்ளாமல் பெரிய பலா பழத்துடன் வேறு சில உறவுகளுடன் கொற்றாவத்தையில் இருக்கும் மகள் வீட்டிற்கு மதிய சாப்பாட்டு நேரம் பசிக்களை யில் களைத்து விழுந்து வந்து நின்றனர். இவர்களை எதிர்பாராத பாறுவதம் ஒருகணம் திகைத்து நின்றாலும், சுதாகரித்த வண்ணம் அவர்களை வரவேற்று குடிக்க முதல் தண்ணீர் கொடுத்தாள்.

எல்லோரையும் வெய்யில் களை தீர குளித்து வருமாறு கூறி விட்டு, வந்த விருந்தினர்களுக்கு பிரத்தியேகமாக கத்தரிக்காய் பொரியலும், முட்டையும் அவித்தாள். அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளித்து முடிந்து வந்ததும் பாறுவதம் பெற்றோர், உறவுகளை உட்கார வைத்து உணவை அன்புடன் பரிமாற தொடங்கினாள். அவள் உணவு பரிமாறுவதை கணபதி பார்த்த வாறே இருந்தார். அவள் தட்டில் சோற்றை போட்டு, சோற்றின் மேலே ஆவி பறக்க மீனோடு குழம்பையும் ஊற்றி, அருகில் கத்தரி பொரியலையும், அவித்த முட்டையையும் வைத்தாள்.

"நல்ல வெய்யிலின் ஊடக பயணம் செய்து பசிக்களைப்பில் வந்தவர்கள் பசி தீர, மீன் குழம்பை குழைத்து, குழைத்து ஒரு பிடி பிடித்தனர். அவர்கள் எல்லோரது வயிறும் நிரம்பி பசி தீர்ந்தது."

"சோற்றுப்பானையும், குழம்புச்சட்டியும் காலியானது வந்த விருந்தினர்களுக்கு தெரியாது."

ஆனால்! "பாறுவதம், கணபதி இருவர் வயிறும் மீன் குழம்பு வாசத்துடன் காலியாகவே இருந்தன."

- ஜீவநதி மாசி - 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணின் மீது நேசம்

அதிகாலை 5.45 மணிக்கு கே.கே.எஸ் சீமெந்து தொழிற்சாலையின் சங்கு (சைலென்சர்) ஊதும் சத்தம் கேட்டு தூக்கத்தில் இருந்து விழித்த போதும்! படுக்கையை விட்டு எழும்ப விருப்பில்லாது மறுபக்கம் திரும்பி படுத்தான். மீண்டும் 6 மணிக்கு இரண்டாவது சங்கும் ஊதும் சத்தம் கேட்டு எழும்பிய போது! அம்மா அதிகாலை தூக்கத்திலிருந்து எழும்பி விட்டா என்பதை வீட்டு விறாந்தையில் ஒளிரும் லைற்றின் வெளிச்சம் எனது அறைக் கதவின் திறப்பு துவாரத்தின் ஊடாக தெரியப்படுத்தியது.

"மனிதர்கள் தம் கடமையை ஒழுங்காக செய்ய தவறும் கால கட்டத்தில் இந்த சைலெஞ்சர் மட்டும் குறித்த நேரத்தில் சங்கொலிக்கும் கடமையை செய்ய தவறுவதுமில்லை, மறப்பதுமில்லை."

எம் மூதாதையர் அந்த காலத்தில் சூரியனை பார்த்து நேரத்தை கணிப்பது போல, இந்த சங்கொலியை கேட்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தில் இருக்கும் அத்தனை மக்களும் அந்த நேர நேரத்தை தெரிந்து கொண்டு தமது சோலிகளை பார்ப்பார்கள்.

அம்மா அதிகாலை 5 மணிக்கே தினமும் நித்திரை விட்டு எழும்பும் பழக்கத்தை உடையவர். எழும்பியதும் தேநீர் கலந்து அப்பாவுக்கு கொடுத்து அவரை வேலைக்கு அனுப்பி விட்டு தம்பி காலையில் படிப்பதற்காக அவனை எழுப்பும் சத்தமும் எனக்கு கேட்டது.

அம்மாக்கு தான் படிக்கவில்லை. அப்பாவும் எட்டாம் வகுப்பின் பின் கல்வி கற்கவில்லை என்ற கவலை, அவள் மனதில் உறுத்திய படியே இருக்கும்.அவள் பலமுறை எமக்கு கூறுவாள். எனது பிள்ளைகள் நன்றாக படித்து அத்தனை பேரும் அப்பா மாதிரி கஷ்டப்பட்டு வேலை செய்யாது, உத்தியோகம் பார்க்க வேணும்.அதை பார்த்து அப்பாவும், தானும் சந்தோசப்பட வேணும் என்றும் சொல்லுவாள்.

“அம்மாவுக்கு கையெழுத்து போட தெரியாது.”

சங்கக்கடை, விதானை வீடு, தபாற்கந்தோர், வைத்திய சாலை போன்ற சகல இடங்களிலும் கை நாட்டுத்தான். மற்றைய பெண்கள் கையொப்பம் இடும்போது! அம்மா மாட்டும் ஏன் இப்படி?

அம்மாவின் பெற்றோர் மிகவும் வறியவர்கள். அவர்கள் குடும்ப கஷ்டம் காரணமாக அம்மாவை பாடசாலை அனுப்ப வில்லை. மழைக்கு கூட அம்மா பாடசாலை கூரையின் கீழ் ஒதுங்கவில்லை.மேலும் அப்பா சீமேந்து தொழிற்சாலையில் தூசிக்குள் நின்று வேலை பார்ப்பவர். அதாவது கிளிங்கர் கற்களை பவுடராக அரைக்கும் மில்லில் வேலை பார்ப்பவர்.

அந்த மில் நான்கு பக்கமும் சுவரால் சூழப்பட்டிருக்கும். அதற்குள் உள்ள மில் என்று சொல்லப்படுகின்ற கிளிங்கர் கற்களை அரைத்து பவுடராக்கும் இரண்டு பாரிய மெசின்கள் உண்டு.மேலால் பெல்டில் வந்து சேரும் களி மண்ணை யும்,நிலத்தில் இருந்து தோண்டி எடுத்த சுண்ணாம்புக்கல்லை ஒன்றுசேர அரைத்து சீமெந்து ஆக்கும் மெசினே அவைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மெசின் கிளிங்கர் கற்களை அரைக்கும் போது! பாரிய சத்தத்துடன் வேலைசெய்யும்.அதே நேரம் ஒரே தூசி மண்டல மாகவே அந்த மில் காணாப்படும். அதற்குள் நின்று வேலை பார்ப்பவர்கள் "அத்தனை தூசிகளையும் சுவாசித்து விரைவில் நுரை ஈரல் நோய்க்கு ஆளாகுகிறார்கள்."

அப்பா வேலையால் வந்து இரவு தூங்கும் போது! தொண்டை அடைத்து இருமிய படியே இருப்பார். இதனை பார்க்க அம்மாவுக்கு பொறுக்க முடியாமல் இருக்கும். அம்மாவின் மனசு தானாகவே அழத்தொடங்கி விடும். அதுதான் எம் தமிழ் பெண்களின் பண்பாட்டு சிறப்பு என படித்ததுண்டு.ஆனால் அதை என் அம்மாவில் நேரிடையாக காண முடிகிறது.

அன்று புதன் கிழமை.அப்பாவுக்கு ஓய்வுநாள். எங்கள் ஒட்டு மொத்த குடும்பமும் மதிய உணவை முடித்த பின்னர், நான் எனது அறையில் இருந்து அந்த மாத துக்ளக் சஞ்சிகை படித்துக்கொண்டிருந்தேன்.அம்மா என்னிடம் வந்து ஸ்ராலின், அப்பா உன்னுடன் பேசணுமாம். போய் என்ன என கேள் என கூறி அந்த இடத்தை விட்டு குசினிக்குள் சென்றுவிட்டாள்.

நான் அப்பாவிடம் சென்று என்னப்பா? என்றேன். அவர் ஸ்ராலின் உதில் இரு எனக்கூறி, அம்மாவையும் கூப்பிட்டார். அம்மா குசினிக்குள் இருந்து தனது கைகளை சேலைத் தலைப்பில் துடைத்தவாறு வந்து என்னங்கோ? என்றாள். அவளையும் இருக்கச்சொல்லிவிட்டு, என் முகத்தையே சிறிது நேரம் பார்த்தபடி இருந்தார்.

என் பெற்றோருக்கு நான்தான் மூத்த பிள்ளை, இன்னும் இரு தங்கைகளும்,கடைசியாக ஒரு தம்பியும் இருக்கிறார்கள். எல்லோரும் படித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

அண்மையிலேயே நான் மெடிக்கல் கொலிச் முடித்து டாக்டர் பட்டம் பெற்றேன். முதல் தர சித்தி அடைந்த எனக்கு வேலையும் தேடியலையாது என்னைத்தேடி வந்தது. இன்னும் இரு மாதங்களின் பின் யாழ் போதனா வைத்தியசாலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரம்பியல் பகுதியில் டாக்டராக கடமையேற்க இருக்கிறேன்.

ஆனால் அப்பாவின் மனதில் வேறு பெரிய பெரிய திட்டங்கள் இருந்தது. “ஸ்ராலின் எனது மனதில் ஆசைகள், எதிர்ப்புக்களை தேக்கி வைத்தபடிதான் உன்னை இவ்வளவு கஷ்டத்தை சுமந்தபடி டாக்டருக்கு படிக்க வைத்தனான்.”

உனது அறிவு, திறமைக்கு நீ வெளிநாடு சென்றால் நல்லா முன்னேறி விடுவாய். நீ லண்டன், ஜேர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளில் வேலை செய்தால்தான் எங்களுக்கும் பெருமை, தலையில் சுமந்துள்ள சுமைகளையும் இறைக்கி வைக்க முடியும் என்றார்.

“அவன், தகப்பன் இப்படியான மன எண்ணத்தில் இருப்பார் என சிறிதும் எதிர்பார்க்கவில்லை.”

ஆனால் ஸ்ராலினுக்கோ வெளிநாடு என்றதும் “அவனது மனத்திரையில் பல எண்ணங்கள் அலைபோல முட்டி மோதியது. கொஞ்சமும் எனக்கு விருப்பமில்லாத வெளி நாட்டுக்கு போகும் படி அப்பா கட்டாயப்படுத்துகிறார். தன் வாழ்வின் நம்பிக்கைகள் வெடித்து சிதறி தன் எண்ணங்கள் அழிந்து போவதாக உணர்ந்தான். இனம் தெரியா ஏதோ ஒன்று அவன் இதயத்தை பிசைந்து எடுத்தது. எப்படியாவது ஒரு தீர்க்கமான முடிவை நான் எடுத்தே ஆக வேணும். அப்பாவின் விருப்புக்கு ஒத்து போவதா? அல்லது தனது விருப்பை சொல்லி விடவா? என மனதுள் குழம்பினான்.”

அம்மா குடியிருப்பதற்கு சொந்தமாக ஒரு வீடுகட்ட வேணும் என அடிக்கடி சொல்லுவா. அவவின் ஆசையும் எனக்கு ஞாயமாகவே படுகிறது. எம் உறவுகள் அத்தனை பேரும் சொந்த வீட்டில் இருக்கும்போது! நாம் மட்டும் கன காலமாக வாடகை வீட்டில் குடியிருக்கிறோம்.

வாடகை வீட்டில் குடியிருப்பதால் நாம் படும் கஷ்டம் சொல்லவே முடியாது. இதுவரை எத்தனயோ வீடுகள் மாறி விட்டோம். சில வீடுகளில் வீட்டு உரிமையாளர் காலி பண்ணும்படி சொல்லுவார்கள். இல்லையேல் எங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பிற்கு வசதி இல்லையெண்டு நாங்களே காலி செய்ததும் உண்டு. வீட்டு பொறுப்புக்கள் அத்தனையும் அம்மாவின் தலைமேல் அடுக்கடுக்காக குவிஞ்சு இருக்கும்.

"ஒவ்வொரு தடவையும் வீடு மாறும்போது! அவ படும் சிரமத்திற்கு அளவே இல்லை. சிலவேளை வீட்டு வேலை களினால் களைத்து சோர்ந்தே போய் விடுவா."

"இவற்றை விட ஒவ்வொரு தடவையும் வீடு மாறும் போது! வீணாக பணமும் செலவாகும்."

மூத்த சகோதரி பைரவியின் கலியாணம் பற்றி அம்மா இப்பவே அடுக்கு பார்க்க தொடங்கி விட்டாள். அப்பா, அவளுக்கு இன்னும் வயதிருக்கு பிள்ளைக்கு அவசரமில்லை என அம்மாவுக்கு சொன்னபோதும்! பெம்பிளைப்பிள்ளை. போகத்துக்கு பயிர் செய்ய வேணும் என அப்பாவுக்கு கூறி, அப்பாவின் சொல்லை இந்த விடயத்தில் ஏற்று கொள்ள மறுத்து விட்டாள்.

பைரவி,கோட்டல் மனேஜ்மன் சோதனை எழுதிவிட்டு முடிவுக்காக காத்திருக்கிறாள். அவளுக்கு, அவளின் தகுதிக் கேற்ற மாப்பிள்ளை பார்ப்பதென்றால் சும்மாவா? மாப்பிள்ளைக்கு வீடு, சீதனம், கழுத்து நிறைய நகைகள் கொடுக்க வேணுமே! இவற்றுக்கெல்லாம் பணத்திற்கு எங்கே போவது? எப்படி திரட்டுவது?

"அப்பா மாடாய் உழைக்கிறார். சம்பளம், ஓவர்ரைம், போனஸ் என்று கிடைத்தும்; வீட்டு வாடகை, கரண்ட் பில்,எங்கள் படிப்பு செல்வு, வாழ்க்கைச்செலவு,இன்னும் பிற செலவுகள் போன்றனவறிற்கு அவரது சம்பளம் போதாது.

"பற்றாக்குறைக்கு கடனும் வாங்கி தற்போது,அது ஒரு தொகையாக தொக்கி நிற்கிறது. இவற்றை எல்லாம் தீர்ப்பதா னால் எல்லோரையும் போல வெளி நாடுதான் ஒரே வழி."

அப்பா வெளிநாடு போக சொல்லிவிட்டார். தன்னுடன் சீமெந்து ஆலையில் வேலை செய்பவரின் மைத்துனன் வெளி நாடுகளுக்கு ஆட்களை அனுப்பிய படி இருக்கிறார். அவருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பேசியதாகவும்,என்னை கூடிய கெதியில் பயணம் செய்ய ஆயத்தமாகும் படியும் கூறினார்.

"புறப்படும் வேலைகளை அப்பா கவனிக்கிறார். ஆனால் பணத்துக்கு என்ன வழி செய்யப்போகிறார்? என ஸ்ராலின் உள்ளம் பலப்பல எண்ணங்களுடன் குலுங்கியது."

"அப்பா, தனது பென்சன், ஊழியர் சேமலாப நிதி ஆகியவற்றை எடுப்பதற்கு பல வழிகளிலும் அலுவல் பார்த்து விட்டார்."

"என்னை வெளிநாடு அனுப்ப அவர் தன்னையே உருக்கி ஒளிவடிவம் எமக்கு கொடுத்து உருகி போகிறார்."

"ஸ்ராலின், உனது பயணத்திற்கான ஏற்பாடுகளை நான் செய்து கொண்டு இருக்கிறேன். நீ இன்னும் இருபது நாட்களில் பயணமாகலாம்." என கூறினார்.

"வெளிநாடு போய் தனிமையில் திக்கு திசை தெரியாது அலையப்போகிறேன் என கவலைப்பட வேண்டாம். என்னுடன் வேலை செய்பவரின் மகன் வெளிநாட்டில் இருக்கிறான். நீ எயா போட்டில் இறங்கியதும், உன்னை றிஸீவ் பண்ணி தன்னுடன் கூட்டி சென்று மேற்கொண்டு எல்லாவற்றையும் கவனிப்பான் என்றார்."

அப்பா இப்படி கூறியதும் துணிவும், நிம்மதியும் ஏற்பட்டது.ஆனால் அப்பா சிறுத்தை புலியின் பாய்ச்சல் போல மிக வேகமாக காரியம் ஆற்றுகிறார், என் வெளிநாட்டு பயணத்தில்.

பயணத்திற்கு இன்னும் ஒரு கிழமையே பாக்கியுள்ளது. ஸ்ராலின் தனது நண்பர்கள், உறவுகள், தெரிந்தவர்களுக்கு மனம் விருப்பில்லாது ஒப்புக்கு பயணம் கூறி; ஈற்றில் தர்சிகா விடம் விடைபெற வேண்டுமென அவள் வீடு தேடிச் சென்றான்.

அவன் வீட்டின் வெளி கேற்றடியில் நின்று தர்சிகா என அழைத்தான்.அவன் அழைக்கும் சத்தம் கேட்டு தர்சிகாவின் தாய் வெளியில் வந்து யார் தம்பி நீங்கள்? என்ன வேணும் என கேட்டாள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா, என் பெயர் ஸ்ராலின். தர்சிகாவுடன் யூனிவேசிற்றியில் ஒன்றாக படித்தனான். தர்சிகாவுடன் பேச வேணும் என்றான்.

"ஆ அ. நீங்களா அந்த ஸ்ராலின்?" என கேட்டவாறு வாங்கோ தம்பி என உள் அழைத்து சென்று கதிரையில் அமர்த்தி சென்றாள்.

"ஸ்ராலின் வீட்டு ஹாலில் இருப்பதை கண்ட தர்சிகா ஆச்சரியத்தில் தன் புருவத்தை உயர்த்தினாள்."

அவளது புருவம் உயர்ந்தற்கும் காரணமுண்டு. மெடிக்கல் காலேஜில் படிக்கும் போது, அவள் பல தடவை அவனை தனது வீட்டிற்க்கு அழைத்த போதும், அவன் முறைப்படிதான் உன் வீட்டிற்கு வருவேன். அதற்கு முன் வருவது எனக்கு இஸ்டமில்லை என மறுத்து விட்டான்.

"என்ன அதிசயமாக இருக்கிறது? காற்று மாறி அடிச்சிட்டுதா? என மன சந்தோசத்தில் குதூகலித்து கேட்டாள்." தர்சிகா. ஸ்ராலின் சுகமாக இருக்கின்றீர்களா? அவளின் மறு கேள்வி.

"ஏன், நீர் ஒரு டாக்டர். சுகவீனம் என்றால் மருந்து தரப்போறீரா?"

சுகத்துடன் இருந்த படியால்தானே உமது வீடிற்கு வந்திருக்கிறன். அல்லது ஆஸ்ப்பத்திரிக்கு அல்லாவா சென்றிருப்பன். என கிண்டலடித்தான்.

இருங்கோ வாறன். எனக்கூறி உள்ளே சென்றவள் தேனீர், பிஸ்கற்றுடன் வந்து அவனுக்கு கொடுத்து விட்டு அருகில் அமர்ந்தாள்.

தர்சிகா! நான் வெளிநாடு செல்ல இருக்கிறன். எனக்கு அடியோடு நாட்டை விட்டு போக இஸ்டமில்லை. ஆனால் அப்பாவின் வேண்டுகோளை தட்ட முடியவில்லை. அதுதான் உமக்கு சொல்லி விட்டு போகலாம் என்றுதான் வந்தன்.

அவன் கூறிய வார்த்தையை கேட்டதும், "அவள் உள்ளம் புயல் போன்று அமைதியற்று சுழண்டு சுழண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலாவத்தொடங்கியது, இதயம் ஐரோப்பா குளிர்போன்று உறையத் தொடங்கியது,இனம் தெரியாத எதோ ஒன்று மனதை பிசைந்து எடுத்தது, அவனை முதல் முதல் தனது வீட்டில் கண்ணுற்றதும் ஆதவனை கண்ட அல்லி போல மலர்ந்த முகம் தற்பொழுது இறுகி கடினமுற்றது, வார்த்தைகள் தொண்டைக் குழிக்குள் இருந்து வெளிவராது தொண்டை உலர்ந்து போனது, கண்கள் மெல்லியதாக பனிக்க தொடங்கியது."

என்ன தர்சிகா எதுவும் பேசாது நிற்கிறீர்? முகமும் ஒரு மாதிரியாக இருக்கிறது? என அவன் கேட்டான்.

அவள் தளதளத்த குரலில் "ஸ்ராலின் அவசியம் வெளிநாடு போகத்தான் வேணுமா?" என கேட்டாள்.

தர்சிகா! உமக்கு எல்லாம் தெரிந்த விடயம்தான். நான் இங்கிருந்து எனது தலையில் சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக் களை இறக்கி வைக்க முடியாது. வயது போன நேரத்தில் அப்பா படும் கஷ்டம், வேதனைகளை சகிக்க முடியவில்லை. இரவு தூங்கும் போது! இருமி இருமி சளி சளியாக கொட்டுவார். சுவாசிக்க முடியாது மூச்சு முட்டும். அவர் தன்னை மறந்து ஒரு நாளும் தூங்கியதே கிடையாது. தாங்க முடியவில்லை, தர்சிகா.

"நான் கட்டாயம் வெளிநாடு சென்றால்தான் எல்லா பிரச்சனைகளையும் சோல்வ் பண்ணமுடியும்."

"ஏன் முடியாது? நாம் இருவரும் டாக்டர். உங்களுக்கு வேலை கிடைத்தது போல எனக்கும் கிடைக்கும்.நான் தனிப் பிள்ளை. எந்த பொறுப்புகளும் கிடையாது.இருவரும் வேலை செய்தால் சேர்ந்து உங்கள் குடும்ப சுமைகளை படிப்படியாக சோல்வ் பண்ணலாம்.அத்தோடு அப்பாவையும் பென்சன் எடுக்க வைத்து அவருக்கு ஒரு கடையையும் போட்டு குடுக்கலாமே!" என்றாள்.

அவன் அவளை ஒருதரம் நிமிர்ந்து பார்த்து விட்டு, "ஓ! எனக்கு இப்படி ஒரு காதலியா?"

"திருமணம் ஆகுமுன்பே என் குடும்பத்தில் அக்கறை கொண்டு பொறுப்புக்களில் தானும் பங்கு கொள்ள நினைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் மனதை எண்ணி வியந்தான்.மனிதம் செத்த இக்காலத்தில், அவள் உணர்வுக்குள்ளேயே மனிதத்தை கண்ணுற்றான்."

"அவனையறியாது அவள் மீது வைத்திருந்த காதல், நேசம் பனைமரத்தாணி போன்று அவன் இதயத்தில் மேலும் இறுக்கம் கொண்டது."

"கண்ணீர்த்துளிகளின் ஆக்கிரமிப்புக்கு ஆளாகி, உணர்வு மரத்துபோய் கோதையவள் கலங்கி நின்ற வேளை! அவன் அவளது தோழில் கை போட்டு ஆசுவாசப்படுத்திய போது! அவள் அவனை அணைத்தபடி அவன் இதழ்களில், தன் விரிந்த செந்தாமரைப்பூ இதழ்களால் மூன்று முறை முத்தமிட்டு, ஸ்ராலின் என்னை தனிமரமாக தவிக்க விட்டு செல்ல வேண்டாம் என குரலின் தளம்பலுடன், அடிக்குரலில் அவன் காதில் கூறினாள்."

நேரமும் சென்றுவிட்டது. "அவள் தன் உதட்டால் அவன் உதட்டில் முத்தமிட்ட அந்த ஒற்றுதலின் தாக்கம் இன்னும் அவன் இதழ்களில் மீதமிருக்க, அவனோ விடை தெரியா கேள்வியுடன் மனப்பாரத்துடன் அவளிடமிருந்து விடைபெற்றான்."

அவளிடம் விடைபெற்று நேரே வீட்டிற்கு செல்லாது தனது மதிப்புக்கும், மரியாதைக்குமுரிய சயன்ஸ் ஆசிரியர் வேலாயுதம் வீட்டுக்கு சென்று, "சேர் நான் வெளிநாடு செல்ல இருக்கிறேன். அதுதான் உங்களிடம் விடைபெற வந்தேன்" என்றான்.

"அவர் முக மலர்ச்சியுடன் ஸ்ராலின், கொலசிப் ஏதும் கிடைத்துள்ளதா?" என கேட்டார்.

இல்லை சேர். "நான் வேலை செய்ய போகிறேன். எனக்கு போக இஸ்டமில்லை.ஆனால் அப்பாதான் போகும்படி பிடிவாதமாக நிற்கிறார் என்றான்."

ஸ்ராலினின் தன்னிலை விளக்கத்தை கேட்டவரின் இதயத்தில் சுனாமி அடித்து ஓய்ந்து, வெள்ளம் வழிந்தோடியது போன்ற உணர்வு ஏற்பட்டு மறைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் முக மாறுதலை ஸ்டாலின் கவனித்தான். ஆனால் அவனால் எதுவும் பேச முடியவில்லை.

ஸ்டாலின், "ஒரு திறமையான மூளை எமது நாட்டை விட்டு வெளியேறுவது எனக்கு உடன்பாடில்லா விடயம். இந்த நாடு ஒவ்வொரு மாணவனுக்கும் இலவச கல்வி, பாட புத்தகங்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகைப்பணம் என சகலதும் இலவசமாக கொடுத்து அறிவாளி ஆக்கியதும், மூளை சாலிகள் இவற்றை எல்லாம் சிந்தித்து பாராது பட்டங்களுடன் தமது சுயநலத்துக்காக வெளியேறுவது எந்த விதத்தில் ஞாயம்? இது தாய் நாட்டிற்கும், மக்களுக்கும் செய்யும் துரோகமல்லவா? ஒரு நாடு முதலிட்டு விதை விதைக்க, இன்னொரு நாடு சும்மா இருந்து கொண்டு அறுவடை செய்து பயன் அடைகிறதல்லாவா?"

"எமது நாட்டில் டாக்டர்களின் பற்றாக்குறை இன்னும் தீரவில்லை. அதிலும் நரம்பியல் நிபுணர்கள் மிக சொற்ப அளவிலேயே இருக்கிறார்கள். நீயோ நரம்பியல் டாக்டர். அதிலும் உன்னிடம் இரக்க சுபாவம் நிறைய இருக்கு. நீ எமது நாட்டில் சேவை புரிந்தால்" காசில்லா ஏழை எளிய மக்கள் உன்னால் பயன் அடைவார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கு. அவர்களுக்கு நீ சேவை செய்தால்! அந்த மக்கள் உன்னை கடவுளாக எண்ணி கையெடுத்து வணங்குவர். அத்தோடு, இதய பூர்வமாக உன்னை வாழ்த்தவும் செய்வர். அந்த ஏழைகளின் வாழ்த்தில் நீ, உன் குடும்பம் நல்லா வாழ்வீர்கள்."

"ஓகே.நீ போறதாக முடிவு எடுத்து விட்டாய். உன் திறமைக்கு அங்குள்ள வசதி வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்தி மேலும் முன்னேற பார். அங்குள்ள வசதிகள் உமக்கு கெல்ப் பண்ணும்."

"Best of luck" என வாழ்த்தி வழி அனுப்பினார், வேலாயுதம் வாத்தியார்.

"வேலாயுதம் வாத்தியார் கூறிய விமர்சனம் ஸ்ராலினின் அடிமனதை தொட்டு, கூர்மையான ஒரு மன ஓட்டம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணை நேசிக்கும் ஓர் ஆளுமைத்தன்மை நிலை அவனுள் ஊடுருவி நின்றது."

"ஆம். என் தாய் நாடு என் கல்விக்காகவும், வாழ்வுக்காக வும் எவ்வளவோ செய்துள்ளது. தாய் நாடு என் நல்லெதிர்கால வாழ்வுக்காக தந்த டாக்டர் பட்டத்துடன் நான் என் சுயநலம் கருதி வெளிநாடு புறப்பட விரும்பிய போதும்! எவ்வித தடை யும் போடாது, அனுமதியும் கொடுத்தது."

"என்னை டாக்டராக்கிய பங்கு என் அப்பாவை விட எனது தாய் நாட்டிற்கே அதிகம் உண்டு. எனது சேவை என் தாய் நாட்டை தவிர வேறு எந்த பிற நாட்டிற்கும் கிடைக்க கூடாது. அம்மா என்னை ஈன்றத்தில் இருந்து இன்றுவரை என்னை தங்கி நிற்கும் என் மண்ணுக்கு நான் செய்யும் நன்றிக்கடன் இதுதான்."

வீட்டிற்கு வந்த வேளை, எல்லோரும் என் வருகைக்காக சாப்பிடாது காத்து இருந்தனர். பயணத்துக்கு இன்னும் மூன்று நாட்களே இருக்கு. அதுவரை வீட்டில் இருந்து ரெஸ்ட் எடுக்கலமே ஸ்ராலின்,என்றார் அன்புடன் அப்பா.

நேரமாச்சு வாடா சாப்பிட என அம்மா பாசத்துடன் கூப்பிட்டா. நானும்,அப்பாவும் சாப்பிடாமல் அவ எப்படி பசியில் தான் வாடினாலும் சாப்பிடவே மாட்டா.

எனக்கு பிடித்த இனிப்பு பலகாரம் எல்லாம் செய்து வைத்திருந்தா அம்மா. எல்லோரும் ஒன்றாக டைனிங் மேசை யில் அமர்ந்து சாப்பிட்டு கொண்டிருக்கும்போது! எனக்கு மட்டும் உணவு என் தொண்டை குழிக்குக்குள்ளால் இரைப்பைக்கு இறங்க மறுத்தது. என் தொண்டை உலர்ந்து போனது.

"எனக்கு வாத்தியார் கூறிய வார்த்தைகளே என் மனதினுள் மடை திறந்திட்ட வெள்ளம் போல அலை மோதியது. மண்ணின் மீது அளவுகடந்த நேசம் மலை உச்சியிலிருந்து ஊற்றெடுத்து பாயும் அருவி போன்று இதய அறைகளில் பாயத்தொடங்கியது."

அவன் சாப்பிடாது இருப்பதையும், அவன் விழிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு குழந்தைபோன்று ஒருவித ஏக்கம் தென்பட்டதை கவனித்த தாய், அவன் தலையை தடவியபடி, என்னடா இன்று உனக்கு நடந்தது என வினாவினாள்?

தகப்பன் அவனை கவனித்து விட்டு, "ஸ்ராலின் எனக்கு விளங்குகிறது. நீ எம் எல்லோரையும் பிரிந்து உறவுகள் அற்ற தொடர் மலை பிரதேசத்தில் தனிமையில் எப்படி வாழ போகிறாய்? என கவலைப்படுவது புரிகிறது, அதே போல உன் பிரிவும் எம்மை வாட்டத்தான் செய்கிறது. என்ன செய்ய முடியும்? எல்லாம் கொஞ்ச நாளைக்குதான். போக போக எல்லாம் பழகிவிடும். ஜோசியாது இப்ப சாப்பிடு." என்றார்.

"அப்பா! நான் வெளிநாடு போகவில்லை என சொல்ல துடித்தான்.ஆனால் அவனால் உடனடியாக சொல்ல தைரியம் இல்லாது, அவனது தொண்டை கட்டிக்கொண்டது. பாதங்கள் இரண்டும் வேரோடியிருக்க, மனமோ குழப்பத்தில் தவித்தது."

சிறிது நேரத்தின் பின்னர், "அப்பா! நான்... வெளி நாடு போகவில்லை. இங்கேயே இருந்து மக்களுக்கு சேவை செய்ய போறன்." என்றான்.

இதைக்கேட்ட தாய், என்னடா சொல்லுகிறாய்? அவர் இந்த வயதிலும் குடும்பத்துக்கு மாடாய் உழைத்து உழைத்து ஓடாப்போனார். தனது எல்லா பிடிப்பு காசுகளையும் எடுத்து உன்னை அனுப்பும் ஏஜென்சி காரனுக்கும் அரைவாசி பணம் கொடுத்தாயிற்று. இப்ப உப்படி நீ சொன்னால், நாங்கள் என்ன செய்வது? இந்த குமருகளை கொண்டுபோய் நான் எந்த கிணற்றில் தள்ளி விடுவது? எனவாறு தன் தலையில் அடித்து ஒப்பாரி வைத்தாள்."

"இவற்றை எல்லாம் அவதானித்துக்கொண்டிருந்த தகப்பனனின் முகம் சிவந்து, இறுகி கடினமுற்றது."

"சகோதரிகளின் உதடுகள் தன்னிச்சையாக நிசப்தமான ரீங்கார ஓசையில் முணு முணுத்தன."

"ஸ்ராலின், என்ன இது? பயண ஒழுங்கெல்லாம் முடிந்து இன்னும் மூன்று நாளில் பயணமாகும் நேரத்தில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியொரு குண்டை தூக்கி எம் தலையில் போடுகிறாய்?" என்றார் அப்பா.

"அப்பா! அது வந்து...நான் இங்கிருந்து எனது மண்ணுக்கு சேவை செய்ய தீர்மானித்துள்ளேன். என் சேவை எனது மண்ணுக்கே கிடைக்க வேணும் எனவும் விரும்புகிறேன்." என்றான்.

"இதற்காகவா நீ கவலைப்படுகிறாய், நீ அங்கு உழைத்து இங்குதானே பணம் அனுப்ப போகிறாய். நீ அனுப்பும் பணம் இங்கு அந்நிய செலவாணி என்ற வருமானத்தை எம் மண்ணுக்கு ஈட்டி கொடுக்க போகிறது. அது கூட நாட்டிற்கு செய்யும் சேவைதானே!" அதைப்பற்றி நீ ஜோசிக்காதை என்றார் அப்பா.

"அப்பா! நீங்கள் கூறும் அந்த அந்நிய செலவாணியை சாதாரண ஒரு தொழிலாளியால் கூட ஈட்டிக்கொடுக்க முடியும். நானும் படிக்காதவனாக இருந்திருந்தால் நீங்கள் கூறியதை ஏற்றிருப்பன். நான் ஒரு டாக்டர். என் மூளை, சேவை இந்த மண்ணுக்கும், மக்களுக்குமே கிடைக்க வேணும். என் மாற்ற முடியா இலட்சியமும் கூட" என்று கூறி இருக்கையை விட்டு எழுந்தான்.

"உடனே தாய், இதுக்காகவாடா இவ்வளவு கஷ்டபட்டு உன்னை டாக்டருக்கு படிக்க வைத்தனான் என புலம்பினாள்."

"அதே நேரம் அப்பா குறுக்கிட்டு, யார் என்ன சொன்னாலும் தனது முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்ற உறுதியான முடிவுக்கு அவன் வந்து விட்டான். இனி இது பற்றி பேசுவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை என் கவலையுடன் கூறி, நெஞ்சு அடக்க முடியா ஒரு பெரு மூச்செறிந்து அம்மாவை ஆறுதல் படுத்தினார்."

- 1995 வைகாசி வீர கேசரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர சீரழிவு

இரவு 7.30 மணியை தாண்டி விட்டது. மகளின் வரவை எதிர்பார்த்தபடி இரவு சமையலை ஒருகண்ணால் கவனித்தபடி,மறு கண்ணை குசினி யன்னலின் ஊடாக மகள் வருகிறாளா என தூர நோக்கியபடி மன உளைச்சலுடன் தன் வேலையை கவனித்தாள், றீற்றா.

இவள் ஏன் இன்னும் வீட்டுக்கு வரவில்லை? இன்று செவ்வாய்.இஸ்பெசல் கிளாஸ். வழமையாக இஸ்பெசல் கிளாஸ் முடித்து 6.30 மணிக்கு வீட்டுக்கு வந்து விடுவாள். இப்போ ஏழரையும் தாண்டி விட்டது. எங்கே போயிருப்பாள். பள்ளி போகும்போது பிந்தி வருவேன் என எதுவும் கூறவில்லையே!

"என்னங்கோ,என்னங்கோ.பிள்ளை இன்னும் பள்ளிக்கூடத்தால் வரக்காணம். ஒருக்கால் பள்ளிக்கூடம் வரை போய் பாத்துக்கொண்டு வாங்கோ."

"காலை பள்ளிக்கூடம் போகும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிந்தித்தான் வீடு வருவன் எண்டு உனக்கு ஏதும் சொன்னவளே?"

"இல்லை இல்லை எதுவும் எனக்கு பிள்ளை சொல்ல வில்லை."

"நான் எங்கே போய் பார்ப்பது? எனக்கு என்ன இந்த அறுந்த பிறெஞ்சு மொழி தெரியுமே! கண்டறியாத நாட்டுக்கு வந்து நாங்கள் படும் பாடு." எத்தனை தடவை சொன்னனான். நாங்கள் பிரான்ஸ் வரவில்லை எண்டு. எண்ட சொல்லை கேட்டியளே. நீங்கள் காசை அனுப்பினால் நான் பிள்ளைகளை நல்லா பார்த்து,படிப்பித்து, கலியாணமும் கட்டிகுடுப்பன் எண்டு."

"உதுக்குத்தான் சொன்னனான் பிள்ளைகளை கேட்டு கொஞ்சம் கொஞ்சமாக பிறெஞ்சை படி எண்டு. உந்த ரீவியிலை நாசப்போன நாடகங்களை பார்க்கும் நேரம் நிறைய பிறெஞ்சை படித்திருக்கலாம். உனக்கு நான் சொல்லுறது காதில் விழுந்தால் எல்லோ. எல்லாத்துக்கும் என்னைப்போட்டு பிரட்டி எடுக்கிறாய். வேலையில் முறிஞ்சு போட்டு வீட்டை வந்தாலும் என்னை கொஞ்சம் நிம்மதியா இருக்க விடுகிறியோ?

"உதிலை இருந்து புறுபுறுக்காமல் போய் பிள்ளையை பார்த்து கொண்டு வாங்கோ. காலம் கெட்டு கிடக்கு. குமர்ப்பிள்ளை வேறை."

"எங்கே போய் தேடுவது நான்? அவள் கூடிப்படிக்கும் சினேகிதிகள் வீட்டுக்கும் போய் இருக்கலாம். ஆர் வீட்டை எண்டு தேடுவது?"

"கெதியா போங்கோ. நீங்கள் எங்கேயும் போக வேண்டாம். நேரே றித்மாத் பள்ளிக்கூடம் வரை போய் பாருங்கோ."

"அடி ஆத்தை கத்தாதை. மேலும்,கீழும் வெள்ளைக் காரர் இருக்கிறாங்கள். நான் போய் பிள்ளையை பாத்து வாறன்" எனக்கூறி குளிரையும் பொருட்படுத்தாது மகளை தேட புறப்பட்டார், தமியாம்பிள்ளை.

"டிங் டாங், டிங் டாங். ஐயா ஆரோ பெல் அடிக்கினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறெண்டு பார். அம்மா கையிலை வேலையாக இருக்கிறன் என மகன் ஆந்திரேக்கு சொன்னாள் றீற்றா."

வீட்டு முன் கதவை திறந்து கொண்டு மகள் நற்றாசா வரவும் தாய் றீற்றா ஓடிச்சென்று "இவ்வளவு நேரமும் என்னம்மா செய்தனி? உன்னை கன நேரமாகியும் காணாமல் பதறிப்போனன்.அப்பாவை இந்த குளிருக்குள் உன்னை பாத்து வரும்படி அனுப்பினன். வழியில் அவரை நீ காணவில்லையா?"

"இல்லை அம்மா.நான் அப்பாவை காணவில்லை. "

"அது சரி. இவ்வளவு நேரம் எங்கு நிண்டனி?" போகும் போது பிந்தி வருவேன் எண்டு சொல்லிப்போட்டு போய் இருக்கலாமே!"

அவள் இஸ்பெசல் கிளாஸ் என கூறியபடி தனது அறைக்குள் சென்றாள்.

மகளுக்கு பாலை சுட சுட எடுத்து சென்ற றீற்றா பாலை மேசைமீது வைத்து விட்டு மகளின் தலையை தடவினாள். "என்னம்மா தலை இப்படி குளிருது? பள்ளியிலிருந்து தொப்பி போடாமலா வீட்டுக்கு வந்தாய்?" என கேட்டபடி அறையை விட்டு வெளியே வந்தாள்.

நற்றாசா தொடர்ந்து பாடசாலை முடிந்து வீட்டுக்கு பிந்தியே வரத்தொடங்கினாள். வீட்டில் தாய் இது பற்றி கேட்டால், இஸ்பெசல் கிளாஸ்,சிநேகிதிகளுடன் கடைக்கு போனது, அவர்கள் வீட்டிற்கு பள்ளிப்பாடம் படிக்க போனது என சாக்கு போக்கு சொல்லி தாயை நம்ப வைத்து விடுகிறாள்.

மகள் கூடிப்படிக்கும் பிள்ளைகளுடன் சேஉந்து படிப்பது நல்லதுதான் என மகளின் கல்வியில் அக்கறை கொண்டு மகள் கூறும் அத்தனை பொய்களையும் உண்மை யென நம்பி ஏமாந்து விடுகிறாள் அந்த அப்பாவித்தாய்.

வழமை போல அன்றும் செவ்வாய்கிழமை. நற்றாசாவுக்கு இஸ்பெசல் கிளாஸ். தகப்பன் மணி ஆறு முப்பது போல கடைக்கு சென்ற வேளை! மகளுடன் கூட படிக்கும் சோகைலா என்ற பிள்ளையை கண்டு "நீ இஸ்பெசல் கிளாசுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று செல்லவில்லையா?" அம்மா என கேட்டார்.

"போனேன் அங்கிள். கிளாஸ் ஆறு மணிக்கு முடிந்து விட்டது என்றாள்."

அவளுக்கு மெர்சி-நன்றி சொல்லிவிட்டு தான் வாங்க வேண்டிய சாமான்களை வாங்கி வீடுவந்து மனைவி நீற்றா விடம் பிள்ளை பள்ளிக்கூடத்தால் வந்து விட்டாளா?என வினாவினார்.

"அவளோ இல்லை பிள்ளை இன்னும் வரவில்லை என கூறினாள்."

நற்றாசா வீடு வந்ததும் தகப்பன் "ஏனம்மா இவ்வளவு லேற்" என கேட்டார்?

அவளோ வழமையா சொல்லும் பொய்யான "இஸ்பெசல் கிளாஸ்" என கூறினாள்.

"உனக்கோ அல்லது உங்கள் வகுப்பு பிள்ளைகள் அனைவருக்குமோ என கேட்டார்?"

"எல்லோருக்கும் தானப்பா என கூறினாள்."

மகளின் பொய்யான பதில் அவர் மனதில் ஒரு நெருடலை ஏற்படுத்தியது. "எனது செல்ல மகளா இப்படி? என மனதுள் வேதனைப்பட்டார்."

இதன் பின்னர் மகளின் நடத்தைகளை கவனிக்க தொடங்கினார். முன்னரை விட வித்தியாசமாக இருப்பதை உணர்ந்தார். பாடசாலை விட்டு பிந்தி வீடு வருதல், பாடசாலை போக முன்னரும், பள்ளி விட்டு வீடு வந்த பின்னரும் படிப்பு என்ற சாக்கில் தொடர்ந்து கம்பியூட்டர் முன்னாள் அமர்ந்திருக் கிறாள். அதை விட அவளின் கைத்தொலைபேசி கட்டணமும் முன்னரை விட தற்பொழுது அதிகமாகி வருவதையும் தெரிந்து கொண்டு மகள் எதோ "தப்பான வழியில் கால் பதித்து விட்டாள் என்பதை மட்டும் உணர தொடங்கினார்."

இருந்த போதும் சரியான ஆதாரம் இல்லாது செல்ல மகளை இது பற்றி கேட்கவோ அல்லது கண்டனம் செய்யவோ அவர் விரும்பவில்லை.அப்படி கேட்டால் மகளின் பிஞ்சு மனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்டுவிடும் என பயந்தார்.

அவசரம் காட்டாது இன்னும் பொறுமையை கடைப் பிடித்து மகளின் நடவடிக்கையை கூர்மையாக அவதானிக்க தீர்மானித்தார். "மகளின் ஒவ்வாத நடவடக்கையை எண்ணி அனலில் இட்ட புழுபோல வெதும்பினார்."

செல்ல மகள் புதிய இராகம் மீட்க தொடங்கியது பற்றி மனைவியிடம் எடுத்துரைக்க முடியாத நிலையில் இருந்தார். மகள் தன் உணர்ச்சிகளுக்கு இலகுவில் அடிமையாகும் புரியாத வயதுக்கு ஒத்துபோகும் தப்பான வழியை நாடி யாரும் அறியாமல் கால் பதித்து செல்ல ஆரம்பித்து விட்டாள் என்பதை அறிந்தால்; "அவளுக்கு மகளை நினைத்து இரத்த அழுத்தம் மீண்டும் கூடி படுக்கையில் வீழ்ந்து விடுவாள்" என தனக்குள்ளேயே பயந்தார்.

"மனைவிக்கு ஏலவே ஒருதரம் அதி கூடிய இரத்த அழுத்தம் ஏற்பட்டு இரு மாதங்கள் வைத்திய சாலையில் இருந்து பின்னர் வீடு வந்து தற்போது ஒவ்வொரு மாதமும் தவறாது இரத்த அழுத்த பரிசோதனைக்கு சென்று வருவதோடு, மருந்துகளும் பாவிக்கிறாள். அவளது மனத்தை பாதிக்கும் எந்த ஒரு சாதாரண விடயங்களும் தெரிய வராமல் மிக எச்சரிக்கை யாக கவனிக்க வேண்டும் என அவளை பரிசோதனை செய்த டாக்டர் கண்டிப்பாக சொல்லி விட்டார்."

"அன்பான மனையியை பார்ப்பதா அல்லது செல்ல மான மகளை பார்ப்பதா" என முடிவெடுக்க முடியாது சிங்கத்தின் வாயில் அகப்பட்ட அழகிய மான் போல் துடித்தார். தண்ணீரில் உள்ள மீனைப்போல உள் மனதுள் வெந்து வேகினார், அழுதார். செய்வது அறியாது திகைத்து நின்றார்.

"கடவுளே நான் எவருக்கும் என் மனம் அறிய எந்த ஒரு தீங்கும் செய்யவில்லை. எனக்கேன் இந்த கடும் சோதனையை தருகிறாய்?" என கூப்பாடு போட்டார்.

தாய் நாட்டில் எவருக்கும் பிரயோசனமற்ற கடுமை, கொடுமை கொண்ட போரின் தாக்கத்தினால் யாழ் மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லொணா துன்பங்களுக்கு முகம் கொடுத்து வந்த வேளை! இங்கு குளிரில் ஊறி, முதுகு வளைந்து கடும் வேலைசெய்து பயண முகவருக்கு பல லகரங்களை கொட்டிக்கொடுத்து செல்ல மகளையும், மனைவியையும் இந்த நாட்டிற்கு கொண்டு வந்தால்! இங்குள்ள "தனி மனித சுதந்திரத்தை தமக்கு சாத்தியமாக பயன்படுத்தி எமது பிள்ளைகள் எமக்கு ஒவ்வாத பண்பாட்டு சூழலில் தம்மை இணைத்து இந்த நாட்டு சுதந்திர சீரழிவான தீய செயல்களை சக பாடசாலை பிள்ளைகளுடன் இணைந்து கடைப்பிடித்து சீரழிந்து போகிறார்கள்."

"பாடசாலையில் புகைப்பிடித்தல்,காதல் வயப்படல், பல பேர் மத்தியில் எவ்வித கூச்ச உணர்வற்று கட்டியணைத்து முத்தம் பரிமாறல், சில தருணத்தில் பாடசாலையிலேயே ஆணுறை மூலம் தகாத உறவும் வைத்து கொள்ளுகிறார்கள்."

பதினெண் வயதின் பின் இப்படியான இளம் சமுதாய சீரழிவுகளை தனி மனித மேம்பாட்டு சுதந்திரமென இங்குள்ள "சட்டம் உத்தியோக பூர்வமாக அனுமதி கொடுப்பதாலும்" தமது பிள்ளைகளை கட்டுப்படுத்தும் கடப்பாட்டை மேலே சொன்ன சட்டங்கள் தடுப்பது மட்டுமன்றி, பல பெற்றோரை பிள்ளைகளின் முறைப்பாட்டின் பெயரில் இங்குள்ள காவல் துறை கைது செய்து தண்டனையும் வழங்கியுள்ளது. இதனால் பெற்றவர்கள் ஒரு எல்லை மீறி தமது பிள்ளைகளை வெருட்டவோ, கட்டுப்படுத்தவோ முடியாது இரண்டும் கெட்ட நிலையில் தவிக்கிறார்கள்.

தமியாம்பிள்ளை தன் மனைவி நீற்றாவிடம் எடி யாத்தை, உனக்கு ஒண்டு சொல்லுறன் கவனமாக கேள். இவள் பிள்ளை நற்றாசா படித்தது போதும் எண்டு நான் நினைக்கிறன். நீயும் வருத்தக்காரி. அவள் உனக்கு வீட்டில் கூட மாட உதவி யாக இருக்கட்டும். தொடர்ந்து படிக்க வேண்டாம். பெண் பிள்ளை படித்து என்னத்தை செய்ய போகுது? நாளை ஒருத் தனுக்கு கழுத்தை நீட்டி அவனோடேயே சென்றுவிடுவாள் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன சொல்லுகிறியள். நல்லா படிக்கும் பிள்ளையை ஏன் இடையில் குழப்ப முனைகிறீர்கள்? பிள்ளை படிக்கிற அளவு படிக்கட்டும். கடன் பட்டாவது படிப்பிக்க வேணும் எண்டு நீங்கள்தானே அடிக்கடி சொல்லுவீர்கள். அவள் படிப்பு சம்மந்தமாக எதாவது கேட்டால் உடனே வாங்கியும் குடுத்து விடுகிறீர்கள்.இப்ப என்ன நடந்தது உங்களுக்கு?" என கேட்டாள்.

"இல்லை றீற்றா. அவளுக்கு இந்த நாட்டு பழக்க வழக்கம், நடைமுறைகள் எல்லாம் புரிந்து கொள்ளும் பருவம் வந்து விட்டது. அவள் இங்குள்ள பிள்ளைகளுடன் கலந்து வாழ பழகி விட்டாள். உனக்கும் இந்த நாட்டு பருவ வயது பிள்ளை களின் நடத்தைகள், தட்டி கேட்க ஆளில்லாத தன்மையில் ஒழுங்கான வழிநடத்தலற்று சீரழிவு நிலமைகள் நன்கு தெரியும். அதுதான் இப்படி முன் எச்சரிக்கையாக நாம் இருப்போம்." என்கிறன்.

"எங்கடை பிள்ளை அப்படி பட்டதே? வீடு, பள்ளிக் கூடம்,படிப்பு என இருக்கும் குழந்தை." என மகளின் பருவ வயது மாற்றத்தின் தற்போதைய செயற்பாடு அறியாது, மகளின் மீதுள்ள அதிதீத நம்பிக்கையை வெளிப்படுத்தினாள் அப்பாவித்தாய்."

"தன்மீது அப்பாவுக்கு சந்தேகம் தொட்டு விட்டது என்பதை நற்றாசா உணர தொடங்கினாள். பாடசாலை முடிந்து வீட்டுக்கு பிந்தி வரும் வேளைகளில் அவரது கேள்விகளும், தான் கணணி முன் படிப்பு சம்மந்தமான வேலைகளில் இருந்தாலும் அடிக்கடி றூமுக்கு வந்து நோட்டம் விடுவதையும் அவள் தெரிந்து கொண்டாள்."

இப்படி அப்பாவின் சந்தேகப்பார்வையுடன் வீட்டில் நிம்மதி அற்று இருப்பதை விட "தன்னை நன்கு புரிந்து கொண்ட இணையத்தள காதலனுடன் ஓடிப்போய் தனிமையில் வாழ்வதே சிறப்பு" என சிந்திக்க தொடங்கினாள். தன்மீது தன் அப்பாவுக்கு சந்தேகம் வந்து விட்டது என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியை தனது இணையத்தள காதலனுக்கு இணைய மூலம் தெரியப்படுத்தினாள் நற்றாசா.

அவனும் நீ பாடசாலை செல்வதுபோல வெளிக்கிட்ட படி உன்னிடம் இருக்கும் நகைகளையும் எடுத்துக்கொண்டு சீனா ரவுனடிக்கு வா. ஆனால் உடுப்புகள் எடுத்துவர முயற்சிக் காதை. பிடிபட்டு விடுவாய். நான் அங்கு உனக்காக காரில் காத்திருப்பன் என ஆலோசனை கூறினான்.

"காதலனுடன் ஓடி போவதா அல்லது இன்னும் கொஞ்சம் பொறுமையாக வீட்டில் இருக்கலாமா?" என்ற குழப்பத்தில் அன்று இரவு முழுவதும் தூக்கமற்று முடிவு எடுக்க முடியாது தவித்தாள். தான் வீட்டை விட்டு வெளியேறினால் தாயின் நிலைபற்றி சிந்தித்தாள். குடும்பத்துக்கு தானே ஒரே ஒரு செல்ல மகள்.தன்மீது அளவற்ற பாசமும், நம்பிக்கையும் கொண்டுள்ள அம்மா என் பிரிவை தாங்க மாட்டாள். என்னை காணாது விட்டால் அவளுக்கு பழையபடி இரத்த கொதிப்பு வந்து விடுவதோடு, சாப்பிடாமலே பட்டினி இருப்பாள். அம்மா பாவம். இப்படி பலவாறாக சிந்தனை ஓட்டத்தில் சிக்குண்டு தவித்தாள்.

இருந்தாலும் தனக்கு தற்போது "18 வயது நடக்கிறது. தான் மேயர் பொண்ணு. இங்குள்ள அரசியல் சட்டமும் நான் திருமணம் செய்ய அல்லது ஒரு ஆண் நண்பனை தேட, அவனுடன் ஒரே வீட்டில் கூடி இருக்க தடை போடாது எம்மை ஆதரித்து நிற்கும்.எமக்கு ஒரு வேலை கிடைக்கும் வரை எம் வாழ்வாதரத்துக்கான வீடு, உணவு, உடை, சுகாதாரம் போன்றனவற்றிற்கு உதவி நிற்கும்."எனவே எமது புதிய வாழ்க்கையை கொண்டு ஓடுவதற்கு எந்தவித பிரச்சனையும் இல்லை.

"ஈற்றில் அம்மாவை நினைத்தால்! தனது இனிய காதலை துறக்கவேண்டி வரலாம். எனவே காதலனோடு போவதே சிறந்தது என்ற முடிவுக்கு வந்தாள்."

"மறுநாள் காலை பாடசாலை சென்ற நற்றாசா இரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டு மணி கடந்தும் வீடு திரும்பவில்லை."

"மகள் வீடு திரும்பாததை நினைத்து பெற்ற உள்ளம் தவியாய் தவித்தது. அழுதாள், புலம்பினாள், ஒப்பாரி வைத்தாள். எண்ரை செல்லத்துக்கு என்ன நடந்ததோ? என புருஷனை உலுக்கி எடுத்தாள். காவல் துறையில் முறைப்பாடு செய்யும்படி சத்தம் போட்டாள். போங்கோ, போங்கோ. நான் கத்துறன். பிடிச்ச பிள்ளையார் மாதிரி இருக்கிறியள்."

தமியாம்பிள்ளை மிக அமைதியாக "மகள் ஆருடன் போய் இருப்பாள்" என்பதை நன்கு தெரிந்தவராக அடி ஆத்தை பதட்டப்படாதை. நான் பொலிசுக்கு போறான். அதுக்கு முதல் பிள்ளையின் சிநேகிதி சோகைலா வீட்டுக்கு ஒருக்கால் டெலிபோன் எடுத்து பிள்ளையை கண்டனீரா? என கேட்பம். என்டு மனைவியை ஆறுதல் படுத்தினார்.

"உடனே எடுங்கோ என அவள் கூறியபடி தொலைபேசி மேசைக்கருகிலேயே ஆதங்கத்துடன் நின்றாள்."

"சோகைலாவுக்கு அவர் தொலைபேசி எடுத்து முதல் சம்பிரதாயப்படி வணக்கம் கூறி, நலம் விசாரித்தபோது! அப்பிள்ளை சோகைலாவும் வணக்கம் கூறி "ஏன் அங்கிள் இன்று நற்றாசா பாடசாலை வரவில்லை?" என கேட்டாள்.

"அவளது கேள்விக்கு விடை ஏற்கனவே அவருக்கு தெரிந்திருந்தாலும், அவரை ஒரு தடவை அவளது கேள்வி ஆட வைத்தது."

"எதுவும் அவளுக்கு காட்டிக்கொள்ளாது, "நற்றாசா இனி பாடசாலை வரமாட்டாள்." என்பதை உனக்கு தெரிவிக்கவே தொலைபேசி எடுத்தேன் என ஒரு பொய் கூறி அழைப்பை துண்டித்தார்.

"அவர் பேசி முடித்ததும் அவர் மனைவி றீற்றா என்ன சோகைலா சொன்னவள் என கேட்டாள்?"

"அவர் எதுவும் பேசாது அமைதி காத்தார்."

"என்னங்கோ சொல்லுங்கோ. எண்ட செல்லத்துக்கு என்ன நடந்தது? கூட்டாளிப்பெட்டை என்ன சொன்னவள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையை கண்டவளாமோ?" என அவரை நச்சரித்தாள்.

அதே நேரம் அவர்கள் வீட்டு தொலைபேசி மணி அலறியது. அவர் தொலைபேசி அழைப்பில் மறு முனையில் யார் இருக்கிறார் என நம்பரை பார்த்த போது! அது மகளின் கைத்தொலைபேசி இலக்கம் என்பதை தெரிந்து கொண்டு அதை எடுக்காது தொடர்ந்து அடிக்க விட்டார். ஆனால் மணி தொடர்ந்து அடித்தபடியாலும், மனைவியின் வற்புறுத்தலா லும் தொலைபேசியை தூக்கி எதுவும் பேசாது நின்றார். சிறிது தாமதத்தின் பின்னர் கலோ என்றார்.

மறுமுனையில் "அப்பா நற்றாசா பேசுறன்.என்னை தேட வேண்டாம்.நான் என் மனதுக்கு பிடித்தவருடன் வந்து விட்டன். கவலைப்பட வேண்டாம் என அம்மா வுக்கு சொல்லுங்கோ என தள தளத்த குரலில் கூறி,கம்பியூட்டரில் எனது பைலை ஓப்பிண் பண்ணி 581955 என்ற இலக்கத்தை குடுத்து திறந்து பாருங்கோ.விபரமாக எல்லாம் அறிந்து கொள்ளுவீர்கள் என அழுதபடி தொலைபேசியை துண்டித்தாள்.

- வைகாசி 14. அக்கினிக்குஞ்சு இணையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பொலிகை ஜெயாவின் சிறுகதைகள் நூலின் பிரசவம்**
**புலம்பெயர்தேசத்தின் புதிய விதை!**

தமிழர் தம் புலம்பெயர் வாழ்வு என்பது இதுவரை எம்மினம் சந்தித்திருக்காத நவீன அனுபவங்களைக் கடந்து, முன்னேறி வருகிறது.
மெதுவாக! மெது மெதுவாக வெற்றிகளின் கனிகளைச் சுவைப்பதற்காகவன்றி விதைப்பதற் காகவே அறுவடைக் கத்தியைத் தீட்டிக் கொள்கிறது இந்தப் புலம்பெயர் சமூகம்.
பத்திரிகைகளை அலங்கரித்த பத்துச் சிறுகதைகள் மொத்தமாக நூல்வடிவில் என்ன பேசுகிறது?

*புலம்பெயர்ந்து தாய்நிலம் காணா ஏக்கத்தின் கண்ணீரை இறக்கிச் சொல்கிறது!
*அவமானங்களைத் தரும் பணியிட வலிகள் அழுகின்றன.
*குரல்வளைக்கு வேலை வழங்கா மொழியின் மௌனங்களாய் உடைகிறது.
*இணையப்பரப்பில் இடம்மாறித் தடம்மாறும் இளையோரின் பாடுகளாய் விரிகிறது.
*குலம் பிரிக்கப்பட்ட இனத்தின் அன்றாட வாழ்வின் வேதனைகளைப் பாடுகிறது.
*தேசக் கல்வியை நேசங்களுக்கே வரங்களாக்கும் மனச்சாட்சிகள்.

இவை மட்டுமன்றி இன்னும் பல்வேறு கோணங் களின் வாசிப்பு அனுபவத்திற்கு தீனியிடும் வண்ணம் இவர் கதைகள் காதலையும் பேசுகின்றன. கால் நூற்றாண்டின் இலக்கியப் பரப்பில் சகல ஊடகங் களிலும் சமூக முன்னேற்றக் கருத்துக்களையும் முயன்று முன்னிறுத்திச் செயற்பட்டு வந்த பொலிகை ஜெயா அவர்கள் புலம்பெயர் இலக்கியத்திற்கு புது இரத்தம் பாய்ச்ச தனது சிறுகதை நூலுடன் புறப்பட்டு வருகிறார். வாருங்கள் வாசகர்களே! ஒரு தமிழ் படைப்பையும் படைப்பாளியையும் வருக வருகவென வரவேற்போம்.

**- கல்லாறு சதீஷ்**

9789554676404

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org